வ. உ. சி. மாவட்டத்தில் கல்கி – II

KALKI 1.11.87 ரூ. 2.

கல்கி



துடைப்பட்டுக் கிடக்கும் தமிழக முன்னேற்றம்!

அழகோ அழகு ஃப்ரெஸ்கா
அற்புத நறுமணம் ஃப்ரெஸ்கா



கோத்ரெஜ் அறிமுகப்
படுத்துகிறது ஃப்ரெஸ்கா—
அற்புதமான சோப்.

ஃப்ரெஸ்கா—நிறைந்த சுகந்தம்,
நிகரில்லா நறுமண சோப்.

வளமான நுரை—தந்திடும்
வந்திடும் அதிக நாட்களுக்கு
ஃப்ரெஸ்கா சோப்.

அடக்கமான விலையிலே
அற்புதமான சோப் ஃப்ரெஸ்கா.



அழகான அற்புதமான சோப் வழங்குவோர் கோத்ரெஜ்

Enterprise/GS/61R TmC.

அமைதிக்காகப் பல வீர மரணங்கள்!

கடந்த அக்டோபர் 8 ஆம் தேதி...

''அச்சச்சன்... அச்சச்சன்...''

திடீரென்று பேரன் அபிஷேக்கின் மழலைக் குரல் வாசலில் கேட்கவே ஓடிப் போய்ப் பார்க்கிறார் பி. பி. நம்பியார்.

பேரனுக்குப்பின்னாலேயேமகள் ஷோபா, மருமகன் சுதாகர்!

இந்திய டாங்குப் படையின் அறுபத்தைந்தாவது பிரிவில் கேப்டனாகப் பணியாற்றும் சுதாகர், கடந்த நான்கு மாதங்களுக்கு முன்புதான் ஜம்முவிலிருந்து ஜான்ஸிக்கு மாற்றப்பட்டிருந்தார். உடனே குவார்ட்டர்ஸ் கிடைக்காததால், ஷோபாவும், குழந்தையும் சுமார் ஒரு மாத காலம் சென்னையிலுள்ள நம்பியார் வீட்டில் தங்கியிருந்து விட்டுக் கடந்த ஆகஸ்டில் தான் ஜான்ஸிக்குச் சென்று செட்டில் ஆனார்கள்.

அதற்குள் என்னவாயிற்று? ஆச்சரியப்பட்ட நம்பியார் மருமகனிடம் வாய்விட்டே கேட்கிறார், ''வாங்க மாப்பிள்ளை... என்ன இப்படி திடீர்னு?''

''என்ன செய்யறது மாமா? திடீர்னு தானே வரச் சொல்றாங்க!'' என்கிறார் சுதாகர் சிரித்துக் கொண்டே.

அன்றே சென்னையிலுள்ள மேலதிகாரிகளைத் தொடர்பு கொண்டபோது, அடுத்த நாளே இலங்கைக்குச் செல்ல உத்தரவு போடுகிறார்கள். மனைவி, குழந்தை, மாமனார்... அனைவரிடமும் விடைபெற்றுக் கொண்டு புறப்படுகிறார் சுதாகர்.

போகும்போது, ''என்னோட கூலிங் கிளாஸ் சரியில்லை; ரிப்பேராயிடுச்சு. சரி பண்ணி வையுங்க. முடிஞ்சா மேஜர் சுவுல் வரும்போது கொடுத்தனுப்புங்க... இல்லேன்னா நானே வந்து எடுத்துக்கிறேன்...!'' என்று சொல்லிவிட்டுச் செல்கிறார் சுதாகர்.

அக்டோபர் 12 ஆம் தேதி......

திரிகோணமலையிலிருந்து போன், சுதாகர்தான்! ''கவலைப்படாதீங்க. நான் நல்லாயிருக்கேன். சீக்கிரம் வந்திடுவேன்!'' என்கிறார் ஷோபாவிடம்.

அக்டோபர் 18 ஆம் தேதி இரவு பதினொரு மணி. அலறும் போனை நம்பியார் எடுத்தபோது, அது இலங்கையிலிருந்து என்று தெரிந்ததுமே, மகளைக் கூப்பிட்டு, ''ஷோபா உனக்குத்தான்...'' என்கிறார்.

கணவனோடு பேசப் போகிற மகிழ்ச்சியில் போனை வாங்கிப் பேசிய ஷோபா உடனே, ''அப்பா, உங்களைத்தான் கேட்கிறார்கள்...'' என்று மறுபடியும் நம்பியாரிடம் போனைக் கொடுக்கிறார்.

வியப்போடு போனை வாங்கிய நம்பியாரிடம், விடுதலைப் புலிகளோடு நடத்திய போரில் அன்று காலை காப்டன் சுதாகர் வீரமரணம் அடைந்த செய்தி பக்குவமாக எடுத்துச் சொல்லப்படுகிறது. மறுநாளே சுதாகரின் உடல் சென்னைக்குக் கொண்டு வரப்பட்டு, முழு ராணுவ மரியாதைகளோடு தகனம் செய்யப்படும் என்பதும் சொல்லப்படுகிறது.

இந்த இடிச் செய்தியை நம்பியார் ஒருவாறு தாங்கிக் கொண்டாலும் ஷோபாவால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. குழந்தை அபிஷேக்குக்கு எதற்காக அம்மா அழுகிறார் என்பது இன்னமும் புரியவேயில்லை!

சரி செய்யப்பட்ட கூலிங் கிளாஸ் இன்னமும் இங்கே சுதாகருக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது.

இலங்கையில் அமைதி காக்கச் சென்று வீரமரணமடைந்த நூற்றுக்கணக்கான இந்திய வீரர்களுக்கும் இருக்கும் 'காத்திருப்பது போல் யார் யார் காத்திருக்கிறார்களோ! என்னென்ன காத்துக் கிடக்கின்றனவோ!

— கௌசல்யா




* கேப்டன் சுதாகர், தமது இளம் மனைவி ஷோபாவுடன்......

* யாழ்ப்பாணத்தில் நமது வீரர்கள்......





• தூத்துக்குடி துறைமுகம்





• துறைமுகத்திற்குள் கப்பல்கள் நுழையும் முகத்துவாரம் இதுதான்......

தடைப் பட்டுக் கிடக்கும் தமிழக முன்னேற்றம்!

(தூத்துக்குடி துறைமுகத்தை ஆழப்படுத்துவதிலும், நூறாண்டுகளாகப் பேசப்பட்டு வரும் சேது சமுத்திரத் திட்டம் நிறைவேற்றப்படுவதிலும்தான் தமிழகத்தின் எதிர்கால முன்னேற்றமே இருக்கிறது என்கிறது இந்தக் கட்டுரை......)


இந்தியாவிலுள்ள பத்து பெரிய துறைமுகங்களில் ஒன்றான தூத்துக்குடி துறைமுகத்திற்கு மட்டும் ஒரு தனிச் சிறப்பு உண்டு. மற்ற துறைமுகங்களிலெல்லாம் புயல் காலங்களில் கப்பல்களை நங்கூரம் பாய்ச்சி நிறுத்திச் சரக்குகளை ஏற்றுவதும் இறக்குவதும் கஷ்டம். ஆனால் தூத்துக்குடி துறைமுகத்தில் அந்தப் பிரச்னையே இல்லை. கடந்த இருநூறு வருஷங்களின் சரித்திரத்தை எடுத்துக் கொண்டு பார்த்தாலும் தூத்துக்குடி புயலால் பாதிக்கப்பட்டதே இல்லை. அதனால் எந்தப் பருவத்திலும் கப்பல்களை நங்கூரமிடுவதில் பிரச்னை இல்லை.

அதே மாதிரி, பருவ கால மாறுதல்களால் சென்னை போன்ற துறைமுகங்களில் கடல் நீரின் மட்டம் சுமார் ஆறேழு அடிகள் வரை உயரவோ அல்லது தாழவோ செய்யும். கல்கத்தா துறைமுகத்திலோ இந்த ஏற்றத் தாழ்வு ஏராளமாக இருக்கும். ஆனால் தூத்துக்குடியிலோ சுமார் இரண்டு மூன்று அடிகள்தான் இந்த ஏற்றத் தாழ்வுகள் இருக்கும். இந்தக் காரணங்களால்தான் தூத்துக்குடி துறைமுகத்தை 'எல்லாப் பருவ காலங்களுக்கும் ஏற்ற துறைமுகம்' (All weather Port) என்று அனைவரும் சிலாகிக்கிறார்கள்.

இவற்றோடு இன்னொரு பெரிய பிளஸ் பாயிண்டும் தூத்துக்குடி துறைமுகத்திற்கு உண்டு. கடலுக்கு அடியிலுள்ள நீரோட்டம் காரணமாக மற்ற துறைமுகங்களின் முகத்துவாரங்கள் அடிக்கடி மணலால் மூடப்பட்டுக் கொண்டே வரும். அதனால் கப்பல் போக்குவரத்து பாதிக்கப்படும் என்பதால், அவ்வப்போது அந்த மணலை அகற்றுவதற்காகச் சில துறைமுகங்கள் தங்கள் வருமானத்தின் முக்கால் பகுதியைக் கூடச் செலவிட வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இந்தச் செலவு தூத்துக்குடி துறைமுகத்திற்கு இல்லை. காரணம், இது பூமத்திய ரேகைக்கு வெகு தொலைவில் இருப்பதாலும் கடலின் அடிப்பகுதி பாறைகளைக் கொண்டதாக இருப்பதாலும் கடல் அடிவார நீரோட்

டத்தின் வீச்சு இங்கு சிறிதளவும் இல்லை என்பதுதான்.

இப்படிப்பட்ட பல தனிச் சிறப்புக்களைக் கொண்ட தூத்துக்குடி துறைமுக வளர்ச்சியில்தான் இன்றைய அரசு அவ்வளவாக அக்கறை காட்டவில்லை என்பது கண்டனத்துக்குரிய விஷயம். கடந்த 1842 இல் கிழக்கிந்தியக் கம்பெனிக்காரர்கள் தூத்துக்குடியில் ஒரு கலங்கரை விளக்கை நிர்மா



• துறைமுகம் — முகத்துவாரத்திலிருந்து பார்க்கும் போது......



ணித்த போதே இந்தத் துறைமுகத்தின் அபிவிருத்திக்கு அடிக்கல் நாட்டப்பட்டு விட்டதென்றாலும், இந்தியாவின் பத்தாவது பெரிய துறைமுகமாகத் தூத்துக்குடி அறிவிக்கப்பட்டது கடந்த 1974 இல் தான்! இடையில் ஏன் இத்தனை மந்த கதி? இதன் இன்றைய வளர்ச்சியில் அரசு காட்டும் அக்கறையின்மையைப் பார்ப்பதற்கு முன்பு, அன்றைய மந்தகதியைப் பார்ப்போம்.

சுதந்திரத்திற்கு முந்திய காலத்திலேயே, அகில உலக அளவில் துறைமுகக் கட்டுமானப் பணியில் பிரசித்தி பெற்றிருந்த ஆங்கிலேயரான சர் ராபர்ட் பிரிஸ்டோ என்பவர், 'ஒரு லட்சம் ரூபாய் கொடுத்தால் போதும்; தூத்துக்குடி துறைமுகத்தை நிர்மாணித்துத் தருகிறேன்' என்று சொல்லியிருக்கிறார். அப்போது யாரும் அவர் சொன்னதைக் காதில் போட்டுக் கொள்ளவே இல்லை. இந்நிலையில் அவருக்குக் கொச்சின் துறைமுகத்தை நிர்மாணிக்க அழைப்பு வரவே அங்கு சென்று விட்டார்.

அதன் பிறகும் யாரும் தூத்துக்குடி துறைமுகத்தைப் பற்றிக் கவலைப்படாத நிலையில்தான், தூத்துக்குடியிலும் மற்றுமுள்ள பகுதிகளிலுள்ள வியாபாரிகளெல்லாம் ஒன்று சேர்ந்து, தூத்துக்குடி துறைமுகம் பற்றி அன்றைய பிரதமர் ஜவாஹர்லால் நேருவிடம் மனுக் கொடுத்தார்கள். மனுவைப் பெற்றுக் கொண்ட நேரு, 'தூத்துக்குடி துறைமுகம்தானே! நான் மனுவைப் படித்துப் பார்க்க வேண்டிய அவசியமே இல்லை. அது உடனடியாகச் செய்யப்பட வேண்டிய பணிதான். எனவே, அதற்கு இப்போதே ஐந்து கோடி ரூபாய் நிதி ஒதுக்குகிறேன்...' என்று உடனடியாக அனுமதி வழங்கினார்.

இது நடந்தது 58 இல். பிறகு லால்பகதூர் சாஸ்திரி அடிக்கல் நாட்ட, துறைமுகம் அமைக்கும் பணியும் உடனடியாகத் துவங்கப்பட்டாலும் அதற்கும் அதிகாரிகள் ஒரு முட்டுக்கட்டை போட்டார்கள்.

இயற்கையான துறைமுகம் என்றால் பிரச்னையே இல்லை. கப்பல்கள் வந்து கரையைத் தொடும் அளவுக்கு இயற்கையாகவே கடலோரப் பகுதிகள் ஆழமாக இருக்கும். அங்கே துறைமுகம் அமைப்பதில் சிரமமே இல்லை. செயற்கைத் துறைமுகத்தில்தான் சிரமம். ஒன்று, கடலோரப் பகுதிகளைக் கப்பல்கள் வரும் அளவுக்கு ஆழப்படுத்த வேண்டும். அது சிக்கனமானதாகவும் சாத்தியமானதாகவும் இல்லையெனில், கப்பல்கள் வந்து நிற்குமளவுக்கு ஆழமுள்ள கடல் பிரதேசம் வரை கரையிலிருந்து கடலுக்குள் ஒரு பெரிய ரோடு போட்டு, அதன் முனைகளில் கப்பல்கள் வந்து நிற்பதற்கு வசதி செய்ய வேண்டும். தூத்துக்குடி துறைமுக அமைப்புப் பணி என்பது இதில் இரண்டாவது வகை. அந்த வகையில் துவங்கப்பட்ட வேலை கடலுக்குள் சில மீட்டர் தூரம் ரோடு போடப்பட்டதுமே அதிகாரிகளால் நிறுத்தப்பட்டு, தூத்துக்குடி துறைமுகம் வெறும் மீன்பிடித் துறைமுகமாகத்தான் பயன்படுமே தவிர, கப்பல்கள் வருவதற்கானதாக இருக்க முடியாது என்று அறிவிக்கப்பட்டது. காங்கிரஸ்காரர்கள் கூட அதைக் கண்டு கொள்ளவில்லை.

இந்நிலையில்தான் தூத்துக்குடி துறை



• தூத்துக்குடி துறைமுகத் தலைவர் ஜெயமோகன் பிள்ளை.

முகத்தை ஒரு பக்கா துறைமுகமாக்க வேண்டும் என்று அன்றைய தமிழக முதல்வரான அண்ணாதுரை தலைமையில் தி. மு. க. 'எழுச்சி நாள்' என்ற பெயரில் ஒரு போராட்டம் நடத்தி அதில் வெற்றியும் கண்டது. இதுதான் இன்றைய தூத்துக்குடி துறைமுகத்தின் பழைய வரலாறு. இன்றைய நிலை என்ன? இன்னும் என்ன செய்ய வேண்டும்? இத்துறைமுக வளர்ச்சிக்கும் தமிழக வளர்ச்சிக்கும் என்ன சம்பந்தம்? நிறைய இருக்கிறது.

உதாரணமாகத் தூத்துக்குடியிலிருக்கும் அனல் மின் நிலையம், ஸ்பிக் நிறுவனம், தூத்துக்குடி ஆல்கலி கெமிகல்ஸ் அண்ட் ஃபெர்டிலைசர்ஸ் என்னும் தொழிற்சாலை ஆகியவற்றுக்கான மூலப் பொருள்கள் அனைத்தும் தூத்துக்குடி துறைமுகத்தில்தான் வந்து இறங்க வேண்டும். அப்படித்தான் வந்து கொண்டும் இருக்கின்றன. எனினும் தூத்துக்குடி துறைமுகம் சென்னை, கல்கத்தா, விசாகப்பட்டினம் போன்ற துறைமுகங்களைப் போல் அதிக ஆழமில்லாததால், இங்கு வரும் கப்பல்கள் முழுக் கொள்ளளவுக்கான பொருள்களை ஏற்றிக்கொண்டு துறைமுகத்துக்குள் நுழைய முடியவில்லை. அதனால் இங்கு வரும் ஒவ்வொரு கப்பலும் அதன் கொள்ளளவில் சுமார் முக்கால் பகுதி அளவுக்குத்தான் சரக்குகளை ஏற்றிக் கொண்டு வருகின்றது.

தூத்துக்குடி துறைமுக வளர்ச்சிக் கழகத்தின் செயலரும் கப்பல் ஏஜெண்டுமான பி. எஸ். டி. எஸ். இரவியரத்தினத்தைச் சந்தித்த போது, "நமது தமிழக அரசுக்குச் சொந்தமான கப்பல்களும் மற்ற கப்பல்களுமாகச் சேர்ந்து, விசாகப்பட்டினம், ஹால்டியா, பாரதீப் துறைமுகங்களிலிருந்து நிலக்கரியை ஏற்றிக் கொண்டு நூற்றுப் பதினாறு நடை தூத்துக்குடிக்கு வந்திருக்கின்றன. அப்படி வந்ததில் அவற்றின் முழுக் கொள்ளளவோடு வந்திருந்தால் மொத்தம் முப்பத்து நான்கு லட்சம் டன் நிலக்கரி வந்திருக்க வேண்டும். துறைமுகம் ஆழமில்லாததால் மொத்தம் இருபத்து மூன்று லட்சம் டன் நிலக்கரிதான் வந்தது. இதனால் கப்பலுக்கான எரிபொருளும் காலமும் எத்தனை நஷ்டம்? நீங்களே யோசித்துப் பாருங்கள்..." என்றார்.

இரவியரத்தினம் சொல்வது போல, ஒரு நடையில் வரவேண்டிய சரக்கு இரண்டு நடையில் வர வேண்டியிருப்பதால் கப்பல்களுக்கான எரிபொருளும் காலமும்தான் விரயமாகின்றன என்பதில்லை. மூலப் பொருள்களின் வரவு குறைவாக இருப்பதால் அதை நம்பியுள்ள தொழிற்சாலைகளின் வளர்ச்சியும், ஏகமாகப் பாதிக்கப்படுகின்றது. உதாரணத்திற்கு நிலக்கரியையே எடுத்துக் கொண்டால், அதன் வரவு குறைவாக இருப்பதால்தான் தூத்துக்குடி அனல் மின் நிலையத்தைப் பெருமளவுக்கு விஸ்தரிக்க முடியாத நிலையிலிருக்கிறோம். அதனாலும் நாம் ஒவ்வொரு நாளும் மின் வெட்டால் அல்லாட வேண்டிய அவலமும் நீடித்துக் கொண்டே போகிறது.

இன்னும் சொல்லப் போனால், தூத்துக்குடி துறைமுக ஆழம் காரணமாகக் கப்பல்கள் அனைத்தும் முழுக் கொள்ளளவோடு வராததால், தூத்துக்குடி துறைமுகத்தில் சரக்குகளை இரவு நேரங்களில் ஏற்றவோ இறக்கவோ அவசியமில்லை. குறைவான சரக்குகள்தான் என்பதால் எல்லாம் பகல் வேளையிலேயே முடிந்து விடுகின்றன; இரவு ஷிப்டுக்கே வேலையில்லாமல் போய் விடுகிறது! மேலும் துறைமுகத்தில் நிற்கும் கப்பல்களிலிருந்து ராட்சஸ கிரேன்கள் அள்ளிப் போடும் நிலக்கரியைத் துறைமுகத்திலிருந்து நான்கு கி. மீ. தூரத்திலுள்ள அனல் மின் நிலையத்திற்கு எடுத்துச் செல்லும் கன்வேயர் பெல்ட்டின் சக்தி, ஒரு நாளைக்கு 48,000 டன் நிலக்கரியை எடுத்துச் செல்லக் கூடியதாக இருந்தும் போதுமான அளவுக்குத் துறைமுகத்தில் சரக்குகள் வராததால் இப்போது நாளொன்றுக்கு வெறும் 26,000 டன் நிலக்கரியைத்தான் கொண்டு செல்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. அதாவது அந்தத் துறைமுகத்தின் பாதிப் பலனைத்தான் நாம் அடைந்து கொண்டிருக்கிறோம் என்பதுதான் உண்மை.

துறைமுகத்தை ஆழப்படுத்துவதில் என்னதான் பிரச்னை? தூத்துக்குடி துறைமுகத் தலைவர் ஜெயமோகன் பிள்ளையையும் மற்றுமுள்ள அதிகாரிகளையும் சந்தித்துப் பேசிய போது, அவர்களும் துறைமுகத்தை ஆழப்படுத்துவதின் அவசியத்தையும் தேவையையும் மனப்பூர்வமாக ஒப்புக் கொள்கிறார்கள். எனினும் "கடலுக்குள் இருக்கும் பாறைகளைப் பிளந்து அப்புறப்படுத்துவதற்கான மெஷின் கிடைப்பதுதான் கஷ்டமாக இருக்கிறது. அதுகுறித்து அரசும் முயற்சி செய்து கொண்டுதான் வருகிறது. விரைவில் ஆழப் படுத்தப்பட்டு விடும் என்று நம்புகிறோம்..." என்கிறார்கள்.

உண்மைதான். எல்லாத் துறைமுகங்களிலும் மணலைத்தான் அப்புறப்படுத்த வேண்டியிருக்கிறது என்பதால், பாறைகளை வெட்டி அப்புறப்படுத்துகிற மெஷின் பற்றி மற்ற நாடுகளிலும் கவலைப்படவில்லை என்றாலும் அதை வடிவமைத்துத் தரக் கூடிய நாடுகள் இல்லாமல் இல்லை. (இலங்கையில் அப்படியொரு மெஷினை ஒரு காண்ட்ராக்டர் வைத்திருப்பதாகச் சொல்கிறார்கள்.) புதிதாகவே அதுமாதிரி ஒன்றை நாம் வடிவமைக்கச் செய்து வாங்குவதிலும் தவறில்லை. அப்படி வாங்கினால் அது தூத்துக்குடித் துறைமுகத்தை ஆழப்படுத்தியவுடன் சும்மா கிடக்குமே; அது வீண்தானே என்று யாரும் எண்ண வேண்டியதில்லை.

காரணம், 'தூத்துக்குடி துறைமுக வளர்ச்சியும் சேது சமுத்திரத் திட்டமும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்தவை' என்று அப்போது, நடுத்தரத் துறைமுகங்களின் அபிவிருத்தி பற்றி ஆராய அமைக்கப்பட்ட சர். இராமசாமி முதலியார் கமிட்டியே சிபாரிசு செய்திருக்கிறது. எனவே, அந்த மெஷினை சேது சமுத்திரத் திட்டத்திற்கும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பாக் ஜலசந்தியைக் கப்பல் போகுமளவுக்கு ஆழப்படுத்தும் திட்டமான சேது சமுத்திரத் திட்டம் நிறைவேற்றப்பட்டால், இப்போது தூத்துக்குடியிலிருந்து சென்னை, விசாகப்பட்டினம், கல்கத்தா போன்ற துறைமுகங்களுக்குச் செல்லும் கப்பல்கள் இலங்கையைச் சுற்றிக் கொண்டு செல்ல வேண்டிய அவசியமில்லை. பாக் ஜலசந்தி வழியாக நூல் பிடித்த மாதிரி வந்துவிடலாம். அதனால் குறைந்தபட்சம் முந்நூற்று நாற்பது கடல் மைல்களிலிருந்து அதிகபட்சமாக நானூற்று முப்பத்து நான்கு கடல் மைல்கள் வரையிலான தூரம் மிச்சமாகும். அதோடு, எரிபொருளும், காலமும் ஏகமாக மிச்சமாகும். கூடவே சரக்குகளின் வரவும் அதிகரிப்பதால் இருக்கிற தொழிற்சாலைகளின் உற்பத்தி அதிகரிக்கும்; புதிய தொழிற்சாலைகள் உருவாகும்; தமிழகமும் வளர்ச்சியுறும்.

ஆனால், அன்றைக்குத் தூத்துக்குடி துறைமுகத்தை மத்திய அரசிடமிருந்து அண்ணாதுரை போராடிப் பெற்றதுபோல், இன்றைக்குச் சேதுசமுத்திரத் திட்டத்துக்காகப் போராட யார் இருக்கிறார்கள்? பிறந்த நாள் கொண்டாட்ட பிரும்மாண்ட ஊர்வலங்களும் ஒன்றுக்கும் உதவாத விஷயங்களுக்கான கதவடைப்பும்தான் நடைபெறுகின்றனவே தவிர, ஆக்கபூர்வமான திட்டங்களுக்காகப் போராடவோ குரல் கொடுக்கவோ யார் முன் வருகிறார்கள்?

— இளங்கோவன்

அட்டையில் தூத்துக்குடி துறைமுகம். வண்ணப்படமும் வ. உ. சி. மாவட்டம் தொடர்பான மற்ற படங்களும்:

கே. வி. ஆனந்த்

அடுத்த இதழில்...



- **சினிமா ஸ்டார் இல்லாத சினிமா!**

—கவர்ஸ்டோரி

- **பார்வை போனாலும் பாதை தெரிகிறது!**

—உண்மைக் கதை

உழவன் மகன்

- அன்புள்ள அல்லி!,.
விஜய்காந்த் கறுப்பா, வெளுப்பா? (ஸ்ரீதேவிப்ரியன், காங்கேயம்).

அமாவாசைக் கலரானாலும் அதிர்ஷ்டக்காரர். உழவன் மகனில் ராதா ஒரு பக்கம். ராதிகா ஒரு பக்கம்! ஜமாய்க்கிறாரே, பார்க்கவில்லே?

- அன்புள்ள அல்லி!
உழவன் மகனில் ராதா ரொம்ப செக்ஸியாக நடிக்கிறாராமே? (செந்தில்பிரியன், அந்தமான்)

நீயைச் சொன்னால் நீயணும். உதறச்



அல்லி பதில்கள்

சொன்னால் உதறணும். ராதா வுக்குச் சொல்லியா தரணும்?

- அன்புள்ள அல்லி!
இந்த வருஷம் பட்டாசு விலே எல்லாம் ஏறி விட்டதே? (சரளாப்ரியன், திருமருகல்)

உழவன் மகன் பார். விஜய்காந்த் சண்டைக் காட்சிகளில் மத்தாப்பு கிளப்புகிறார். வெடி வெடிக்கிறார். சமயத்தில் புஸ்வாணம் விடுகிறார்.

- அன்புள்ள அல்லி!
அம்மா ரோலுக்கு யார் லாயக்கு? (சார்லிப்ரியன், அருப்புக்கோட்டை)

சினிமா அம்மா அழகாயிருக்க வேண்டும். அழவும் தெரிய வேண்டும். தேடிப் பிடித்துக் கூட்டி வந்தாலும் பண்டரிபாய் பண்டரிபாய்தான்!

- அன்புள்ள அல்லி!
இன்றைய மாணவர்கள் எப்படி? (ராஜகுமாரிப்ரியன், அரக்கோணம்)

ஃபிலிம் இன்ஸ்டிடியூட் மாணவர் களைப் பார். உழவன் மகனில் ஒரு ரேக்ளா பந்தயத்தை எப்படி தூள் பறக்கப் படம் பிடித்திருக்கிறார்கள் என்று.

- அன்புள்ள அல்லி!
நேரம் போகாமல் தவிக்கிறேன். என்ன செய்வது? (தியாகராஜப்ரியன், திருவங்காடு)

உழவன் மகனுக்குப் போ. நேரம் ஓடுவதே தெரியாது.

- அன்புள்ள அல்லி!
செந்தில் — சரளா ஜோடி எப்படி? (நாகேஷ்ப்ரியன், நங்கநல்லூர்)

புளித்த மோர்!

- அன்புள்ள அல்லி!
எம். ஜி. ஆர். படங்கள் இனி வராதா? (அண்ணாப்ரியன், அருவங்காடு)

எம். ஜி. ஆர். படங்களெல்லாம் யார் யாரோ நடித்து வெளியே வந்து கொண்டு தானே இருக்கிறது! உழவன் மகன் இன்னும் பார்க்கவில்லே?

இவர்கள் வருங்காலத் தூண்கள்

- அன்புள்ள அல்லி!
வருங்காலத் தூண்கள் என்று படத்திற்கு

ஏன் பெயர் வைத்தார்கள் சொல்ல முடியுமா அல்லி? (ஜெமினிப்ரியன், ஜெமினிபுரம்)

ஜெயசித்ரா ஒரு தூண், பிரபு ஒரு தூண், அறிமுக தக்காளி சீனிவாசன் ஒரு தூண் என்று படத்தில் எல்லோரும் தூண் தூணாக நிற்பதாலோ என்னவோ!

• அன்புள்ள அல்லி!
நான் ஒரு மாணவன். ஒரு மாணவியைக் காதலிக்கலாமா? (கண்ணம்மாப்ரியன், காட்டுக்கோட்டை)

தாராளமாக. நீயும் கெட்டு அவளையும் கெடுக்கலாம். வருங்காலத் தூண்களில் வருகிற மாதிரி டூயட் வைத்துக் கொள்ளலாம். கருவைக் கலைக்கச் சொல்லலாம். ஒரு காரணமும் இல்லாமல் நடுத்தெருவில் ஓடி லாரியில் அடிபட்டுச் சாகலாம்.

• அன்புள்ள அல்லி!
என் கனவில் டிஸ்கோ சாந்தி வந்து நடனம் ஆடுகிறாரே, நான் என்ன செய்யட்டும்? (கிட்டப்பாப்ரியன், கிட்டூர்)

அது பரவாயில்லையே. நீ மட்டும் தானே அதைப் பார்ப்பாய். வருங்காலத் தூண்களில் ஆடுகிறாரே, எல்லோரும் பார்க்க நேரிடுகிறதே. டிஸ்கோவிற்கு எல்லாம் மார்க்கெட் போய்விட்டது என்று ஏன்தான் இந்த டைரக்டர்கள் உணராமல் இருக்கிறார்களோ?

• அன்புள்ள அல்லி!
வருங்காலத் தூண்கள் படத்தில் ஜெய்சங்கர் பாடம் எடுக்கும் காட்சியில் பாதி மாணவர்கள் வகுப்பில் இல்லையாமே, உண்மையாகவா? (ஜெய்சங்கர்ப்ரியன், ஜெய்புரம்)

அப்பாவி ஜெய்சங்கர் என்ன செய்வார் பாவம். கொடுத்த வேலையைச் செய்திருக்கிறார். இடைவேளை முடிந்து அப்படி இப்படி திரும்பிப் பார்த்தால் தியேட்டரில் முக்கால்வாசிப் பேர் இடத்தைக் காலி செய்து விட்டார்களே, அதற்கு என்ன சொல்கிறாய்?

• அன்புள்ள அல்லி!
டி. ராஜேந்தர், இந்தப் படத்திற்கு இசை என்று போட்டிருக்கிறதே, எப்படி? (ராஜேந்தர்ப்ரியன், ராசிநாடு)

கட்சியில் தனது இடத்தைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டு இருக்கிறதாம். படத்திற்கான இசையிலா தனது கவனத்தை வைக்கப் போகிறார்.

• அல்லி அக்கா!
என் அபிமான நடிகர் இளைய திலகம் பிரபுவின் 50 வது படமான வருங்காலத் தூண்களில் அவரது நடிப்பு எப்படி? (பிரபுப்ரியன், பீமாவரம்)

பிரபுவுக்குக் கௌரவ வேடம்தான். ஒப்பேற்றியிருக்கிறார். இந்த மாதிரி படத்தில் எல்லாம் அவர் மறுபடி நடித்தால் ரசிகர்கள் எல்லாம் அவரை மறுபடி மறந்து விடுவார்கள்.

• அன்புள்ள அல்லி!
மாணவ சமுதாயத்தைத் திருத்தும் வகையில் வருங்காலத் தூண்களை எடுத்திருக்கிறார்களாமே? (வெங்கட்ப்ரியன், வெங்கனூர்)



வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சாதீர். இந்தப் படத்தைப் பார்த்த மாணவமணிகள் கவலையை மறக்க கஞ்சாவையும், கள்ளையும், காபரேயையும் நாடி ஓடினால் என்ன செய்வது என்று நான் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறேன்.


• அன்புள்ள அல்லி!
நான் காதலித்த பெண்ணை அபகரித்து விட்டான் என் நண்பன். எனக்கு துரோகம் செய்த அவனை என்ன செய்வது? (கண்ணதாசப்ரியன், காமன்பேட்டை)

வருங்காலத் தூண்கள் படத்திற்கு இரண்டு டிக்கெட் எடுத்து அனுப்பு. அது போதும்.

— விமர்சனங்களை 'ராணி' பத்திரிகையின் அல்லி பதில்கள் ஸ்டைலில் கற்பனையாக அளித்திருப்பது


— ஜெயமன்மதன்

(ராணி மன்னிக்க!)



* பல்வேறு வகையான
பவளப் பாறைகள்......

பாழாகின்றன, பவளப் பாறைகள்!



வ. உ. சி. மாவட்டச் சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு சென்னை திரும்பிய போது, தற்செயலாக ஓர் இயற்கையியல் **(Ecology)** நிபுணரைச் சந்திக்க நேர்ந்தது. அப்போது அவர், "வ. உ. சி. மாவட்டக் கடலோரப் பகுதிகளில் படகு படகாகப் பவளப்பாறை **(coral reef)** களை எடுத்துக் கொண்டு வந்து சூளையிட்டுச் சுண்ணாம்பாக்குவதைப் பார்த்திருப்பீர்களே?" என்றார்.

"ஆமாம். அதிலென்ன விசேஷம்?" என்றோம் நாம்.

"பலரும் இப்படித்தான் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அந்தப் பவளப் பாறைகள் அழிக்கப்பட்டுக் கொண்டே வந்தால், கடைசியில் ஒரு நாள் இயற்கையின் சமநிலை பாதிக்கப்பட்டுப் பல மோசமான பின்விளைவுகள் ஏற்படும் தெரியுமா?

"ஆஸ்திரேலியாவில் சுமார் ஆயிரத்து இருநூறு மைல் நீளத்திற்கு இந்தப் பவளப் பாறைகள்தான் ஒரு மிகப் பெரிய கடல் அரணாக இருக்கின்றன. அதனால் கடல் சீற்றம் கொள்ளும்போது நிலப்பகுதி பாதிக்கப்படாமல் தடுக்கப்படுகிறது. மேலும் குடும்பக் கட்டுப்பாட்டுக்கான மருந்துகளும் மற்ற சில விலையுயர்ந்த மருந்துகளும் இந்தப் பவளப் பாறைகளிலிருந்துதான் தயாரிக்கப்படுகின்றன. இன்னும் என்னென்ன தயாரிக்க முடியுமென்று ரஷ்யா மிகத் தீவிரமாக ஆராய்ந்து கொண்டிருக்கிறது. ஆனால் நாமோ வெறுமனே சூளையிலிட்டுச் சுண்ணாம்பாக்கிக் கொண்டிருக்கிறோம்.

"மேலும் இந்தப் பவளப் பாறைகளால் உருவானவைதான் இன்றைக்கு நாம் காணும் லட்சத் தீவுகள் என்பது எத்தனை பெரிய ஆச்சரியமான விஷயம்! ஆம்! பவளப் பாறைகள் என்று நாம் ஒரே வார்த்தையில் சொல்லி விட்டாலும் அவற்றில் சுமார் ஆறாயிரம் வகைகள் உள்ளன. (அவற்றில் ஒரு வகைதான் பெண்கள் அணியும் பவளம்) அவையெல்லாம் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து வளர்ந்துதான் லட்சத் தீவுகள் உருவாகியிருக்கின்றன. இந்நிகழ்ச்சி ஏதோ ஒரு சில நூற்றாண்டுகளில் நடந்ததல்ல; பல லட்சக்கணக்கான ஆண்டுகளில் நடந்தது. ஆக, பவளப் பாறைகளை வெட்டியெடுப்பதன் மூலம் எதிர்காலத் தீவுகளின் அஸ்திவாரங்களையும் சேர்த்தே தகர்க்கிறோம் என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

"இதோடு இந்தப் பவளப் பாறைகள் எல்லாக் கடலோரங்களிலும் வளர்ந்து விடாது. அதற்கான சூழ்நிலையும் அங்கே இருக்க வேண்டும். நமது மன்னார்வளைகுடா அதற்குத் தோதாக இருக்கிறது; நிறைய வளர்கின்றன. இந்நிலையில் அவற்றையொரு பெரும் செல்வமாகப் போற்றிப் பாதுகாக்க வேண்டாமா? இத்தனைக்கும் இந்தப் பவளப் பாறைகளை வெட்டியெடுக்கக் கூடாதென்று ஒரு சட்டமும் இருப்பதுதான் வேதனை கலந்த வேடிக்கை!" என்றார் அவர்.

"மேலும், நமது மன்னார்வளைகுடாப் பகுதியில் சீனர்கள் விரும்பிச் சாப்பிடும் ஒருவகை அபூர்வ இனக் கடல் அட்டைகள் இருக்கின்றன. நம்மிடையே அதற்கு மதிப்பில்லாவிட்டாலும் வெளிநாட்டில் அதற்கு ஏகக் கிராக்கி. ஒரு கிலோ 6,500 ரூபாய் வரை விலை போகின்றன. அதனால் அந்த அட்டைகள் ஏராளமாகப் பிடிக்கப்பட்டுக் கடத்தப்படுகின்றன. இந்நிலையில் அரசே அந்த அட்டைகளை உற்பத்தி செய்யும் பண்ணைகளை அமைத்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தால் ஏராளமான அந்நியச் செலாவணி கிடைக்கும். செய்யத்தான் ஆளில்லை. உண்மையில், இயற்கை தனது ஒவ்வொரு செயலிலும் மனிதனுக்கு ஏராளமான செல்வத்தை அள்ளித் தரத் தயாராய் இருக்கிறது. பாழும் மனிதன்தான் அதைப் பயன்படுத்திக் கொள்ளாதது மட்டுமல்ல; பாழடித்துக் கொண்டும் வருகிறான்..." என்று வேதனையோடு முடித்தார் அவர்.

— கே. வி. ஆனந்த்



கண்ணைக் கவரும் வண்ணங்களில்
நெஞ்சை அள்ளும் ரகங்கள்.

BOXER
100% COTTON
LUNGHIES & KERCHIEFS
FROM
ORANGE FASHION

பாக்ஸர்

லுங்கிகள்
கைக்குட்டைகள்



உயர்தரமான நூலைக் கொண்டு
தயார் செய்யப்பட்டது.
சாயத்திற்கு உத்திரவாதம்.

LOTUS/87/Tam

ஆரஞ்சு ஃபேஷன்

26-A, 4வது மெயின் ரோடு, சி.ஐ.டி. நகர், சென்னை-600 035.

டீலர்கள்: பாக்ஸர் டிரஸ் பாரடைஸ், ஷாப் நெ. 6, அய்யனார் காம்ப்ளக்ஸ், 225, ஆற்காடு ரோடு, வடபழனி, சென்னை — 600 024. * அபிராமி இளாத் சென்டர், ஷாப் நெ. 8, ஷாப்பிங் சென்டர், பெசன்ட் நகர், சென்னை — 600 090. * கங்கா சில்க் ஹவுஸ், 121, லாட்டிஸ் பிரிட்ஜ் ரோடு, அடையாறு, சென்னை — 600 020. * ஸ்ரீ கலைமகள்ஸ், 30, மேடவாக்கம் நெடுஞ்சாலை, மடிப்பாக்கம், சென்னை — 600 091.





அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழநி.
அண்ணா மாவட்டம் — தமிழ்நாடு

இத்திருக்கோயில் மிகப் பழமை வாய்ந்ததும், புராதனமானதுமாகும். 160 மீட்டர் உயரமுள்ள மலையில் மூலவர் உருவச் சிலை சித்த முனிவர் போகரால் நவ பாஷாணங்களின் கலவையால் உருவாக்கப்பட்டு வழிபாடு செய்யப்பட்டு வருகிறது. திருக்கோயில் மூலம் ஆறு கால அபிஷேகம், ஆராதனையும் நடைபெறுகிறது. வழிபடும் பக்தர்களுக்கு மென்மேலும் நலம் பெற அருள்புரிந்து கொண்டு இருக்கிறார்.

பக்தர்கள் சென்று வழிபட வசதியான படிக்கட்டுகளும், யானைப்பாதையும் உள்ளது. தவிர மின் இழுவை ரயில்கள் இரண்டு ஓடிக் கொண்டு இருக்கின்றன. மேலும் மூன்றாவது ரயில் அமைக்கும் வேலை நடைபெற்று வருகிறது. மலையில் தர்ம தரிசனத்திற்கு ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனி ஒரு வழிப்பாதை அமைக்கப்பட்டுள்ளது. அபிஷேகம் செய்பவர்களுக்கும், சிறப்பு அனுமதி கட்டணச் சீட்டு வாங்குபவர்களுக்கும் தனித்தனி பாதைகள் அமைக்கப்பட்டு உள்ளன. மலையில் வழிபாடு செய்யவும், தங்கி ஓய்வு எடுக்கவும் அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

மலையில் திருக்கோயிலின் அபிஷேகத்திற்கு பஞ்சாமிர்தம், பன்னீர் மற்றும் ஆண்டவர் பிரசாதங்கள் லட்டு, முறுக்கு விற்கப்படுகின்றன. கூட்டுறவு பண்டகசாலை மூலம் தேங்காய், பழம், விபூதி முதலியன விற்கப்படுகின்றன.

மலைக்கோயில், அடிவாரம், மத்திய பேருந்து நிலையம், ரயில்வே நிலையம் ஆகிய இடங்களில் தகவல் மற்றும் திருக்கோயில் பஞ்சாமிர்தம், வெளியீடு விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மலைக்கோயில் சன்னதி காலை 6.00 மணி முதல் இரவு 8.30 மணி வரை திறந்து இருக்கும். திருவிழாக் காலங்களில் காலை 4.00 மணி முதல் இரவு இராக்கால பூஜை முடிய திறந்து இருக்கும்.

விஸ்வரூப தரிசனம் காலை 6.00 மணி
விசேஷ நாட்களில் காலை 4.00 மணி

காலபூஜை நேரங்கள்:

1. விளா பூஜை காலை 6.45; 2. சிறுகால சந்தி காலை 8.00; 3. கால சந்தி காலை 9.00; 4. உச்சிக்காலம் பிற்பகல் 12.00; 5. சாயரட்சை மாலை 5.30; 6. இராக்காலம் இரவு 8.00 மணி.

முக்கியத் திருவிழாக்கள்:

1. தைப்பூசம், 2. வைகாசி விசாகம், 3. ஸ்கந்த சஷ்டி, 4. பெரிய கார்த்திகை, 5. பங்குனி உத்திரம்.

புறப்பாடு கட்டணம்:

1. தங்க மயில் வாகனம் — ரூ. 200.00 2. தங்கரதம் ரூ. 900.00

கட்டளைகள்:

1. காலபூஜை — ரூ. 3,000/— 2. தங்கரதம் ரூ. 10,000/— 3. லட்டு பிரசாதம் ரூ. 50,000/—

மேற்கண்ட தொகையை வைப்புத் தொகையாக கட்டினால் ஒவ்வோர் ஆண்டிலும் குறிப்பிட்ட ஒரு நாளில் கால பூஜை, தங்கரத புறப்பாடு நடத்தி பிரசாதங்கள் வழங்கப்படும். 10,000 பேர்களுக்கு சாயரட்சையின் போது லட்டு பிரசாதம் வழங்கப்படும்.

பக்தர்கள் தங்குவதற்கு ரயில்வே பீடர் ரோடில் தங்கும் விடுதியும், அடிவாரத்தில் தண்டபாணி நிலையம், கார்த்திகேயன் விடுதி, சிறுகுடில்கள் சகல வசதிகளுடன் கூடிய குளிர்சாதன அறைகள், சிறப்பு முதல் வகுப்பு, முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு மற்றும் மூன்றாம் வகுப்பு அறைகள் உள்ளன.

வாடகை விபரம்:

குளிர்சாதன அறை ரூ. 75.00 சிறப்பு முதல் வகுப்பு ரூ. 40.00
முதல் வகுப்பு ரூ. 30.00 மூன்றாம் வகுப்பு ரூ. 10.00 கூடம் ரூ. 50.00
பழநி வந்து அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமியை வணங்கி, வழிபட்டு அருள்பெற வேண்டுகிறோம்.

ஆ. மலையாண்டி பி. ஏ., பி. எல்.,
துணை ஆணையர்/நிர்வாக அதிகாரி.

சு. பொன்னுசாமி பி. எஸ்சி.,
தக்கார்.

“சொன்னதைச் செய்தீர்களா?”



• பெரியசாமி

தூத்துக்குடி நகர் மன்றத் தலைவர் என். பெரியசாமி (தி. மு. க.)யைச் சந்தித்த போது, அவர் தேர்தலில் போட்டியிட்ட போது கொடுத்த வாக்குறுதிகளை எந்த அளவுக்கு நிறைவேற்றியிருக்கிறார் என்பதைத் தெரிந்து கொள்ள ஒவ்வொரு வாக்குறுதியாகச் சுட்டிக் காட்டிக் கேட்டோம்.

“நகரில் இரண்டாவது மூன்றாவது கட்டமாக நிறைவேற்றப்பட வேண்டிய பாதாளச் சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றி விட்டீர்களா?”

“இரண்டாவது கட்டம் நிறைவேற்றப் பட்டுவிட்டது. மூன்றாவது கட்ட வேலைகள் தான் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.”

“நகரிலுள்ள பல இடங்களுக்கும் மேல் நிலை நீர்த் தொட்டிகள் அமைத்துப் போதுமான அளவுக்குக் குடிநீர் வசதி செய்து தரப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள்?”

“ஆமாம். மேல்நிலை நீர்த் தொட்டிகள் கட்டப்பட்டு வருகின்றன. - அது முடிக்கப் படாத நிலையிலும் குடிநீர்ப் பஞ்சம் ஏற்படாமல் குழாய்கள் மூலமும், லாரிகள் மூலமும் குடிநீர் வழங்கிக் கொண்டுதான் வருகிறோம்.”

“நகரிலுள்ள குப்பை கூளங்களை அகற்றுவதற்குப் போதுமான அளவுக்குக் குப்பை லாரிகள் மற்றும் வண்டிகள் வாங்கப்பட்டு விட்டனவா?”

“வாங்குவதற்கு அனுமதி கேட்டு அரசுக்கு எழுதியுள்ளோம். அனுமதி கிடைத்தால்தான் வாங்க முடியும்.”

“பஸ் ஸ்டாண்டை விரிவு படுத்துதல், ஏழை எளியவர்களுக்குக் குறைந்த வாடகையில் திருமண மண்டபம் கட்டித் தருதல், டவுன் ஹால், ஸ்டேடியம் கட்டுதல் போன்றவை எந்த நிலையில் இருக்கின்றன?”

“பஸ் ஸ்டாண்டுக்குள் சிமெண்ட் தரை போடப்பட்டுச் சுத்தமாக இருக்கும் நிலையை நீங்களே பார்த்திருப்பீர்கள். இந்த பஸ் ஸ்டாண்ட் இட நெருக்கடியைச் சமாளிக்க, எட்டையாபுரம் ரோடில் ஒரு பஸ் ஸ்டாண்ட் அமைக்க இடம் கையகப்படுத்தப் பட்டுள்ளது. இரண்டு பஸ் ஸ்டாண்டுகள் இருந்தால் சிரமமாயிற்றே என்று சொல்லப்படுவதையும் ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். விரைவில் ஒரு நல்ல முடிவு எடுக்கப்படும். மேலும் ஒவ்வொரு வார்டிலும் ஒவ்வொரு திருமண மண்டபம் கட்டும் பணியும் நடந்து வருகிறது. டவுன் ஹால், ஸ்டேடியம் கட்டுவதற்கான ஆயத்த வேலைகளும் நடைபெற்று வருகின்றன. இவற்றோடு போக்குவரத்து இடைஞ்சலைத் தவிர்க்க ஓரிடத்தில் ரயில்வே மேம்பாலம், இன்னோரிடத்தில் ரயில்வே சுரங்கப் பாலம் ஆகியவை கட்டப்படுவதற்கான பூர்வாங்க வேலைகளிலும் கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறோம்.”


“இத்தனையும் செய்து கொண்டிருந்தாலும் நகரில் உள்ள பூங்காக்களையும், தூத்துக்குடியின் கூவமான பக்கிள் கால்வாயையும் சுத்தப்படுத்தும் முயற்சிகள் இல்லை போல் இருக்கிறதே?”

“இப்போது குடிநீர்ப் பிரச்னைதான் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டும் என்பதால் பூங்காக்கள் பராமரிப்புப் பற்றிக் கவனம் செலுத்த முடியவில்லை. பக்கிள் கால்வாயைச் சுத்தப்படுத்த தூத்துக்குடி எம். எல். ஏ. வான எஸ். என். ராஜேந்திரன் முன்பு அமைச்சராக இருந்தபோதே அடிக்கல் நாட்டினார். வேலை துவங்குவதற்குக் காண்ட்ராக்ட் விடும் நிலையில் யார் காண்ட்ராக்ட் எடுப்பது என்பதில் ஆளுங்கட்சிக்காரர்களுக்குள் பிரச்னை போல் இருக்கிறது. அதனால் வேலை துவங்கப்படாமலேயே கிடக்கிறது.

“கடைசியாக நீங்கள் இன்னொன்றையும் தெரிந்து கொள்வது நல்லது. நகராட்சியின் வருமானத்தைப் பெருக்க நாங்கள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருந்தாலும், நகராட்சிப் பள்ளிகள் அரசுப் பள்ளிகளான நிலையிலும் அந்த ஆசிரியர்களுக்கு இன்னும் அரசு சம்பளம் கொடுக்காததால் இன்னமும் நகராட்சிதான் கொடுத்துக் கொண்டிருக்கிறது. இந்நிலையில் எப்படி நகராட்சிக்கு நிதி வசதி பெருகும்? அரசு பூரணமாக ஒத்துழைக்காத வரையில் ஒரு நகராட்சித் தலைவரால் சொன்ன அனைத்தையும் செய்ய முடியாது!” என்றார் பெரியசாமி.

கடைசியாக, “நீங்கள் தி. மு. க. விலிருந்து அ. தி. மு. க. வுக்குச் செல்லப் போவதாக ஒரு வதந்தி அடிபடுகிறதே!” என்று கேட்ட போது, “ஐயய்யோ! ஒரு நாளும் அது நடக்காது. நான் கடைசி வரை ஒரு தி. மு. க. காரனாகத்தான் இருந்து சாவேன்!” என்று உறுதியாகச் சொன்னார் பெரியசாமி.

— ப்ரியன்


போராட்டங்கள்
அக்டோபர் 28ந்தேதி எம்.ஜி.ஆர் திரும்புகிறார்


பசுத்தோல் போர்த்திய புலி!
யாழ்ப்பாணத் தமிழர்
விடுதலைப் புலிகள்
(பிரபாகரன்)
ஐயோ!.. இந்திய அமைதிப் படை ஈழத் தமிழனைக் கொல்லுதே! கொலை! கொலை!


தமிழ் நாட்டில் மின்சார உற்பத்தி குறைந்து விட்டது!
மின்சார உற்பத்தி குறைய வில்லை!
இப்ப நீங்க வாங்கிக் கட்டிக்கறீங்க!
வா. வி. எஸ்.



கல்கி

1987 நவம்பர் 1
மலர் 46 இதழ் 14
பிரபவ ஐப்பசி 15



வாகை சூட வாழ்த்துவோம்!

சென்ற இருவாரத் தலையங்கங்களைப் படித்துவிட்டு, கல்கி வாசகர்கள் பலர் வரவேற்று எழுதியுள்ளார்கள். சிலர் குறை கூறிக் கண்டித்தும் இருக்கிறார்கள். இது எதிர்பார்க்கக் கூடியதே. இந்திய ராணுவத்தால் தாக்கப்படுவது வன்முறையில் நாட்டம் கொண்ட, நா[illegible]டைத் துண்டாடச் சொல்கிற, நன்கு பயிற்சி பெற்ற ஒரு பயங்கரவாத [illegible]விட, அவர்கள் தமிழர்கள் என்ற உணர்ச்சியே மேம்படும் போது, [illegible]மும் போட்டி போட்டுக் கொண்டு பெருகுவது இயல்புதான்.

[illegible] பொறுத்தமட்டில், சிங்களருக்கும் சிங்களத்துக்கும் உள்ளது போல் சகல விதங்களிலும் சமமான உரிமைகள் ஈழத் தமிழருக்கும் தமிழுக்கும் அளிக்கப்பட வேண்டும் என்று என்றுமே கூறி வந்திருக்கிறோம். ஆனால் சுதந்திரத் தமிழ் ஈழக் கோரிக்கையையோ அல்லது அதனை அடைய வன்முறையைக் கையாள்வதையோ என்றுமே நாம் ஆதரித்தது கிடையாது. பிரத்யட்ச நோக்கில் இந்தக் கோரிக்கையும் வன்முறையும் வெற்றிபெறும் என்ற நம்பிக்கையும் நமக்கு இருந்ததில்லை.

வியட்நாமில் வியட்காங் போராட்டம் வெற்றி பெற்றதெனில், அங்கு நிலப்பரப்பு சீனாவுடன் இணைந்திருந்ததும் சீனாவிலிருந்து தளவாடங்களும் பயிற்சி பெற்ற வீரர்களும் அலை அலையாகக் காட்டுப் பாதைகளில் தெற்கே வந்து கொண்டிருந்ததும் ஒரு முக்கிய காரணம். இலங்கையோ ஒரு தீவு. இங்கே அத்தகைய சாகசம் நடக்க முடியாது என்பதுடன் இந்தியாவும் வன்முறைக்கும் சுதந்திர ஈழக் கோரிக்கைக்கும் ஆதரவு தர முடியாது என்று திட்டவட்டமாகப் பலமுறை கூறிவிட்டது. இந்தியா இதற்கு ஆதரவு தருவதெனில் பஞ்சாபை இழக்கத் தயாராக வேண்டும் என்பதுடன் சீக்கிய பயங்கரவாதிகள் மீது நடவடிக்கை எடுக்கும் தார்மீக பலத்தையும் இழந்து நிற்கும்.

ஜெயவர்த்தனவின் அத்துமீறிய செயல்களை — சாமானியத் தமிழர்கள் மீது குண்டு வீசிச் சிங்கள ராணுவம் தாக்கியதை — நாம் வன்மையாகக் கண்டித்திருக்கிறோம். அதேபோல் பிரச்னையில் சம்பந்தப்பட்டவர்களை ஒதுக்கிவிட்டு அவசரம் அவசரமாக இலங்கை அரசுடன் இந்தியா ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டதையும் கண்டித்தோம். அப்போது என்ன நடக்கும் என்று அஞ்சினோமோ அது நடந்துவிட்டது. தமிழர்களை — விடுதலைப் புலிகளை — இந்திய ராணுவம் தாக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது. 'வேறு எந்தவிதமாக ஒப்பந்தம் ஏற்பட்டிருக்க முடியும்?' என்று சிலர் கேட்கிறார்கள். இதில் ஓரளவு நியாயம் இல்லாது போகவில்லை. என்றாலும் பிரபாகரனை தில்லியில் சிறைவைத்தது போல் வைத்து விட்டுக் கொழும்புக்குப் பறந்து போய்ப் பிரதமர் கையெழுத்துப் போடுவதற்குப் பதில், பிரபாகரனுக்கு அவர் ஒத்துழைக்க மறுத்தால் பின் விளைவுகள் என்னவாக இருக்கும் என்பதை விளக்கிக் கூறி, அவரையும் டி. யூ. எல். எஃப் தலைவர்களையும் ஒப்பந்தத்தின் ஓர் அங்கமாக்கியிருக்கலாம் என்ற எண்ணத்தைச் சுலபத்தில் ஒதுக்கிவிட முடியவில்லை.

அது எவ்வாறாயினும் சிந்திய பாலை எண்ணி வருந்துவதில் அர்த்தமில்லை. இன்றைய நிலையில் அமைதி காப்பதும், ஜனநாயகம் திரும்பச் செய்வதும், போராளிகளின் ஆயுதங்களைப் பறிமுதல் செய்வதும் ஒப்பந்தப்படி இந்தியாவின் கடமையாகி விட்டது. இந்தக் கடமையைச் செய்ய ஒத்துழைப்புத் தருவதாக முதலில் பெருந்தன்மை காட்டிய பிரபாகரன், அது பாயும் முன் பதுங்கிய புலித்தனமே என்று நிரூபித்து விட்டார். பதினேழு புலிகளைச் சிங்கள அரசு கைப்பற்றியதும் அவர்களை உடனடியாக விடுவிக்க இந்திய அமைதிப்படை தவறியதும் குற்றங்களே என்றாலும், விடுதலைப்புலிகள் எடுத்த அதிபயங்கரமான எதிர் நடவடிக்கைகளை நியாயப்படுத்தும் அளவுக்குப் பெரிய குற்றங்கள் அல்ல.

இப்போதும் விடுதலைப் புலிகள், ஆயுதங்களை ஒப்படைத்தால், ஒப்பந்தத்தை மதித்தால் இந்தியா போர் நிறுத்தத்துக்குத் தயாராக இருக்கிறது. ஆனால் பிரபாகரன், 'முதலில் போர் நிறுத்தம்; பிறகு பேச்சு வார்த்தை' என்ற வழக்கமான பாவ்லாவில் இறங்கி இருக்கிறார்.

நமது அமைதிப்படை கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தாமலும் தங்கள் உயிருக்குச் சேதம் நேர்ந்தாலும் சாமானியத் தமிழ் மக்களுக்கு உயிர்ச் சேதம் ஏற்படாத வகையிலும் போராடி வருகிறது. மிகவும் இக்கட்டான ஒரு சூழலில் போரிடும் இந்திய வீரர்களுக்கு மனப்பூர்வமான ஆதரவை வழங்குவது நம் கடமை. அவர்கள் வெற்றி வாகை சூட வாழ்த்துவோம்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.



* சிக்ஸர் சித்து
* வேதனை, வேதனை!
* அரசியலில் குதித்தால்...?
* இளையராஜா-சர்க்கத இசை

சோனியா அரசியலில் குதிக்கப் போகிறாராமே?

* கே. வி. எஸ். மணியன், குடியாத்தம்.

? 'நான் நம்பிக்கை வைத்தவர்களே என்னை ஏமாற்றி விட்டார்கள்' என்று ராஜீவ் வேதனைப்படுவது நியாயமா?

! அதையேதான் மக்களும் ராஜீவைப் பார்த்துக் கேட்கிறார்கள்!

* ஆர். சுப்பராவ், திருக்கோவலூர்.

? சோனியா காந்தி அரசியலில் குதிக்கப் போகிறாராமே, நாடு தாங்குமா?

! இன்னும் கொஞ்ச காலம் ஆனால் வாக்காளரைவிட வேட்பாளர்கள் அதிகமாகிவிடுவார்களோ என்று எண்ணுமளவுக்கு இங்கே இரண்டு முழம் மூன்று முழம் நீளத்துக்கு வாக்குச் சீட்டுக்கள் தயாராகின்றன. இப்படி எல்லாரும்தான் அரசியலில் குதிக்கிறார்கள். சோனியா மட்டும் என்ன பாவம் செய்தார்? இந்த நாடு இதையும் தாங்கும் இன்னமும் தாங்கும்! தாங்க வேண்டும் என்பது இதன் தலைவிதி!

* ஆர். உலகநாதன், சங்கரன்பந்தல்.

? கணவன் மறைவுக்குப் பின் பெண்கள் திலகமிடுவதும் பூச்சூடுவதும் சரிதானா?

! இது அவரவர் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களைப் பொறுத்த விஷயம். 'பூச்சூடாதே' என்று தடுக்கவும் பிறருக்கு உரிமை இல்லை; 'திலகமிட்டுக் கொள்' என்று கட்டாயப்படுத்தவும் பிறருக்கு உரிமை இல்லை. அவர்கள் தங்கள் மனத்தளவில் எதைச் சரி என்று கருதுகிறார்களோ அப்படிச் செய்ய அனுமதிப்பதே நல்லது.

* ரகுவீர தயாள், ராமநாதபுரம்.

? 'மதுரையில் முன்பு பஞ்சம் பன்னிரண்டு ஆண்டு காலம் இருந்தது; 1876 பஞ்சத்தில் 50 லட்சம் பேர் இறந்தனர்; 1922 இல் முப்பது லட்சம் பேர் மாண்டனர்; அப்போது யார் திட்டமிட்டு லாரிகளில் தண்ணீர் கொண்டு போய் ஊற்றியது?' என்று நாவலர் பேசியிருக்கிறாரே?

! அந்தக் காலத்தில் இத்தனை லாரிகள் உற்பத்தியானதா? இந்த அளவுக்கு விஞ்ஞான முன்னேற்றம் இருந்ததா? கடல் நீரைக் குடிநீராக்க முடியும் என்பது அன்று தெரியுமா? இன்றைய விண்வெளி யுகத்தில் இந்தியா இன்னமும் குடிநீர்ப் பிரச்னையைக் கூடத் தீர்க்காமல் இருப்பது வெட்கக்கேடு. அதை விடப் பெரிய வெட்கக் கேடு, அமைச்சர், 'லாரியில் கொண்டு போய்த் தண்ணீர் ஊற்றினோம்' என்று பெருமைப் பட்டுக் கொள்வது.

* ஏ. ஆர். இளங்கோ, சந்திரவெள்ளாளப் பட்டி.

? 'தமிழ்நாட்டில்தான் இந்தியாவைப் பொறுத்தமட்டில் அமைதியான ஆட்சி நிலவுகிறது' என்று அமைச்சர் கே. கே. எஸ். எஸ். ஆர். அறிக்கை விட்டுள்ளாரே?

! செயலற்றுக் கிடப்பதை அமைதி என்று பொருள் கொள்வோமானால் அமைச்சரின் கூற்று சரிதான்.

* **மு. செந்தில்வாசன், திருமருகல்.**

? எம். ஜி. ஆர். தமிழகத்தில் இருந்து கொண்டு செய்து வந்த ஆட்சி; அமெரிக்காவிலிருந்து செய்து வருகிற ஆட்சி — ஒப்பிடவும்.

! கோட்டையிலிருந்து வந்த அறிக்கைகள் இன்று கேபிளில் வருகின்றன — அவ்வளவுதான். மற்றபடி ஆட்சித் திறனிலோ தரத்திலோ எந்தவித மாறுதலும் இல்லை.

* **எம். ரமேஷ்குமார், போடிநாயக்கனூர்.**

? ஓர் உண்மையான காங்கிரஸ்வாதி எப்படியெல்லாம் இருக்கக் கூடாது?

! இன்றைய காங்கிரஸ்காரர்கள் மாதிரி.

* **மு. செந்தில்வாசன், திருமருகல்.**

? புதிய எழுத்தாளருக்குத் தாங்கள் கூறும் அறிவுரை என்ன?

! கதை எழுத முற்படுவதற்கு முன்பு தமிழ் எழுதக் கற்றுக் கொள்ளுங்கள்.

* **சி. மணி, புத்தனாம்பட்டி.** *

? இந்தியாவின் வறட்சி நிவாரணப் பணிக்காக ஜப்பான் 270 கோடி ரூபாய் கடனுதவி அளித்திருப்பது குறித்து...?

! கடன் வாங்குவது எளிது. அசலும் வட்டியுமாகத் திருப்பித் தருவதுதான் கஷ்டம். வாங்குகிற கடன் செல்வத்தைப் பெருக்கும் விதமாக முதலீடாகவில்லையென்றால் துன்பங்கள்தான் தொடரும். அந்தத் துன்பங்களை ஏற்கப் போவது மக்கள்தான்; ஆட்சித் தலைவர்கள் அல்ல. சலியாத உழைப்பும் திறமையான நிதி நிர்வாகமும்தான் நாட்டை உன்னத நிலைக்கு உயர்த்தும். பணத்தைக் கடன் வாங்குவதை விட, இவ்விரண்டு அம்சங்களில் ஜப்பானை நாம் பின்பற்றினால் நல்லது.

* **வி. துரைராஜ், சூளை.**

? சென்னையில் நடந்த ரிலையன்ஸ் கோப்பை கிரிக்கெட்டில் உங்களைக் கவர்ந்த ஆட்டக்காரர் யார்?

! சித்து விளையாட்டு போல் சித்து அடித்த சீரிய சிக்ஸர்கள் சிறிப் பறந்ததைக் கண்ட பின் வேறு ஓர் ஆட்டக்காரரின் சிறப்பு பற்றிச் சிந்திக்கவும் முடியுமா?

* **கே. வி. எஸ். மணியன், குடியாத்தம்.**

? அரக்கனுகவே இருக்கட்டும்; ஒருவனது இறப்பைக் கொண்டாடும் அளவுக்கு நாம் இரக்கமற்று போய் விட்டோம்?

! அரக்கன் என்பது தீய எண்ணங்களின் உருவகம்தான். புராணங்களில் வரலாற்றைத் தேடாதீர்கள்! மேலும் நரகாசுரனே தான் மறைந்த தினத்தை மக்கள் கொண்டாட வேண்டும் என்று வரம் வேண்டிப் பெற்றதாகக் கதை.

* **இரா. இராஜதுரை, சீர்காழி.**

? கிஷோர் குமார் மரணம் குறித்து?

! அவரது இனிய குரலும் இசைப் பாடல்களும் டேப்கள், ரிகார்டுகள் மூலமாக இன்னும் பல காலம் ஒலித்துக் கொண்டிருக்கும் என்பது ஒருபுறமிருக்க; குரல் வளத்தை ஒரு புதிய பாணியில் பிரயோகித்துப் பெரும் புகழ் பெற்றவர் அவர். ஒரு தலைமுறைக் காலத்துக்கு அவரது இசை, இளைஞர்களை ஊக்குவித்து, உற்சாகப்படுத்தி வந்தது. அந்த ஊக்கமும் உற்சாகமும் காரணமாக நிகழ்ந்த சாதனைகளை சூப்பர் கம்ப்யூட்டர் துணை கொண்டு கூட அளவிட முடியாது!

* **வேதவரத கணேஷ், செருவாமணி.**

? ஆசிரியர்களை இன்று அரசு செருப்பு தூக்கச் சொல்வது நியாயமா?

! மாணவர்களுக்கு அரசு வழங்கும் புதிய, இலவச செருப்புக்களைக் கைகளால் தொட்டு எடுத்து வழங்குவதைக் கேவலம் என்று ஆசிரியர்கள் கருதுவார்களேயானால் அந்த எண்ணத்தை விடக் கேவலமானது வேறு ஒன்றும் இருக்க முடியாது. கடன் இழவே என்று பாடம் நடத்தினால் போதாது; குழந்தைகளிடம் அன்பு சுரக்க வேண்டும்.

* **சி. காந்தி, பள்ளத்தூர்.**

? அ. தி. மு. க. வின் இன்றைய நிலை எப்படி உள்ளது?

! காலை ஆறு மணி நேரம் கதவடைப்பு; விடுதலைப் புலிகளுக்கு அனுதாபம். மாலை ஆறு மணி நேரம் வீரப்பன் ஜெயலலிதா கூட்டங்களில் வாண வேடிக்கை! அ. தி. மு. க. வின் இன்றைய நிலை அனுதாபத்துக்குரிய நிலையாகத்தான் உள்ளது.

---

* **ரூ. 15 பரிசு பெறுபவர்:**

சி. மணி,
1 — 80, மெயின் ரோடு,
புத்தனாம்பட்டி போஸ்டு,
திருச்சி மா. வ.— 621 007.

ஒப்பந்த முயற்சியில் என்ன தவறு?

* சகோதர பாசத்தைவிட தேச நலனும் கௌரவமும் முக்கியம் என்று உணர்த்திய தலையங்கம் போற்றுதற்குரியது. இந்தக் கருத்தைத் தமிழகத்து அரசியல்வாதிகள் உணர்ந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!

அதே தலையங்கத்தில், இந்தியா — இலங்கை ஒப்பந்தம், சம்பந்தப்பட்ட போராளிகளைக் கலந்தாலோசிக்காமல், இரு நாடுகள் தங்களுக்குள் செய்து கொண்ட ஒப்பந்தம் என்று குறை கூறியிருக்கிறீர்கள். ஆனால், வேறு எந்த விதத்தில் ஒப்பந்தம் ஒன்று உருவாகி இருக்க முடியும் என்று நீங்கள் கருதுகிறீர்கள்? சுதந்திரத் தனித்தமிழ் ஈழம் கேட்கும் எல். டி. டி. ஈ. போன்ற அமைப்புகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே ஒப்பந்தம் எப்படி ஏற்பட முடியும்? அது சாத்தியமேயில்லை. மேலும், சிங்களத் தீவிரவாதிகளும் தமிழ்ப் போராளிகளுடன் — குறிப்பாக எல். டி. டி. ஈ. யுடன் — ஒரு கௌரவமான அமைதி ஒப்பந்தம் செய்து கொள்ளச் சம்மதித்திருக்கவே மாட்டார்கள். இந்நிலையில் இலங்கை — இந்திய அரசுகள் இணைந்து ஓர் ஒப்பந்தம் மூலம் இலங்கைக்கு அமைதி கொண்டு வர முயற்சி செய்ததில் என்ன தவறு?

புதுதில்லி சுவாமி.

* 'அடங்கிக் கிடக்கவா அமைதிப் படை?' தலையங்கம் கூறுவது போல் விடுதலைப்புலிகளை ஒடுக்குவது நமது தன்மானப் பிரச்னையாகிவிட்டதுதான். ஆனால், அமைதியாகத் தாயகம் திரும்பிக் கொண்டிருந்த போராளிகளைச் சிங்கள ராணுவம் கைது செய்து, கொழும்புக்குக் கொண்டு சென்றதை ஆயுத பலத்தினாலாவது (வேண்டுகோள்களுக்குச் சிங்கள ராணுவம் செவி சாய்க்கவில்லை) நமது அமைதிப் படை தடுத்திருந்தால் இந்த நிலைமையே ஏற்பட்டிருக்காதே! அப்போது ஏன் அடங்கிக் கிடந்தது இந்த அமைதிப் படை? ஒப்பந்தத்துக்கு எதிராகத்தானே அப்போது செயல்பட்டது சிங்கள ராணுவம்?

மயிலாடுதுறை. எஸ். சிவசங்கர்.

* ''சகோதர பாசத்தை விட, தேசாபிமானம் முக்கியமானது. உலகம் நம்மைப் பார்த்துச் சிரிக்க நாம் இடமளித்துவிடக் கூடாது.'' என்ற கல்கியின் தலையங்க வரிகள் தலைநகரில் செதுக்கி வைக்க வேண்டிய கல்வெட்டு வாசகங்கள்.

கரியாப்பட்டினம். சிவ. ஜெய்சங்கர்.

''சகோதர பாசத்தைவிட தேசாபிமானம் முக்கியமானது'' என்பதனை விளக்கிய தங்களது நடுநிலைமையான தலையங்கத்திற்கு எனது பாராட்டுக்கள்.

மதுரை — 1. எஸ். சாகுல் ஹமீது.

* சகோதர பாசத்திற்காக ஏங்கிக் கொண்டு இருக்கும் எங்களுக்குத் தங்களது தேசாபிமானத் தலையங்கம் திருப்தி தரவில்லை!

திருக்கடையூர். ஜி. கே. ராஜு.

* எந்தவிதமான பாரபட்சமுமின்றித் தமிழ் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, எழுதப்பட்ட தலையங்கம்; பாராட்டுக்கள்!

சென்னை — 15. வி. முரளி.

* ''மௌனச் சாட்சியங்கள்'' போன்ற அறிவுபூர்வமான உண்மைக் கதைகளை மிகவும் வரவேற்கிறேன். குற்றங்களைக் கண்டுபிடிப்பதில் தடய அறிவியல் எப்படிப் பயன்படுகிறது என்பதைத் தெரிந்து கொள்ள உதவியதற்கு நன்றி!

மேல்பட்டி. எல். மாறன்.

* தீபாவளி ரிலீஸ் திரைப்படங்கள் பற்றித் தாங்கள் கொடுத்த தகவல்கள் 'டிரெய்லர்' பார்த்தது போல் விறுவிறுப்புடன் இருந்தன!

சென்னை — 112. சி. துரைராஜ்.

* எங்கே பார்த்தாலும் மதச் சண்டையும் அரசியல் கலகமும்; விட்டுக் கொடுத்தல் என்ற மனப்பான்மையில்லாததால் பெருந்தன்மைக்குப் பேர் பெற்ற நம் நாடு, மனிதத் தன்மையில்லாத செயல்களுக்கு மத்தியில் மாட்டிக் கொண்டு சித்திரவதைப்படுகிறது என்பதைத் தமது 'சுதவுகள்' சிறுகதையின் மூலம், துல்லியமாகப் படம் பிடித்துக் காட்டிவிட்டார் அகல்யா.

கார்மாங்குடி. குரு. வைத்தியநாதன்.

* கம்ப்யூட்டரும் கட்டை வண்டியும்... குறுநாவல் புதுமையான பாணியில் எழுதப்பட்ட வித்தியாசமான படைப்பு!

அயன்புரம். த. சத்தியநாராயணன்.

* சுபாவின் விரைவு நாவல்களையே படித்துக் கொண்டிருந்த எங்களுக்குச் சுபா என்ற தென்றலை அடையாளம் காட்டியது, இந்தக் குறுநாவல். அது சரி, 'ஜெ...'யின் ஓவியத்தில் உள்ள போர்டு தேதி, கதையில் உள்ள மாதமாக இல்லாமல் தவறாக உள்ளதைக் கவனிக்கவில்லையா?

மதுரை — 20. மதுரை ஜோ.

* 'எண்ணெய் வளம்' பற்றிய செய்திகள் மிகவும் பயனுள்ளதாக இருந்தன. இதுபோன்ற செய்திகளை அடிக்கடி வெளியிடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மதுரை — 9. ஜி. எம். ஜனார்த்தனன்.

* 'வெறும் நண்பர்கள்' கதை என் போலுள்ள எத்தனையோ இளைய தலைமுறையின் கவலையான, கலவையான சிந்தனைகளின் அருமையான வடிவம். பெரும்பாலான இந்தியப் பெண்களுக்குச் சுயப் பிரக்ஞை என்பது அவளது அறிவைவிட, உடம்பின் மேல்தான் அதிகம் உள்ளது. இந்நிலை மாறினால் ஆண் சிநேகிதம் என்பது இந்த நூற்றாண்டிலேயே இந்தியாவில் சாத்தியம்தான்.

பெங்களூர் — 13. ஜெயஸ்ரீ.



டீ உலகில் உயர் வட்டம்

சக்கரா டீ

உயர் வகுப்பினர் பாராட்டும்
தேநீர்ச் செல்வம் சக்கரா டீ.
சொகுசான சுவைமணம், திட
குணங்களின் முழுமை
வட்டம். தேநீரிலே
சுக போகத்தின் உயர்
வட்டம்: சக்கரா டீ.

உயர் வட்ட ரசிகர்களுக்கு
உயர் வளமுள்ள தேயிலை



சக்கரா டீ

டாடா டீ லிமிடெட்

daCunha/TT/246/87/TM

நிற்க நிழல் வேண்டும்

14

பிரபுவின் உருவத்தைத் தொலைவில் பார்த்ததுமே ஜயசீலன் கேட்டுக்கு வெளியில் வந்து நின்றான்.

அவனை நோக்கி வேகமாக வந்தபிரபுவின் பார்வையில் கேள்வியும், குழப்பமும், ஏமாற்றமும் தெரிந்தன.

"என்ன ஜயசீலன், சீலியா இல்லையா, இங்கே?"

"ஜயசீலன் உதட்டைப் பிதுக்கித் தலையை அசைத்தான்.

பிரபு அவனது தோளை அணைத்தான் ஆதரவாக.

"ரொம்ப வருத்தமாயிருக்கு சீலன்!" என்றான் மெல்லிய குரலில்.

"அவளைப் பத்தி எந்தத் தகவலும் தெரியலியா? உனக்குத் தெரிஞ்சவங்க யாரும் இல்லையா இந்த முகாம்லே?"

"இருக்கார்கள். அவள்ண்டே தம்பியும் அத்தை பெண்ணுமே இருக்கார்கள். அவர்களோடுதான் நான் தங்கியிருக்கேன். இப்ப. சீலியாவைப் பத்தி யாருக்கும் ஒண்டும் தெரியல்லே. வேற ஏதாவது அகதி முகாம்லே இருக்காளாண்டு கண்டுபிடிக்க இன்னும் ஒரு வார காலம் ஆகும்."

இவனை எப்படிச் சமாதானப்படுத்துவது என்று சங்கடப்படுபவனைப் போல் பிரபு மௌனமாக நின்றான்.

"நான் சாதாரணமா கோவிலுக்குப் போகிற வழக்கமேயில்லே ஜயசீலன்! இன்னிக்குப் போனேன். உனக்காக வேண்டிக்கிட்டேன்."

ஜயசீலன் அவனைத் திரும்பிப் பார்த்துச் சிரித்த போது கண்கள் பனித்துப் பளபளத்தன.

"நன்றி ஐயா. ஆனால் கடவுள் எண்டு ஒருத்தர் இருக்காரா? எனக்கு நம்பிக்கை போய் வெகுகாலமாச்சு!"

"எனக்கும் தெரியாது. நானும் பார்த்ததில்லே" என்று பிரபு புன்னகை செய்தான். "கடவுள் எண்டு யாரும் கிடையாது. அதெல்லாம் நம்ம கற்பனை."

"அவர் உண்மையாகவே இருந்தாலும் இப்ப நிச்சயம் பதுங்கியிருப்பார்!" என்றான் பிரபு. "அணுகுண்டைக் கண்டுபிடிச்சுட்டு இப்ப மனுஷன் விழிக்கிற மாதிரி மனிதனை உண்டாக்கிட்டுக் கடவுள் விழிக்கிறாரோ என்னவோ! நம்ம கஷ்டங்களுக்கெல்லாம் நாமேதான் காரணம். ஒருத்தன் கழுத்தை இன்னொருத்தன் நெருக்கப் பார்த்தா அவர் என்ன பண்ணுவார்? படைச்சதோடு அவர் ட்யூட்டி முடிஞ்சது?"

"அப்ப விமோசனமேயில்லே!"

"அப்படிச் சோர்ந்து போகாதே. ஒரு மூணாவது மனுஷன் இல்லாம போக மாட்டான், சண்டை போடற ஆளுங்களைப் பிரிக்க! இன்னிக்கு இந்திய விமானப்படை என்ன செஞ்சுதாம் தெரியுமா?"

"ஓம். கேள்விப்பட்டேன், யாழ்ப்பாணத்திலே உணவுப் பொட்டலங்களைப் போட்டதைத்தானே சொல்கிறீர்?"

"ஆமாம்."

"இதை இந்தியா எப்பவோ செய்திருக்கணும்!"

"இப்பவாவது செய்ததில்லே?"

"இதனாலே கொழும்பு அரசு பயந்திடும் எண்டு நினைக்கிறீரா?"

"பயப்படலாம். இதனாலே ஒரு நல்ல திருப்பம் ஏற்பட்டாலும் ஏற்படலாம்."

அப்படியும் ஒரு திருப்பம் வருமா? தீவிரச் சிந்தனையுடன் ஜயசீலன் தொலைவைப் பார்த்தான்.

"அப்படி ஏற்பட்டா, அதைவிட நல்ல விஷயம் வேறு இருக்க முடியாது பிரபு."

"திருப்பம் ஏற்பட்டா மட்டும் பத்தாது. அதை உபயோகப்படுத்தவும் எல்லாரும் சித்தமாயிருக்கணும்" என்றான் பிரபு யோசனையுடன்.

இவன் எதை மனத்தில் வைத்துக் கொண்டு சொல்கிறான் என்று ஜயசீலனுக்குத் தெரியவில்லை.

"இந்தியாதான் தலையிடணும் பிரபு. நான் குற்றம் சொல்றதா நினைக்காதீர். இந்தியாதான் மத்திய அரசிலிருந்து மாநில அரசு வரை போராளிக் கும்பல்களை ஆதரிக்க, போராட்டத்துக்கு மறைமுகமா ஊக்கம்

வாஸந்தி

கொடுத்திருக்கு. நிலைமை இப்ப பயங்கரமா போனபிறகு அதைச் சமாளிக்க அதுதான் முயற்சி எடுக்கணும்.''

''நிச்சயமா எடுக்கும். அதோட ஆரம்பம் தான் இன்னிக்கு நடந்த விஷயம். வர்றியா ராமேசுவரத்துக்கு? அக்னி தீர்த்தத்திலே உட்கார்ந்து பேசுவோம்?''

''இண்டைக்கு வேண்டாம் பிரபு. நாளைக்கு, நானே உம்மைப் பார்க்க வரேன்!''

பிரபு கிளம்பிச் சென்றதும் ஜயசீலன் மீண்டும் முகாமுக்குள் நுழைந்தான். பள்ளியிலிருந்து ஜோஸப் வந்திருப்பான்; அவனோடு சற்று காலாற நடந்துவிட்டு வரலாம். வீட்டுக்குள் புனிதாவுடன் தனியாக உட்கார்ந்திருக்கக் கூச்சமாக இருந்தது. அவளுக்குப் பேசி மாளவில்லை. அவனை இங்கே அங்கே நகர விடாமல் பிடித்து வைத்துக் கொண்டு, ஊர்க் கதைகளையும் முகாம் கதைகளையும் பேசினாள். இடையிடையே தன்னை இப்படி விட்டுவிட்டுக் கண்காணாத இடத்தில் ஒளிந்திருக்கும் கணவனை நினைத்து அழுதாள். இந்த இரண்டு நாட்களாக அவளது பேச்சிலும், உபசரிப்பிலும் அவன் சற்றுத் திணறிப் போயிருந்தான். தொடர்ந்து இப்படியே காலம் கழியுமானால் தன்னுள் ஒரு நபும்ஸகத்தனம் வந்துவிடும் என்று அச்சமேற்பட்டது.

அவனது நடை தடைப்பட்டது. ஒரு வீட்டுத் திண்ணையில் தெரிந்த முகமாகத் தோன்றிற்று.

''திருச்செல்வம் மாமாதானே?''

''ஆமாம். யார் நீ?''

''யாழ்ப்பாணம் குகதாஸனண்ட மகன்.''

திருச்செல்வம் புருவங்களை நெரித்து நினைவைத் துழாவினார். பிறகு மெல்ல மெல்லப் பிரசன்னம் பரவிற்று.

''ஆ, வாருங்கோ, உம்ம பெயர் நினைவில்லை.''

''ஜயசீலன்.''

திருச்செல்வம் மாமா முன்பு கொழும்பில் பக்கத்து வீட்டுக்காரராய் இருந்தார்.

''நீங்கள் எப்ப வந்தீர்கள் இங்கு?''

''நான் வந்து நாலு வருஷமாச்சு. கொழும்புவிலே நடந்த '83 கலவரத்தும்போது குடும்பத்தோட இங்க வந்துட்டேன். திரும்பிப் போக இயலாம உட்கார்ந்திருக்கேன். கொழும்புலே வீடெல்லாம் இருக்கு. கடைக்குத் தீ வெச்சுட்டான்கள். இரண்டு பெண் பிள்ளைகளை அந்த நிலவரத்திலே காப்பாத்தறது கஷ்டம்னு இங்கே ஓடி வந்துட்டேன். குகதாஸன் எப்படியிருக்கார்? நீங்கள்லாம் யாழ்ப்பாணத்துக்குப் போனதும் தொடர்பு விட்டுப் போச்சு. நீங்கள் இப்பத்தான் வந்தீர்களா? அங்கே நிலைமை இன்னும் மோசம்தானே? இண்டைக்கு இந்திய விமானம் உணவுப் பொட்டலங்களைப் போட்டதாம்.''

அவரது சரமாரியான கேள்விகளில் எதற்கு முதலில் பதில் சொல்வது என்று அவன் யோசிக்கையில் அவர் உள்பக்கம் திரும்பி, ''மகேச்வரி, இரண்டு கப் கோப்பி.



கொண்டு வா!" என்றார்.

உள்ளேயிருந்து ஓர் இளம் பெண் எட்டிப் பார்த்தாள். குட்டைப் பாவாடையும் ப்ளவுசும் அதற்குமேல் தவழ்ந்த இரட்டைப் பின்னல்களும் தெரிந்தன. அவனுக்குச் சட்டென்று சீலியாவின் நினைவு வந்தது. ஆனால் சீலியா பொன்னிறம். இவள் மாநிறம்.

"பத்துப் பன்னிரண்டு வருஷங்கள் முந்தி கொழும்பிலே நம்ம வீட்டுப் பக்கத்து வீட்டிலே குகதாஸன், ஞானசுந்தரின்னு இருந்தார்கள். உனக்கு நினைவிருக்கா?" என்றார் திருச்செல்வம் அவளைப் பார்த்து.

'இல்லை' என்கிறாற்போல் அவள் தலையசைத்து அவனைப் பார்த்துச் சிரித்தாள்.

"அங்கெல்லாம் நிலைமை இப்ப எப்படியிருக்கு?"

அவள் கண்களில் தென்பட்ட ஏக்கத்தைப் பார்த்து, அவன் தலையைக் குனிந்தபடி சொன்னான்.

"வடக்குப் பகுதியில் எல்லாம் ரொம்ப மோசம்தான். தினமும் பம்பர் ஓசைக்கு ஓடறதும் பதுங்கு குழியிலே ஒளியறதும் — இதே வாழ்வாப் போயிட்டது."

"உம், எப்ப நிலைமை சரியாகும், நாமும் சொந்த ஊருக்கு எப்பத் திரும்புவம்னு இருக்கு, தம்பி" என்றார் அவர்.

"நம்ம பொடியன்கள்ளலேதான் வடக்குப் பகுதி ஜனங்களுக்கெல்லாம் பாதுகாப்புங்கறாங்க!"

மகேச்வரியின் குரலில் எக்காளமும் பெருமிதமும் தொனித்தன. கண்களில் நட்சத்திரங்கள் ஜொலித்தன.

"ஓ. ஓரளவுக்கு" என்றான் அவன் ஆயாசத்துடன்.

"விமானப்படைத் தாக்குதல் இல்லேண்டா என்னிக்கோ நம்ம புலிகள் சிங்களப் படையை முறியடிச்சிருப்பான்கள்."

"நான் கிளம்பறேன்!" என்று அவன் எழுந்தான்.

"அட, இரு தம்பி, மகேச்வரி என்ன கதைச்சுக்கிட்டிருக்கே? போ, கோப்பி கொண்டுவா!" என்று திருச்செல்வம் அதட்டலாகச் சொன்னதும் மகேச்வரி உள்ளே ஓடினாள்.

"அப்பா அம்மா எல்லாரும் எங்கே இருக்கார்கள், எப்படி இருக்கார்கள் தம்பி?"

அவன் எங்கேயோ பார்த்தபடி சொன்னான்.

"யாருமில்லே இப்ப. நான் ஒருத்தன் தான்."

"சகுவரா! யாருமேயில்லையா? உன்னையும் சேர்த்து நான்கு குழந்தைகள் உண்டே குகதாஸனுக்கு?"

"ஓமய்யா. இப்ப நான் ஒருத்தன்தான் மிச்சம்."

"சர்வேசுவரா! என்ன அநியாயம் தம்பி! கொழும்பிலேயே நீங்களும் இருந்திருக்கலாம். மக்களுக்கு எதிர்காலம் இல்லேன்னு குகதாஸன் யாழ்ப்பாணத்துக்குக் கிளம்பிப் போனான். எப்படி அப்படி, கூண்டோடு போனாப் போல?"

அவன் பதிலே சொல்லாமல் தலையைக் குனிந்தபடி உட்கார்ந்திருந்தான். மனசு திடீரென்று இறுகிப் போயிற்று. திருச்செல்வம் மேற்கொண்டு ஏதோ சொல்லிக்கொண்டிருந்தார். அவனுக்கு எதுவும் காதிலேயே விழவில்லை.

அப்பா நடுக்கூடத்தில் நின்றிருந்தார். "நான் கொழும்புக்கு ஒரு நடை போயிட்டு வரலாம் என்டு நினைக்கிறேன், ஞானம். ஓய்வுச் சம்பளப் பணம் வரவேயில்லை. எத்தனை முறை கடிதம் எழுதியும் பதிலே இல்லே. நேராப் போய் விசாரிக்கணும். ஜயசிலனையும் கூட்டிக் கொண்டு போறேன்."

"கொழும்பிலே எங்கே தங்குவீர்கள்?"

"அங்கே எத்தனை சிங்கள சினேகிதன்கள் எனக்கு! என்ன கஷ்டம்? குலரத்ன வீட்டிலே தங்கலாம். அவன் இல்லேண்டா இன்னும் எவ்வளவோ பேர். ஒண்ணு சொல்றேன் ஞானம், கொழும்பிலே சிங்கள சினேகிதன்கள் அமைஞ்ச மாதிரி எனக்கு யாழ்ப்பாணத்திலே எந்தத் தமிழ்ச் சினேகிதனும் அமையல்லே. நமக்கு அரசோடதான் விரோதம். சிங்களனோடு இல்லே."

கொழும்பில் கூடப் பிறந்தவருக்கு மேலாகப் பிரியம் காட்டினார்கள் குலரத்னவும் அவர் மனைவி துர்க்காவும். அவர்களுடைய மகன் ஜயரத்னவுக்கு ஜயசிலன் வயது. இருவருமாக ஊர் சுற்றினார்கள். கெலனி பௌத்தராலயத்துக்குச் சென்றார்கள். குலரத்னவின் வீடு பௌத்தலோக மாவத்தவில் இருந்தது. மிக அழகான வீதி. நாற்சந்தியின் ஓர் ஓரமாகப் புத்தரின் சிலை உட்கார்ந்த நிலையில் இருக்கும். இன்னொரு ஓரம் இந்தியச் சாப்பாடு ஓட்டல் சாந்தி விஹார் இருக்கும். பௌத்தலோக மாவத்தவில் நீள நடந்து இருவரும் சாந்தி விஹாரில் வயிறு புடைக்கச் சாப்பிட்டுப் புத்தரை ஒரு வலம் வந்து வீட்டுக்கு ஓடுவார்கள்.

அப்பாவின் வேலை இன்னும் முடியவில்லை. நிதானமாகத்தான் ஆகும் என்றிருந்தது அவனுக்கு. எத்தனை அழகான கம்பீரமான நகரம் கொழும்பு! ஜனங்களும் எத்தனை சினேகிதமாக இருக்கிறார்கள்! யாழ்ப்பாணத்துப் புழுக்கமும் தலைக்குத் தலை அரசியல் பேச்சும் இறுக்கமும் இங்கு இல்லை. இதுவே வேறு உலகமாக இருந்தது. அவர்கள் போய்ச் சேர்ந்த நான்காம் நாள் குலரத்ன கவலையுடன் சொன்னார்.

"இன்னைக்கு சேதி வந்திருக்கு. விடுதலைப் புலிகள் பதின்மூன்று சிங்கள ராணுவ வீரர்களை வடக்கே கொன்று விட்டார்களாம். சடலங்களை நாளை கொழும்புக்குக் கொண்டு வரப் போகிறதாம் அரசு. ஏன் கொண்டு வருகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. இந்தச் செய்கை ஜனங்களின் உணர்ச்சிகளைத் தூண்டி விடலாம். கலகம் ஏற்படலாம். ஆகத்தான், நீங்களும் ஜயசிலனும் வெளியே போகாமல் இருப்பது நல்லது."



''நம்ம மீனு வீட்டுக்காரர் கெட்டிக்காரத்தனத்தைப் பார்த்தியா?''

''என்ன?''

''கிரிக்கெட் மேட்ச் பார்த்துட்டு ஸ்டேடியத்திலிருந்து பத்து பிளாஸ்டிக் பாக்கெட் தண்ணீர் வீட்டுக்குக் கொண்டு வந்திருக்கார்!''

— முரளீஸ்

''நாளைக்கு நான் கண்டிப்பாகப் போகணுமே!'' என்றார் அப்பா. ''நாளைக்குத் தொகையைக் கொடுத்து விடறதா குமாஸ்தா சொல்லியிருக்கார். நாளைக்கு மறுநாள் அவர் வெளியூர் போய் விடுவாராம். சீக்கிரம் போய் சீக்கிரம் திரும்பி விடறேன்.''

''சரி, ஆனால் கவனமாயிருங்கள். ஜயசீலன், தனியாக எங்கேயும் போகாதே. வீட்டுக்குள்ளேயே இருப்பதுதான். பாதுகாப்பு.''

மறுநாள் மதியம் மூணு மணிக்குத்தான் அலுவலகத்துக்குப் போக வேண்டியிருந்தது அப்பாவுக்கு. வீட்டில் எல்லாருமே வெளியே போயிருந்ததால் அவன் தனியாக வீட்டில் இருக்க வேண்டாம் என்று அப்பா அவனையும் தம்முடன் அலுவலகத்துக்கு அழைத்துச் சென்றார். நேற்றைய செய்தி கேட்டதிலிருந்து அவர் பெரிய கலக்கத்தில் இருந்ததாக அவனுக்குப் பட்டது.

அலுவலகத்துக்குப் பஸ்ஸைப் பிடித்துச் செல்லும் போது, வழக்கம்போல்தான் இருந்தது. ஆனால் அலுவலகத்துக்குள் ஓர் இறுக்கம் படர்ந்திருந்தது. அப்பாவின் வேலை முடியத் தாமதமாகி விட்டது. முடிந்ததும் லேசான நிம்மதியுடன் அவர் அவனுடன் கிளம்பினார். தெருவுக்கு வந்ததும் திகைப்பேற்பட்டது.

சாரிசாரியாகச் சிங்களவர்கள் தெருவில். அந்தப் பதின்மூன்று வீரர்களின் சடலங்களையும் இடுகாட்டில் கொண்டு வைத்திருப்பதாகவும் அதைப் பார்க்க அவர்கள் விரைவதாகவும் தெரிந்தது.

அப்பாவின் முகத்தில் பரபரப்புத் தெரிந்தது. அவனுடைய கையை கெட்டியாகப் பிடித்துக் கொண்டார்.

''வா ஜயசீலன், குலரத்ன வீடுதான் நமக்குப் பாதுகாப்பு. கலவரம் ஏற்பட்டாலும் ஏற்படலாம் வேகமாக நட. வாகனம் எதுவும் இப்பக் கிடைக்காது!''

மார்பு படபடக்க, நெற்றி வியர்க்க, அவன் ஓட்டமும் நடையுமாக அவருடன் நடந்தான். இன்னும் பத்து நிமிஷம் நடந்தால் பௌத்தலோக மாவத்த வந்துவிடும்.

திடீரென்று திமுதிமுவென்று ஒரு கூட்டம் எதிர்த்த பக்கத்திலிருந்து தீவட்டிகளை ஏந்தியபடி வந்தது. அப்பா சட்டென்று வேஷ்டியை மடித்துக் கட்டிக்கொண்டார்.

''வா, ஜயசீலன்!'' என்றபடி பக்கத்தில் தென்பட்ட தெருவில் நுழைந்து ஓடினார். அவனும் தலைதெறிக்கப் பின் தொடர்ந்தான். என்னென்னவோ தெருக்கள், சந்துகள். கண்மண் தெரியாமல் ஓடினார்கள். பின்னாலேயே தீவட்டித் தடிக் கும்பல்.

''பர தெமளோ! பர தெமளோ!'' என்ற இரைச்சல்.

முன்பின் உணர்ந்தறியாப் பீதியுடன் அவன் வேகமாக முன்னேறி அப்பா எங்கே என்று கண்காணிக்க மறைவிடத்தில் பதுங்கிப் பார்க்கையில்,

அப்பா நட்ட நடுத்தெருவில் வீழ்த்தப்பட்டிருந்தார் —

''பர தெமளோ பர தெமளோ!'' (அன்னியன் — அன்னியத் தமிழன்)

விடாமல் அடித்தார்கள். தீவட்டித் தீயில் வேஷ்டி பற்றிக் கொண்டது. சற்று நேரம் அப்பா அலறினார். பிறகு அடங்கிப் போயிற்று, குரல். விக்கித்து, ஸ்தம்பித்து, வெறும் கூடாய் அவன் சில நிமிஷங்கள் நின்றான். வியர்வையும் கண்ணீரும் சிறுநீரும் பீதியில் தன்னிச்சையாக வெளிப்பட்டு உடலை நனைத்தன.

''இந்தத் தெரு முடிந்தது அடுத்த தெருவுக்குப் போகணும். நான்கு தமிழர்கள், வீடுருக்கு'' என்றான் ஒரு தீவட்டிக்காரன். கும்பல் திமுதிமுவென்று நகர்ந்தது. தெரு காலியானதும் இன்னமும் எரிந்து கொண்டிருந்த அப்பாவின் உடலருகில் அவன் சென்றான். தெருவில் கிடந்த ஒரு தடியால் அப்பாவைப் புரட்டிப் பார்த்தான். வெறும் மூர்ச்சை இல்லை. மூச்சடங்கிப் போயிருந்தது. அவன் பிறகு குலரத்னவின் வீட்டிற்கு அன்று இரவு எப்படிப் போய்ச் சேர்ந்தான் என்று இன்றுவரை நினைவில்லை. ஒன்றே ஒன்றுதான் நினைவிருக்கிறது —

அவனை அணைத்துக் கொண்டு குலரத்ன விசித்து விசித்து அழுதது —

பிறகு எதிர்பாராமல் அவனது கால்களைக் கட்டிக் கொண்டு சொன்னது.

''இன்றைக்கு நடந்த விஷயத்துக்காக நான் உன்னிடம் மன்னிப்புக் கேட்கிறேன் ஜயசீலன். என் இனத்தாரின் ஈனச் செயலுக்காக மன்னிப்புக் கேட்கிறேன்!''

குலரத்ன அப்பாவை விடப் பெரியவர்.

''தம்பி! தம்பி!''

யாரோ அவன் தோளைத் தொட்டார்கள்.

''இந்தா தம்பி கோப்பி...''

அவன் சுயநினைவுக்கு வந்தான்.

திருச்செல்வம் கோப்பியை நீட்டினார்.

மகேச்வரி அவனை ஆர்வத்துடன் பார்த்தபடி உட்கார்ந்திருந்தாள்.

(தொடரும்)



மலர்வண்ணன்

முள்ளிலும் மலர் தேடி...

சங்கீதாவின் அலறல் என் காதுகளைத் துளைத்தது. பெருமூச்சு விட்டு, நெஞ்சைத் தடவிக் கொண்டேன்.

அம்மாவும் தங்கை ப்ரீத்தாவும் நீளமான பெஞ்சின் ஒரு மூலையில் ஒருவரோடு ஒருவர் ஒட்டிக் கொண்டு, உட்கார்ந்திருந்தனர்.

அம்மா, இவையெல்லாம் சகஜம் என்பது போல் எங்கோ பார்த்துக் கொண்டிருக்க, ப்ரீத்தா மட்டும் மிகவும் கலங்கிப் போயிருந்தாள்.

வெளியே கடுமையான மழை. காற்றோடு கலந்து ஒரு வாயாடிப் பெண்ணைப் போல் சத்தமிட்டுக் கொண்டிருந்தது.

கண்ணாடிக் கதவுகளில் மழைத் துளி. உள்ளே, இந்த மருத்துவமனை வராந்தாவில் கூட இரண்டொரு துளிகள் எட்டிச் சிந்தின.

சங்கீதாவின் அலறல் மீண்டும் கேட்டது.

உள்ளுக்குள் ஏராளமாகப் பயந்து போனேன். ஆனால் அதனை வெளியே காட்டிக் கொள்ள விருப்பம் இல்லை. மேலும் அம்மாவின் அதிகக் கவலையற்ற முகம் எனக்கு ஒரு நிம்மதியையே அளித்தது.

உள்ளே பயந்து, வெளியே தெளிவாக இருந்தேன்.

ப்ரீத்தா தான் ரொம்பப் பாவம்.

ப்ளஸ் டூ படிக்கும் என் தங்கை அவள்! பிறந்த மூன்றாவது நாளே எங்கள் தந்தை போய்விட்டார்.

ப்ரீத்தாவுக்குச் சங்கீதா மீது கொள்ளைப் பிரியம். வீட்டுக்குள் வந்த முதல் நாளே "அண்ணி, அண்ணி!" என்று கட்டிக்கொண்



டாள்.

பொதுவாகவே ப்ரீதாவுக்கு மனிதர்களை மிகவும் பிடிக்கும். ஒரே நிமிஷத்தில் ஒட்டிக் கொள்வாள். எந்த உம்மணாமூஞ்சியையும் பழக வைத்து விடுவாள்.

சங்கீதாவை அவளுக்குப் பிடித்துப் போனதில் எனக்கு அவ்வளவாக ஆச்சரியம் இல்லைதான். ஆனாலும் நன்றி சொன்னேன்.

ஏன்?

மேய்ப்பவனுக்கு நொண்டி ஆட்டின் மீதுதான் அதிகப் பிரியமாமே?

நான் எப்படி என் சங்கீதாவை, அவளுக்காகவே நேசித்தேனோ, அப்படியே என் தங்கை ப்ரீத்தாவும் நேசித்தாள்.

ஆனால் என் 'அம்மா?

'ஆரம்பத்தில் சலித்துக் கொண்டது என்னவோ உண்மைதான்.

"ஏண்டா ராஜு, இது தேவைதானா?"

"அதனால் என்ன அம்மா? மனசுதான் முக்கியம். அவளுக்கு அது நேராக, அழகாக இருக்கு. அப்புறம் என்ன?"

"நாலு பேர் என்னடா சொல்லுவாங்க? அப்படி என்ன, நமக்குப் பொண்ணுக்கா பஞ்சம்?"

அம்மாவின் ஆரம்ப கால வார்த்தைகள் என் மனத்தை மென்மையாகப் புண்படுத்தின.

"சங்கீதா கூட ஒரு பெண்தான், அம்மா!"

"ஆனால் அவளுக்கு..."

"இருந்துவிட்டுப் போகட்டும். அது அவள் தப்பா? கேட்டுக் கிடைக்கிற பொருளாக அது இருந்தால், நாம் கூட இன்னும் அழகாக இருப்போம்!"

"எனக்குத் தெரிந்ததைச் சொல்லி விட்டேன், இனி உன் இஷ்டம்!"

அம்மா உள்ளூரப் புண்பட்டுப் போயிருக்கிறாள் என்பதனைப் புரிந்து கொண்டேன்.

"அம்மா, வருத்தப்படாதே! அவள் மனசு தங்கம். ரெண்டு நாள் பழகிப் பாரு. அப்புறம் சொல்லு!"

"உன்னை விட்டால் எனக்கு வேறு யார் இருக்கா? உன்னுடைய நன்மை தான் முக்கியம். பத்தாம் வகுப்புப் படிக்கிற தங்கையையும் ஞாபகம் வச்சுக்க."

அம்மா புடவைத் தலைப்பால் கண்களைக் கசக்கும்போது, நான் அவளைப் புன்னகையோடு நெருங்கினேன்.

"சங்கீதாவை வாய்க்கு வாய் நீ பாராட்டப் போவதை நான் கேட்கத்தான் போகிறேன், அம்மா!"

சங்கீதா வந்த பதினைந்தாம் நாளே அம்மா மாறிப் போனாள்.

"ராஜு, உன் பெண்டாட்டி தங்கம்பா. நல்ல குணம். பயங்கர சுறுசுறுப்பு. போன ஜன்மத்தில் நீ செய்த புண்ணியம்தான், உனக்கு இப்படியொரு பெண்டாட்டி கிடைச்சிருக்கா!"

என் இதயம் நிறைந்தது.

திருமணம் முடிந்து நான்கு மாதங்கள் ஆகியிருந்த போது, ஒரு நாள் அந்தக் கடிதம் வந்தது.

எது அவளுக்குப் பலவீனமாக இருந்ததோ, அதுவே அவளுக்கு ஓர் அசகாய பலத்தைக் கொடுத்து விட்டது.

ஒரு நல்ல நிறுவனத்தில் கைநிறையச் சம்பளத்தோடு வேலை!

கை நிறைய என்றால்?

ஆறு ஆண்டு காலமாக ஆசிரியராக வேலை பார்க்கும் என் சம்பளத்தை விட, அவள் முதல் மாதச் சம்பளம் அதிகம். போதாக் குறைக்கு மூன்று நான்கு மாத போனஸ் வேறு!

என் சங்கீதா மாறவே இல்லை. முதல் மாதச் சம்பளத்தை என் காலில் விழுந்து வணங்கிக் கொடுத்தாள்.

"நீ மனைவி, என் அடிமை அல்ல!" என்றேன்.

"பதவி வரும்போது பணிவு வரவேண்டும்" என்றாள்.

பணத்தை என்னிடம் இருந்து, அழகாகப் பறித்துக் கொண்டு போய், அம்மாவிடம் கொடுத்தாள். காலில் விழுந்து வணங்கினாள்.

"இனிமேல் நான் ரொம்பவும் பணிவாக இருக்கணும். ஏன்னா எனக்கு இப்போது புதுசாக ஒரு எதிரி வந்திருக்கான்!" என்றாள் சங்கீதா.

"எதிரியா, யார் அவன்?" என்றேன்.

"என் சம்பாத்தியம்!" என்றாள்.

வாஞ்சையோடு அணைத்துக் கொண்டேன்.

இந்தப் பண்பும் பணிவும்தானே பெண்களை உயர்த்துகின்றன? காலம் காலமாய் நிலைத்துப் போன அவர்களுடைய உரிமையற்ற வாழ்வுக்கும் இந்த எண்ணம்தானே காரணம்?

ஆனால், என் அம்மா, இவற்றையெல்லாம் சொல்லிச் சொல்லிப் புல்லரித்துப் போனாள்.

அம்மாவிடம் ஒரு குணம். நானும் என்

தங்கையும் செய்யும் நல்ல காரியங்களை எல்லோரிடமும் சொல்லிச் சொல்லி மகிழ்வாள். கொஞ்சம் நிறையவே அளப்பாள்.

இப்போது கேட்பானேன்?

ஊரில் எல்லோரும் என் சங்கீதாவைப் புகழ ஆரம்பித்துவிட்டனர். ஆரம்பத்தில் அவளுடைய குறையை நினைத்து விமர்சித்தவர்கள், பிறகு, "இவ்வளவு நல்ல பெண்ணுக்கா இப்படி? அந்த ஆண்டவனுக்குக் கண்களே கிடையாதா?" என்று விமர்சித்தார்கள்.

சங்கீதாவின் கால்களைப் பார்க்கும் போதெல்லாம் நான் தவித்துப் போவேன்.

அழகாய், வழவழப்பாய், சிவப்பாய்.... வலது கால்! வாழைத் தண்டின் நுனியில் தாமரைப் பூ எப்படிப் பூக்கும்? பூத்திருந்ததே!

ஆனால் இடது கால்?

பிறக்கும் போதே அது ஊனம்.

என் சங்கீதாவின் அழகு அவள் நடையில் இல்லை. ஆனால் நடத்தையில் இருந்தது.

விந்தி விந்தி நடப்பாள். பாவமாகத் தோன்றும்.

அப்படியிருந்தாலும் அவள் கவலைப்பட்டதில்லை. 'இந்த வேலை என்னால் முடியாது' என்று சொன்னதில்லை.

வீடு, ஆபீஸ் என்று பறப்பாள்.

இவ்வளவு ஏன், நேற்று வரை எதை நிறுத்தினாள்? ஆபீஸ் கூடப் போயிருந்தாள்.

அம்மாவும் ப்ரீத்தாவும் எவ்வளவோ சொன்னார்கள்...

"சங்கீதா, இந்த நிலைமையில் நீ வேலை செய்யலாமா?"

"இப்போதுதான் இன்னும் நிறையச் செய்யணும் அம்மா!"

அம்மா அதை ஒப்புக் கொண்டாள்.

"சரி விடுப்பா. செய்யற வரைக்கும் நல்லது. அப்போதுதான் பிரசவம் சுலபமாக இருக்கும்!"

பள்ளியில் என் சக ஆசிரியர்களோடு பேசிக் கொண்டிருந்தபோது, அவர்களும் அதையே சொன்னார்கள்.

ஆனால், அவர்கள் அதை மட்டுமா சொன்னார்கள்?"

"ராஜுவோட மனைவிக்குக் கால் ஊனம் தானே?"


"ஆமாம், பிறவி ஊனம்!"

"அப்போ, பிறக்கிற குழந்தை கூட ஊனமாகப் பிறக்கலாம்!" தற்செயலாகக் கேட்டு அதிர்ந்தேன்.

வெளியே இன்னும் மழை விடவில்லை. ஸ்கூட்டர்களும் கார்களும் நனைந்து கொண்டிருந்தன. வராந்தாவில் சிலர் மழைச் சத்தத்தை மீறிப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

"வீல்..." குழந்தை அழும் சப்தம் என் காதுகளைத் தேனில் குளிப்பாட்டியது. அழுகையை நினைத்து மகிழும் ஒரே விநாடி இது.

நர்ஸ் வெளியே வந்து, "பெண் குழந்தை!"



இவன் தூக்கத்துல கூட மால்கம் மார்ஷலே எதிர்க்க தயாரா இருக் கான் போலிருக்கே ?
நீ ஒண்ணு! கொசுக் களை எதிர்க்க இவன் இப்படித்தான் தூங்குவான்!
கொசுக்களை 'ரன்' எடுக்கச் செய்கிறது டார்டாய்ஸ் கொசுவர்த்திச் சுருள்
ஏய், சாம்ராஜ்! பேரர் வேஷத்துல போலீஸ் காரன் வந்துருக்கான் போலிருக்கே.
பயப்படாதே! கோவா கொசுக்கள் நம்ம முகத்தையும் மாத்திடுச்சு
தப்பிக்கும் கொசுக்களிடமிருந்து வழி டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருள்
தயாரிப்பாளர்:
பாம்பே கெமிகல்ஸ் ப்ரைவேட் லிமிடெட்
..போர்ட், பம்பாய்-400 023, ..போன்: 273831

என்றாள். ''சபாஷ்!''

''அப்போ, பிறக்கிற குழந்தை கூட...'' காது கூட்டது.

''பார்க்கலாமா, சிஸ்டர்?''

''சில நிமிஷங்கள் கழித்து!''

பதினைந்து நிமிடங்கள் கழித்து உள்ளே நுழைந்த போது, என் கண்மணியின் நாணப் புன்னகை என்னை வரவேற்றது.

நெற்றியில் முத்தமிட்டு, குழந்தையிடம் போனேன். துணியை விலக்கி அந்தப் பிஞ்சின் இடது காலைத் தடவிப் பார்த்தேன்; உற்றுப் பார்த்தேன்.

சங்கீதாவின் முகம் சட்டென்று மாறிப் போயிற்று.

கண்களில் கண்ணீர் கடகடவென்று கொட்ட ஆரம்பித்தது.

குழந்தை ஊனமில்லை என்ற சந்தோஷத்தோடு அவளிடம் திரும்பிய நான் திடுக்கிட்டுப் போனேன்.

''ச... சங்கீதா?''

உதடுகளைக் கடித்துக் கொண்டு விம்மினாள், சங்கீதா.

''என்ன ஆச்சு?''

''உங்க பொண்ணு கால் நல்லா இருக்கா? உங்களுக்கு மகிழ்ச்சிதானே?''

''.......''

''ஊனம் அசிங்கம்தானே? அப்போ நான் அசிங்கம்!''

''சங்கீதா?''

''உங்க பொண்ணு அழகாக இருக்கணும், இல்லையா? அப்படித்தானே? இவ்வளவு நாட்கள் என் ஊனத்தை நீங்கள் மறக்கலே?''

நான் பதறினேன்.

''நான் எவ்வளவு சிரமப்பட்டு என்னங்க, பயன்? இந்த ஒரு விநாடியில் எல்லாமே போச்சு. என்னுடைய ஊனத்தை ஒரு குறைதான்னு நீங்க நினைச்சிருக்கீங்க. உங்க பொண்ணுக்கு இந்த நிலைமை வரக் கூடாதுன்னு விரும்பியிருக்கீங்க. உங்க உள் மனம் புரிஞ்சு போச்சு.''

''சங்கீதா... நான்... அப்படியெல்லாம்...''

''வார்த்தைகளை ஏங்க வீண் பண்றீங்க? உங்க செயலே உங்க மனசைக் காட்டி விட்டது...''

''.......''

''என்னங்க, ஊனம் தப்பா?''

நான் பதில் சொல்லத் தெரியாமல் விழித்தேன்.

என் செயல் ஒருவேளை என் அடி மன உணர்வைத்தான் காட்டி விட்டதோ?

என் அடி மனமே, உனக்குள் அழுக்குத் தானா?

என் சங்கீதாவை நானே அவமானப் படுத்தி விட்டேனா?

சங்கீதா என்னையே பார்த்துக் கொண்டிருந்தவள், சட்டென்று முகம் மாறினாள்.

''கவலைப்படாதீங்க. எல்லாம் நமது பழக்கம். ஊனங்கள் தாழ்வில்லை. அதற்கு மதிப்புக் கொடுக்கக் கூடாது. இயற்கையாக வந்ததை நாம் என்ன செய்ய முடியும்? அழகோ, ஊனமோ, மனசுதான் முக்கியம். எதையும் இகழ வேண்டியது இல்லை.''

''சாரி, டியர்!''

''சொல்லப் போனால் ஊனங்கள் ஒரு ப்ளஸ் பாய்ண்ட்! எப்படித் தெரியுமா? நாமும் வாழ்ந்து காட்டணும் என்கிற வெறியை அதுதான் ஊட்டுகிறது. அதனாலே குறைகளைக், கண்டு சந்தோஷப்படணும். எதிர் நீச்சல் போடணும்.''

புன்னகையோடு, ''ஓ. கே... அதனால் என்ன? அது ஒரு பிரச்னையே அல்ல!'' என்றேன்.

இரண்டு பேரும் புன்னகை செய்தோம்.

உண்மைதான், ஊனங்களில் என்ன தாழ்வு? என் கண்மணி சொன்னது போல அது கூட ஒரு ப்ளஸ் பாய்ண்ட்தான்.

மாதம் ஒரு மாவட்டம்

கல்கி ஏந்தும் சமுதாயப் பணி



மீண்டும் புதுக்கோட்டை, நெல்லை — கட்டபொம்மன், சேலம் மாவட்டங்களுக்கு வருகிறோம்!

கடந்த ஜனவரி, பிப்ரவரி, மார்ச் மாதக் கல்கி இதழ்களில் புதுக்கோட்டை, நெல்லை — கட்டபொம்மன், சேலம் மாவட்டங்களின் பிரச்னைகள் பற்றி எழுதியிருந்தோம். கூடவே, அந்தந்த மாவட்டக் கலெக்டர் பேட்டியையும் வெளியிட்டிருந்தோம்.

இப்போது அந்தப் பிரச்னைகளெல்லாம் எப்படியிருக்கின்றன? தீர்வு காணப்பட்டனவா, இல்லையா? தீர்வு காணப்பட்டவற்றையும் எழுதுங்கள்; தீர்வு காணப்படாதவற்றையும் எழுதுங்கள். மறுபடியும் நமது நிருபர்கள் வரும் டிசம்பர் மாதத்தில் இந்த மூன்று மாவட்டங்களுக்கும் ரீ — விசிட் செய்ய வருகிறார்கள்.

கடிதங்கள் வந்து சேர வேண்டிய கடைசித் தேதி: 20.11.87.

உடனடியாக எழுதி அனுப்புங்கள்.

— ஆசிரியர்



அத்தியாயம் 26

இரத்தம் கேட்ட கத்தி!

அந்த வீர வைஷ்ணவர் எப்படி அங்கு வந்து சேர்ந்தார், எதற்காக வந்திருக்கிறார் என்பதைப் பற்றி வந்தியத்தேவனுடைய உள்ளம் கலக்கமடைந்திருந்தது. ஆயினும் அதை அவன் வெளியில் காட்டிக் கொள்ளவில்லை.

''என்ன வேடிக்கையைச் சொல்வது? சற்று முன்னால்தான் உங்களைப் பற்றி நினைத்துக் கொண்டேன். நிமிர்ந்து பார்த்தால் தாங்கள் சுவரேறிக் குதித்து வருகிறீர்கள். 'கொடுக்கிற தெய்வம் கூரையைப் பொத்துக் கொண்டு கொடுக்கும்' என்று சொல்கிறார்களே, அது சரிதான்!'' என்றான்.

''அப்பனே! சற்று முன்னால் என்னைப் பற்றி நினைத்தாயா? எதற்காக? இந்த நர மனுஷனைப் பற்றி நீ ஏன் நினைக்க வேண்டும்? சாக்ஷாத் இராமபிரானைப் பற்றி நினைத்தாலும் பயன் உண்டு...''

''தங்கள் வாய்க்குச் சர்க்கரை தான் போட வேண்டும். முதலில் நான் இராமபிரானைப் பற்றித்தான் நினைத்தேன். இங்கு வரும்போது கடலின் அக்கரையில் இராமேசுவரக் கோபுரம் தெரிந்தது. இராமர் அங்கே தானே சிவனைப் பூஜை செய்து இராவணனைக் கொன்ற பாவத்தைப் போக்கிக் கொண்டார் என்று எண்ணினேன்...''

''நில்லு, தம்பி! நில்லு!''

''நிற்க முடியாது, சுவாமிகளே! என்னால் நிற்க முடியாது. நடந்து நடந்து, நின்று நின்று, என் கால்கள் கெஞ்சுகின்றன. தாங்களும் கருணை புரிந்து உட்காருங்கள். அப்புறம், இராமரைப் பற்றி நினைத்தேனா? உடனே இராம பக்தனாகிய அனுமாரைப் பற்றி நினைவு வந்தது. அனுமாரைப் பற்றி எண்ணியதும், தங்கள் நினைவு வந்தது. உடனே பார்த்தால், தாங்களே வந்து விட்டீர்கள். சுவரேறிக் குதித்து மட்டும் வந்தீர்களா! அல்லது அனுமாரைப்போல் கடலையே தாண்டிக் குதித்து வந்தீர்களா?''

''தம்பி! மகா பக்த சிரோமணியான அனுமார் எங்கே? அடியேன் எங்கே? அனுமார் இந்த இலங்கைக்கு வந்து அக்ஷய குமாரன் முதலிய ராட்சதர்களை அதாஹதம் செய்தார். என்

அமரர் கல்கி

ஞல் கேவலம் ஒரு பூனைக்கு வழி சொல்ல முடியவில்லை. இதோ பார்! எப்படி ஒரு பூனை என் கால்களைப் பிருண்டி இரத்தக் காயம் செய்துவிட்டது?'' என்று ஆழ்வார்க்கடியான் தன் கால்களில் ஏற்பட்டிருந்த காயங்களைச் சுட்டிக் காட்டினான்.

''அடடா! இப்படியா நேர்ந்து விட்டது? ஆனால், கேவலம் ஒரு பூனையோடு தாங்கள் சண்டைக்குப் போன காரணம் என்ன?......''

''நான் சண்டைக்குப் போகவில்லை. அதுவேதான் என்னுடன் வலுச் சண்டைக்கு வந்தது...''

''அது எப்படி, சுவாமிகளே!''

''உன்னைத் தேடிக் கொண்டு நான் வந்தேன். வாசற்காவலர்களுக்கு டிமிக்கி கொடுத்துவிட்டுக் கொல்லைப் புறச் சுவர் வழியாக ஏறிக் குதித்தேன். கீழே நான் கால் வைக்கிற இடத்தில் வேண்டுமென்று அந்தப் பூனை தன் வாலை நீட்டிக் கொண்டிருந்தது. என் கால் அதன் வாலை அப்படி இலேசாகத் தான் தொட்டது. இருந்தாலும், அந்தப் பொல்லாத பூனை தன் கால் நகங்களினால் என்னைத் தாக்கத் தொடங்கி விட்டது. தம்பி! நான் சொல்வதைக் கேள்! புலியோடு சண்டை போட்டாலும் போடலாம்; ஆனையோடு சண்டை போட்டாலும் போடலாம்; பூனையோடு மட்டும் சண்டை போடக் கூடாது!''

''சுவாமிகளே! அந்த இரகசியம் எனக்கு இப்போது தெரிந்து போய் விட்டது......''

''எந்த இரகசியம்?''

''அந்தப் பூனை இங்கே என் அறைக்கும் வந்தது. என் நெற்றியில் வாலினால் தடவிக் கொடுத்தது. என்னோடு கொஞ்சி விளையாடியது. என்னை நகத்தினால் பிருண்டவில்லை. உம்மை மட்டும் தாக்கிப் பிருண்டியது! அதற்குக் காரணம் என்ன? வீரவைஷ்ணவர்களைக் கண்டால் பிடிக்காத வீர சைவப் பூனை அது!......''

''ஓகோ! அப்படியோ? இந்த யோசனை எனக்குத் தோன்றாமல் போயிற்றே? வீர சைவப் பூனை என்று தெரிந்திருந்தால் தடியினால் நாலு திருச்சாத்துச் சாத்தியிருப்பேனே?''

''உம் கையில் தடி இல்லாததே நல்லது. ஏனென்றால், இந்த க்ஷேத்திரத்துக்கு வந்ததிலிருந்து என் உடம்பிலே கூட வீர சைவ இரத்தம் கொதிக்கத் தொடங்கியிருக்கிறது. என் உறையிலுள்ள கத்தி 'வீர வைஷ்ணவ இரத்தம் வேண்டும்' என்று அழுகிறது. நீர் எனக்குச் செய்த பேருதவியை நினைத்து அதை அடக்கி வைத்திருக்கிறேன்!''

''அப்பனே! உனக்கு நான் ஓர் உதவியும் செய்யவில்லையே?''

''வைஷ்ணவரே! தங்கள் சகோதரியாகிய பழுவூர் இளையராணியைப் பற்றி எனக்கு நீர் சொல்லவில்லையா?''

''ஆமாம்; சொன்னேன்.''

''பழுவூர் இளையராணி கடம்பூருக்கு அருகில் மூடு பல்லக்கில் போனபோது, திரை விலகியதே, அப்போது அந்தத் தேவியை நீர் எனக்குச் சுட்டிக் காட்டவில்லையா?''

''ஆம், ஆம். அதனால் என்ன?''

''சொல்லுகிறேன். அதே பல்லக்கு தஞ்சைக் கோட்டைக்கருகில் சென்று கொண்டிருந்தபோது நான் பார்த்தேன். பல்லக்குச் சுமப்பவர்கள் வேண்டுமென்று வந்து என் குதிரையின் மேல் இடித்தார்கள். நான் நியாயம் கோருவதற்காகப் பல்லக்கின் திரையை விலக்கினேன்......''

''உள்ளே இருந்தது யார்?''

''பழுவூர் இளையராணி சாக்ஷாத் நந்தினி தேவிதான்!''

''ஓஹோ! நீ அதிர்ஷ்டசாலி! நான் ஆன மட்டும் முயன்றும் நந்தினியைப் பார்க்க முடியவில்லை. உனக்கு அது கைகூடி விட்டதே!''

''அதிர்ஷ்டம்வரும்போதுஅப்படித் தான் தானாகவே வரும்!''

''அப்புறம்?''

''நான் தங்கள் பெயரைச் சொன்னேன். தேவிக்கு முக்கியமான செய்தி தாங்கள் சொல்லி அனுப்பியிருப்பதாகக் கூறினேன்......''

''நானும் பார்த்தாலும் பார்த்தேன். உன்னைப்போல்கூசாமல்பொய் சொல்லுகிறவனை இந்தப் பிரபஞ்சத்தில் பார்த்ததே கிடையாது......''

''வைஷ்ணவரே! என் மூதாதை

களுக்குக் கவிஞர்களின் பேரில் மிக்க பிரியம். அவர்களே கவிதைகளும்பாடியிருக்கிறார்கள்......''

''அதனால் என்ன?''

''கவி பரம்பரை இரத்தம் என் உடம்பிலும் ஓடுகிறது. அதனால் சில சமயம் கற்பனை பொங்கி வருகிறது. உம்மைப்போன்ற பாமரர்கள் அதைப் பொய் என்று சொல்வார்கள்......''

''நல்லது; அப்புறம் என்ன நடந்தது?''

''என் கற்பனையைக் கேட்டு வியந்து நந்தினிதேவி பழுவூர் முத்திரை மோதிரத்தைக் கொடுத்தார். அரண்மனையில் வந்து பார்க்கச் சொன்னார்......''

''போய்ப் பார்த்தாயா?''

''பின்னே, பார்க்காமலிருப்பேனா? உடனே போய்ப் பார்த்தேன். என் வீர தீர பராக்கிரமங்களைப் பற்றி நானே சொல்லித் தெரிந்து கொண்ட நந்தினி தேவி எனக்கு ஒரு முக்கியமான வேலை கொடுத்தார்.''

''அது என்ன வேலை?''

''இந்த இலங்கையில் மதுரைப் பாண்டிய வம்சத்து மணிமகுடமும் இந்திர மாலையும் இருக்கின்றனவாம். இலங்கை அரச குடும்பத்தார் மலைநாட்டில் ஒளித்து வைத்திருக்கிறார்களாம். 'அந்த நகைகளை எப்படியாவது தேடிக் கொண்டு வந்துவிடு!' என்று சொல்லி அனுப்பினார். அது இவ்வளவு கஷ்டமான வேலை என்று எனக்குத் தெரியாமல் போயிற்று...''

''பெரிய பழுவேட்டரையரின் பொக்கிஷத்தில் உள்ள ஆபரணங்கள் ஆயிரம் கழுதைப் பொதி கனமிருக்கும்என்கிறார்கள். அவ்வளவும்இளைய ராணிக்குப்போதவில்லையாக்கும். சரி, கொண்டு வந்தால், உனக்கு என்ன தருவதாகச் சொன்னாள்?''

''தஞ்சைக் கோட்டைக் காவலைச் சின்னப் பழுவேட்டரையரிடமிருந்து பிடுங்கி எனக்குத் தந்துவிடுவதாகச் சொன்னார்......''

''தம்பி! தம்பி! தஞ்சைக் 'கோட்டைக் காவல் உனக்குக் கிடைத்தால், தட்டுத் தடங்கலில்லாமல், நான் கோட்டைக்குள் வரலாம் அல்லவா?''

''அழகாய்த்தானிருக்கிறது. எனக்குத் தஞ்சைக் கோட்டைக் காவல் கிடைக்கிற வழி என்ன? நான்தான் இந்த ஊரில் வந்து இப்படி அகப்பட்டுக்கொண்டேனே?'' என்று வந்தியத்தேவன் மிகவும் சோகமான குரலில் கூறினான்.

''ஏன் அகப்பட்டுக் கொண்டாய்? எதற்காக உன்னைச் சிறைப்படுத்தியிருக்கிறார்கள், தெரியுமா?'' என்று ஆழ்வார்க்கடியான் கேட்டான்.

''பழுவூர்ராணிகொடுத்தமுத்திரை மோதிரத்தை என்னுடன் கொண்டு வந்தேன். இங்கேயும் அதற்குச் செல்வாக்கு இருக்கும் என்று எண்ணினேன். அதுதான் தவறாய்ப் போயிற்று.''

''அது தவறுதான், தம்பி, பெரிய தவறு! இங்கே சேநாதிபதி கொடும்பாளூர்ப் பெரிய வேளார் அல்லவா? பழுவூர் வம்சத்துக்கும் கொடும்பாளூர் வம்சத்துக்கும் பெரும்பகை என்பது உனக்குத் தெரியாதா?''

''தெரியாமல் வந்துதான் அகப்பட்டுக்கொண்டேன். என்ன செய்கிறதென்று தெரியவில்லை...''

''தம்பி! நீ கவலைப்பட வேண்டாம்!''

''கவலைப்படாமல்......''

''உன்னை விடுதலை செய்வதற்காகவே நான் இங்கு வந்திருக்கிறேன்......''

''ஓகோ!''

''உன்னை ஒரு சமயம் ஓர் உதவி கேட்டேன். நீ மறுத்து விட்டாய். ஆயினும் நான் உனக்கு உதவி செய்ய வந்தேன். என்னுடன் எழுந்து வா! இந்தக் கணமே இச்சிறையிலிருந்து தப்பிவிடலாம்!''

''வைஷ்ணவரே! தாங்கள் சீக்கிரமே இங்கிருந்து போய் விடுங்கள்!''

''ஏன், அப்பனே......!''

''என் உறையிலுள்ள கத்தி அதிகமாகப் புலம்பத் தொடங்கியிருக்கிறது. ஒரு 'வீர வைஷ்ணவனுடைய இரத்தம் வேண்டும்' என்று கேட்கிறது.''

''கேட்டால் கேட்கட்டுமே! என் உடம்பில் வேண்டிய இரத்தம் இருக்கிறது. உன் கத்திக்குத் தேவையானால் கொஞ்சம்சாப்பிட்டு விட்டுப்போகட்டும். நீ எழுந்து என்னுடன் வா!''

"இல்லை, நான் வர முடியாது!"

"காரணம் என்ன?"

"கண்ணைச் சுற்றிக் கொண்டு எனக்குத் தூக்கம் வருகிறது. எத்தனையோ நாட்களாக இரவில் நான் தூங்கவில்லை. இன்றைக்கு நன்றாய்த் தூங்குவது என்று தீர்மானித்திருக்கிறேன். அதனால்தான் பூனையைக் கூடத் தூக்கி எறிந்தேன்."

"தம்பி! இது என்ன இப்படிச் சொல்லுகிறாய்? இளையபிராட்டி குந்தவை தேவியிடம் நீ ஒப்புக் கொண்ட காரியத்தை இப்படித்தானா நிறைவேற்றப் போகிறாய்? இந்த ஓலையைப் 'பொன்னியின் செல்வன்' கையில் சேர்ப்பிக்கும் வரையில் இரவென்றும் பகலென்றும் பார்க்காமல் பிரயாணம் செய்வேனென்று நீ ஒப்புக் கொள்ளவில்லையா!"...... இவ்விதம் சொல்லி ஆழ்வார்க்கடியான் தன்னுடைய மடியிலிருந்த ஓலையை எடுத்து வந்தியத்தேவனிடம் கொடுத்தான்.

அதை ஆர்வத்துடன் வந்தியத்தேவன் வாங்கிக் கொண்டான். இது வரையில் ஆழ்வார்க்கடியான் தன் வாயைப் பிடுங்கி வஞ்சித்து ஏமாற்றப் பார்க்கிறான் என்றே அவன் எண்ணியிருந்தான். இப்போது அந்த எண்ணம் மாறியது.

"இந்த ஓலை தங்களிடம் எப்படி வந்தது?" என்று கேட்டான்.

"சேநாதிபதி விக்கிரமகேசரிதான் கொடுத்தார். இதோ இந்தப் பழுவூர் பனை இலச்சினையையும் திருப்பிக் கொடுக்கச் சொன்னார். உனக்கு எப்போது இஷ்டமோ அப்போது பிரயாணம் புறப்படலாம் என்றும் சொன்னார்......"

"வைஷ்ணவரே! தங்களுக்கு என் மனமார்ந்த நன்றி."

"நன்றியையெல்லாம் சேர்த்து வைத்துக் கொள். 'சமயம் வரும் போது கொடுக்கலாம்."

"ஐயா! இளவரசர் தற்சமயம் எங்கே இருக்கிறார் என்று தெரியுமா?"

"அது யாருக்கும் தெரியாது. அநுராதபுரத்திலிருந்து மலை நாட்டுக்குச் சென்றிருக்கிறார். தேடிக் கண்டு பிடித்தேயாக வேண்டும். உன்னோடு வழிகாட்டிப் போகும்படி சேநாதிபதி எனக்கும் கட்டளையிட்டிருக்கிறார். நீ விரும்பினால் வருகிறேன்."

வந்தியத்தேவனுக்கு மீண்டும் சிறிது சந்தேகம் உண்டாயிற்று.

"சுவாமிகளே! புறப்படுவதற்கு முன்பு சேநாதிபதியை நான் பார்க்கலாமா?" என்று கேட்டான்.

"அவசியம் பார்க்கலாம். பார்த்துவிட்டுத்தான் பிரயாணம் கிளம்ப வேண்டும். வானதி தேவியைப் பற்றிச் சேநாதிபதியிடம் தெரிவியாமல் போகலாமா!" என்றான் ஆழ்வார்க்கடியான்.

இதைக் கேட்ட வந்தியத்தேவன் இந்த வீர வைஷ்ணவனுக்கு உண்மையிலேயே மந்திர வித்தை கைவந்திருக்குமோ என்று வியப்படைந்தான்.

அத்தியாயம் 27
காட்டுப் பாதை

கொடும்பாளூர்ப் பெரிய வேளாராகிய சேநாதிபதி பூதி விக்கிரமகேசரி வயது முதிர்ந்த அநுபவசாலி; பல போர்க்களங்களில் பழந்தின்று கொட்டையும் போட்டவர். சோழ குலத்தாருடன் நெருங்கிய நட்பும் உறவும் பூண்டவர்.

அவருடைய சகோதரராகிய கொடும்பாளூர்ச் சிறிய வேளார் சில ஆண்டுகளுக்கு முன்னால் இலங்கைப் போர்க் களத்தில் வீர சொர்க்கம் அடைந்தார். அவருடன் சென்ற சைன்யமும் தோல்வியடைந்து திரும்ப நேர்ந்தது. அந்தப் பழியைத் துடைத்துக் கொடும்பாளூரின் வீரப் பிரதாபத்தை

மீண்டும் நிலை நாட்டுவதில் அவர் பெரிதும் ஆத்திரம் கொண்டிருந்தார். ஆகையாலேயே சற்று வயதானவராயிருந்தும் இலங்கைப் படைக்குத் தலைமை வகித்து அங்கு வந்திருந்தார்.

இலங்கைப் போரை நன்கு நடத்த முடியாமல் பழுவேட்டரையர்களால் விளைந்த இடையூறுகளைப் பற்றி முன்னமே பார்த்தோமல்லவா? நெடுங்காலமாக அந்த இரண்டு சிற்றரசர் குலத் துக்கும் ஏற்பட்டிருந்த போட்டியும் பகைமையும் இதனால் இப்போது அதிகமாய் வளர்ந்திருந்தன.

எனவே, பழுவூர் முத்திரையிட்ட இலச்சினையுடன் அகப்பட்டுக் கொண்ட வந்தியத்தேவன் பாடு சேநாதிபதி பெரிய வேளாரிடம் கஷ்டமாகத்தான் போயிருக்கும். அதிர்ஷ்டவசமாக அநிருத்தப் பிரம்மராயரிடம் இதைப் பற்றி அவர் பிரஸ்தாபிக்க நேர்ந்தது. வந்தியத்தேவனைப் பற்றிய உண்மையை ஆழ்வார்க்கடியானிடமிருந்து தெரிந்து கொண்ட அநிருத்தர் அவனையே சேநாதிபதி பூதி விக்கிரம கேசரியிடம் சென்று உண்மையைத் தெரியப்படுத்தும்படி அவசரமாக அனுப்பியிருந்தார்.

வாணர் குலத்து வீரகுமாரனை மேலும் கீழும் உற்றுப் பார்த்த சேநாதிபதி பூதி விக்கிரம கேசரிக்கு அவனிடம் நல்ல அபிப்ராயம் உண்டாகியிருக்க வேண்டும். அன்பான குரலில், "தம்பி! உன்னை இங்கே சரியாகக் கவனித்துக் கொண்டார்களா? தங்குவதற்கு இடம், உணவு எல்லாம் சரிவரக் கிடைத்ததா?" என்று கேட்டார்.

"ஆம், சேநாதிபதி! ஒரு குறைவும் இல்லாமல் பார்த்துக் கொண்டார்கள். கூறிய ஏவலைச் செய்வதற்கு வாசலில் ஐந்தாறு சேவகர்கள் எப்போதும் காத்திருந்தார்கள். தங்குவதற்கு இடம் தாராளமாய்க் கிடைத்தது. இராப் போஜனத்துக்கு ஒரு பூனையை அனுப்பி வைத்தார்கள். அதை நான் சாப்பிட எண்ணியிருக்கையில் இந்த வீர வைஷ்ணவர் வந்து கெடுத்து விட்டார்! அந்த வீரசைவப் பூனைக்கு இந்த வீர வைஷ்ணவரைக் கண்டதும் கோபம் வந்து விட்டது. இவரை நகத்தினால் பிறுண்டி விட்டு அது ஓடி விட்டது!" என்றான்.

சேநாதிபதி! "ஓகோ! இந்தப் பிள்ளை ரொம்ப வேடிக்கைக்காரப் பையனாயிருக்கிறான்! திருமலை! இவன் சொல்வது உண்மையா?" என்று கேட்டார்.

"சேநாதிபதி! இவன் முன்னோர்கள் கவிஞர்களாம். ஆகையால் இவனிடமும் கற்பனைசக்தி அதிகம் இருக்கிறது. மற்றபடி இவன் சொல்வது உண்மைதான். இவனை நான் பார்க்கப் போன இடத்தில் ஒரு பூனை கை கால்களைப் பிறுண்டி விட்டது!" என்றான் ஆழ்வார்க்கடியான்.

அவருடைய உடம்பில் ஏற்பட்டிருந்த இரத்தக் காயங்களைப் பார்த்துச் சேநாதிபதி பூதி விக்கிரம கேசரி விழுந்து விழுந்து சிரித்தார்.

"ஒரு பூனையா உன்னை இந்தப் பாடு படுத்திவிட்டது? நல்லவேளை காட்டுப் பாதையில் போவதற்கு இந்த வீரன் உனக்கு வழித்துணையாகக் கிடைத்திருக்கிறான்...."

"சேநாதிபதி! எனக்கு வழித்துணை தேவையில்லை. என்னுடைய கைத்தடியே போதுமானது. அதை எடுத்துக் கொள்ளாமல் நான் இவனைப் பார்க்கப் போனதுதான் பிசகாய்ப் போய் விட்டது...."

"அப்படியானால் இவனுக்கு நீ வழித்துணையாக இரு! புறப்படுவதற்கு முன்னால் இவனுக்குச் சரியாகச் சாப்பாடு பண்ணி வைத்துவிட்டு அப்புறம் கிளம்பு! தம்பி! இப்போது இலங்கையில் சாப்பாட்டு வசதி கொஞ்சம் குறைவு. இங்கேயுள்ள ஏரி குளங்களையெல்லாம் மகிந்தனுடைய சேனா வீரர்கள் கரையை உடைத்துவிட்டுப் போய் விட்டார்கள். அதனால் விவசாயம் சரியாக நடப்பதில்லை. விவசாயம் செய்வதற்கு ஆட்களும் இல்லை. இந்த நாட்டு மக்களே பட்டினி கிடக்கிறார்கள். நம் வீரர்களுக்கு எப்படி உணவு கிடைக்கும்? நம்முடைய நாட்டிலிருந்


மணியம்

தும் அரிசி போதிய அளவு அனுப்பி வைப்பதில்லை......''

''சேநாதிபதி! அது எனக்குத் தெரிந்த விஷயந்தான். பழையாறை வீரப்படை வீடுகளின் வழியாக இளையபிராட்டி சென்றபோது பெண்டுகள் அவரிடம் முறையிட்டதைக் கேட்டுக் கொண்டிருந்தேன். 'இலங்கையில் எங்கள் கணவன்மார்களும் பிள்ளைகளும் பட்டினி கிடக்கிறார்களாமே!'' என்று முறையிட்டார்கள்......''

''ஓகோ! இது அங்கேயும் தெரிந்து முறையிட்டார்களா? நல்லது, நல்லது! அதற்கு இளையபிராட்டி என்ன மறுமொழி சொன்னார்கள்?''

''சேநாதிபதி பெரிய வேளார் இலங்கையில் இருக்கும் வரையில் நம் வீரர்களைப் பட்டினியால் சாக விடமாட்டார்; நீங்கள் கவலைப்பட வேண்டாம் என்று ஆறுதல் சொன்னார்......''

''ஆகா! இளையபிராட்டி அவ்விதம் சொன்னாரா? உலகத்தில் எத்தனையோ இராஜ குலங்களில் எவ்வளவோ புகழ்பெற்ற கன்னிகைகள் பிறந்ததுண்டு. ஆனால் எங்கள் இளையபிராட்டிக்கு இணையானவர் வேறு யாரும் இல்லை......''

''அடுத்தபடியாகச் சொல்லக் கூடிய இளவரசி ஒருவர் உண்டு, சேநாதிபதி!''

''அது யார், தம்பி!''

''கொடும்பாளூர் இளவரசி வானதி தேவிதான்!''

''ஆகா! இந்தப் பிள்ளை ரொம்பப் பொல்லாதவன். இவனுடைய கற்பனா சக்தி என்னையே மயக்கிவிடும் போலிருக்கிறது. தம்பி! பழையாறையில் எகள் குலவிளக்கை நீ பார்த்தாயா?''



''பார்த்தேன், ஐயா! இளைய பிராட்டியுடன் இணை பிரியாமல் இருந்து வருகிறவரை எப்படிப் பார்க்காமல் இருக்க முடியும்? வைத்தியர் வீட்டிலிருந்து வழி அனுப்ப இரண்டு பேருமாகத்தான் யானைமீது ஏறி வந்தார்கள்: தீபத்தை ஒளியும், மலரை மணமும், உடம்பை நிழலும் பிரியாதது போல் வானதி தேவியும் இளைய பிராட்டியைப் பிரிவது கிடையாது...''

''அடடே! இந்தப் பிள்ளை வெகு புத்திசாலி! திருமலை! இவனை நம் பொக்கிஷ சாலைக்கு அழைத்துச் சென்று வேண்டிய ஆடை ஆபரணங்களைக் கொடுத்து அழைத்துப் போ!''

''ஐயா! எல்லாம் தற்சமயம் பொக்கிஷத்திலேயே இருக்கட்டும். திரும்பிப் போகும்போது நான் வாங்கிக் கொண்டு போகிறேன்.''

''தம்பி! எங்கள் வீட்டுப் பெண்ணைப்பற்றி, வானதியைப் பற்றி,— இளைய பிராட்டி எனக்குச் செய்தி ஒன்றும் அனுப்ப வில்லையா?....''

''சேநாதிபதி! தங்களிடம் நான் பொய் சொல்ல விரும்பவில்லை.''

''யாரிடமும் எப்பொழுதும் பொய் சொல்ல வேண்டாம், தம்பி!''

''இந்த வீர வைஷ்ணவர் விஷயத்தில் மட்டும் தயவு செய்து விலக்கு அளிக்க வேண்டும், சேநாதிபதி! இவரிடம் உண்மை சொன்னால் என் தலை வெடித்துப் போய் விடும்.....''

''வேண்டாம், வேண்டாம்!...... இளைய பிராட்டி எனக்கு ஒன்றும் செய்தி அனுப்பவில்லை யாக்கும்!''

''தங்களுக்குச் செய்தி அனுப்ப வில்லை. ஆனால்.......''

''ஆனால், என்ன?''

''யாருக்கு அனுப்ப வேண்டுமோ அவருக்கு அனுப்பி யிருக்கிறார்கள். வானதி தேவியைப் பற்றி இளவரசரிடம் நேரில் சில செய்திகளைச் சொல்லும்படி பணித்திருக்கிறார்கள்.....''

''உன்னைப் போன்ற புத்திசாலிப் பிள்ளையை நான் பார்த்ததே யில்லை!'' என்று கூறிச் சேநாதிபதி பெரிய வேளார் வந்தியத்தேவனை மார்போடு அணைத்துக் கொண்டார். பின்னர்,

''சரி; இனி வீண் பொழுது போக்க வேண்டாம்; புறப்படுங்கள்!'' என்று சொன்னார்.

''ஐயா! இந்த வீர வைஷ்ணவர் என்னோடு அவசியம் வரத்தான் வேணுமா? இவர் இல்லாமல் நான் தனியே போகக் கூடாதா?''

''இவர் வருவதில் உனக்கு என்ன ஆட்சேபம்?''

''எனக்கு ஆட்சேபம் இல்லை. என் இடையில் செருகியுள்ள கத்தி சுத்த வீரசைவக் கத்தி. அது 'வீரவைஷ்ணவ இரத்தம் வேண்டும்' என்று வெகு நாளாகக் கேட்டுக்கொண்டிருக்கிறது. என்னை மீறி அது வெளிக் கிளம்பி விட்டால் இவர் பாடு ஆபத்தாய்ப் போய்விடுமே என்று பார்க்கிறேன்.''

''அப்படியானால் அந்தக் கத்தியை இங்கே விட்டுவிட்டு வேறு கத்தி எடுத்துக் கொண்டு போ! திருமலை உன்னோடு வராவிட்டால் நீ இளவரசரைக் கண்டு பிடிக்க முடியாது. அவர் இருக்குமிடமே யாருக்கும் தெரியாது. மேலும் இளவரசரிடம் கொடுப்பதற்கு இவனும் ஒரு முக்கியமான ஓலைகொண்டுவருகிறான். ஆகையால் இரண்டு பேருமாகச் சேர்ந்து போவதே நல்லது! வழியில் ஒருவரோடொருவர் சண்டை பிடித்துக் கொண்டுகாரியத்தைக்கெடுத்துவிடாதீர்கள்!''

இவ்விதம்சொல்லிவிட்டுப்பெரிய வேளார் மறுபடியும் வந்தியத்தேவனை அருகில் அழைத்து அவன் காதோடு ரகசியமாகச் சொன்னார்:—

''தம்பி! இவனால் உன் காரியத்துக்கு இடைஞ்சல் ஒன்றும் நேராது. ஆனாலும் ஜாக்கிரதையாகவே இரு! இளவரசரிடம் இவன் என்ன செய்தி சொல்லுகிறான் என்பதைத் தெரிந்து வந்து என்னிடம் சொல்லு!''

ஆழ்வார்க்கடியானைத்தனக்குஒற்றனைப் பின்னோடு அனுப்புகிறார்கள் என்று முதலில் வந்தியத் தேவன் எண்ணியிருந்தான். இப்போது அவனுக்குத் தான் ஒற்றன் என்று ஏற்பட்டது. இந்த நிலைமை வந்தியத்தேவனுக்கு மிகவும் பிடித்திருந்தது.

வந்தியத் தேவனும் ஆழ்வார்க்கடியானும் இரண்டு வீரர்கள் துணையுடன் அன்றிரவே புறப்பட்டார்கள்.

பிரயாணம் தொடங்கி இரண்டு நாட்கள் கிழக்கு நோக்கிச் சென்றார்கள். முதலில் கொஞ்ச தூரம் ஊர்ப்புறங்களாக இருந்தன. ஓரளவு ஜன நடமாட்டமும் இருந்தது. வர வரக் காட்டுப் பிரதேசமாக மாறி வந்தது. முதலில் குட்டை மரங்கள் நிறைந்த காடாயிருந்தது. பின்னர் வானை அளாவிய பெரிய மரங்கள் அடர்ந்த அரண்யங்களாக மாறின. இடையிடையே ஏரிகள் தென்பட்டன. ஆனால் அவற்றின் கரைகள் பல இடங்களில் இடிந்து கிடந்தன. தண்ணீர் நாலா புறமும் ஓடிப் போய் ஏரிகள் வறண்டு கிடந்தன. கழனிகள் பயிர் செய்யப்படாமல் கிடந்தன. இன்னும் ஓரிடத்தில் விசாலமான பிரதேசத்தில் தண்ணீர் தேங்கியிருந்தது. பாலாவி நதியின் கரை வெட்டப்பட்டபடியால் அதன் தண்ணீர் நதியோடு போகாமல் வெளியில் கண்டபடி சிதறிச் சென்று அப்படித் தண்ணீர்த் தேக்கம் உண்டானதாகத் தெரிந்தது.

இந்தக் காட்சிகளையெல்லாம் பார்த்துக் கொண்டு அவர்கள் சென்றார்கள். நீடித்த யுத்தத்தினால் அந்தப் பிரதேசத்தில் ஏற்பட்டிருந்த அழிவுகளைப் பற்றி, ஆழ்வார்க்கடியான் வந்தியத் தேவனுக்கு எடுத்துச் சொல்லிக் கொண்டு போனான். யுத்தம் எவ்வளவு கொடுமையானது என்று ஆழ்வார்க்கடி அவன் கூறினான். அதைப்பற்றி இருவருக்கும் விவாதம் பலமாக நடந்தது.

இரண்டு தினங்களுக்குப் பிறகு பிரயாணத்திசை மாறியது. கிழக்கு திசையில் சென்றவர்கள் இப்போது தெற்கு நோக்கித் திரும்பினார்கள். வர வர வனப் பிரதேசங்கள் அடர்த்தியாகிக் கொண்டு வந்தன. சம வெளிப் பிரதேசம் மாறிப் பாறைகளும் சிறிய குன்றுகளும் எதிர்ப்பட்டன. இன்னும் தூரத்தில் பெரிய மலைத் தொடர்கள் வானை அளாவிய சிகரங்களுடன் தென்பட்டன. காடுகளின் தோற்றம் பயங்கரமாகிக் கொண்டு வந்தது. பட்சிகளின் இனிய குரல்களோடு ஏதேதோ இனந் தெரியாத கோரமான சத்தங்கள் கலந்து எழுந்தன.

அந்தகைய காட்டு வழிகளில் கொடிய மிருகங்களினால் ஏற்படக் கூடிய அபாயங்களைப் பற்றிப் பேச்சு எழுந்தது. நரிகள், சிறுத்தைப் புலிகள், கரடிகள், யானைகள் ஆகிய மிருகங்கள் அக் காடுகளில் உண்டு என்று ஆழ்வார்க்கடியான் கூறினான்.

"நரிகள் கூட்டமாக வந்தால் அபாயம் அல்லவா?" என்று வந்தியத் தேவன் கேட்டான். கடம்பூர் மாளிகையில் அவன் கண்ட பயங்கரக் கனவு அவனுக்கு நினைவு வந்தது.

"நரிக் கூட்டத்தைக் காட்டிலும் 'ஒற்றை நரியின் ஊளையினால் அபாயம் அதிகம்!" என்று ஆழ்வார்க்கடியான் கூறினான்.

"அது எப்படி, சுவாமிகளே!"

"இந்தக் காடுகளில் நரியும் சிறுத்தையும் சேர்ந்து வேட்டைக்குப் போகும். சிறுத்தை அங்கங்கே பதுங்கிக் கொண்டிருக்கும். நரி அங்குமிங்கும் ஓடி இரை தேடும். மனிதனையோ மான் முதலிய சாது மிருகத்தையோ கண்டால் ஒற்றைக் குரலில் ஊளையிடும். உடனே சிறுத்தை பாய்ந்து வந்து விழுந்து கொல்லும். இப்படிச் சிறுத்தைக்கு ஒற்றன் வேலை செய்யும் நரிக்கு 'ஓரி' என்று பெயர்...'

இப்படி இவர்கள் பேசிக் கொண்டு போனபோது சற்றுத் தூரத்தில் கடல் குமுறுவது போன்ற சத்தம் கேட்டது.

"கடற்கரையிலிருந்து வெகு தூரம் வந்து விட்டோமே? இது என்ன சத்தம்?" என்று வந்தியத்தேவன் கேட்டான்.

"பக்கத்தில் எங்கேயோ ஏரி அல்லது குளம் இருக்கவேண்டும். அதில் தண்ணீர் குடிப்பதற்கு யானை மந்தை வருகிறது போல் தோன்றுகிறது!" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"ஐயையோ! யானை மந்தையில் நாம் அகப்பட்டுக் கொண்டால்......?"

"அதைப் பற்றிக் கொஞ்சமும் பயமில்லை. மந்தையில் வரும் யானைகள் நம்மை ஒன்றும் செய்துவிட மாட்டா.

நாம் ஒதுங்கி நின்றால் அவை நம்மைத் திரும்பிக்கூடப் பாராமல் வழியோடு போய் விடும்!''

இதற்குள் அவர்களுடன் வந்த வீரர்களில் ஒருவன் ஒரு மரத்தின் மேல் ஏறி நாலு பக்கமும் பார்த்தான்.

''ஐயா! ஐயா! ஒற்றை யானை வருகிறது! மத யானை! மரங்களை முறித்து அதம் செய்து கொண்டு வருகிறது!'' என்று கூவினான்.

''ஐயோ! இது என்ன சங்கடம்! எப்படித் தப்புகிறது!'' என்று ஆழ்வார்க்கடியான் பீதியுடன் கூறி அங்குமிங்கும் பார்த்தான்.

''மந்தை யானைகளுக்குப் பயமில்லை என்றீர். ஒற்றை யானைக்கு ஏன் இவ்வளவு பயம்!'' என்று வந்தியத்தேவன் கேட்டான்.

''அப்பனே! மதங்கொண்ட ஒற்றை யானை சாதாரண ஆயிரம் யானைகளுக்குச் சமமானது. அதன் மூர்க்கத்தனத்துக்கு முன்னால் யாரும் எதிர்த்து நிற்க முடியாது......''

''எங்கள் மூன்று பேர் கையில் வேல் இருக்கிறது. உம்முடைய கையில் ஒரு தடி இருக்கிறதே!''

''ஒரு மத யானையை ஆயிரம் வேல்களாலும் எதிர்க்க முடியாது. அதோ ஒரு செங்குத்தான குன்று தெரிகிறதே! அதில் நாம் ஏறிக் கொண்டால் ஒருவேளை தப்பித்துக் கொள்ளலாம். ஓடிப் பாருங்கள்!''

இவ்வாறு சொல்லி ஆழ்வார்க்கடியான் குன்றை நோக்கி ஓடினான். மற்றவர்களும் பின் தொடர்ந்தார்கள். ஆனால் கொஞ்ச தூரம் ஓடியதும் எதிரில் ஒரு ஆழமான, செங்குத்தான பள்ளத்தாக்கு இருப்பதைப் பார்த்தார்கள். அவர்கள் நின்ற இடத்துக்கும் சற்றுத் தூரத்தில் இருந்த குன்றுக்கும் மத்தியில் அந்தப் பள்ளத்தாக்கு இருந்தது. பள்ளத்தாக்கின் விளிம்பில் வந்து அவர்கள் நின்றார்கள். யானையோ அதிவேகமாக அவர்களை நெருங்கி வந்து கொண்டிருந்தது. மனிதர்களைப் பார்த்ததும் அதன் வெறி அதிகமாகியிருக்க வேண்டும். துதிக்கையைத் தூக்கிக் கொண்டு அந்த மத யானை பிளிறிய போது அதன் சத்தத்தில் அண்டகடாகங்கள் வெடிக்காமலிருந்தது அதிசயந்தான். அதைக் கேட்ட மனிதர்கள் நாலு பேரும் காதைப் பொத்திக் கொண்டார்கள். தலைக்கு ஒரு பக்கம் சிதறி ஓடினார்கள்.

யானை மேலும் நெருங்கி வந்தது; மேலும் மேலும் நெருங்கி வந்தது. ஆழ்வார்க்கடியானைக் குறிவைத்துக் கொண்டு, அவன் நின்ற இடத்தை நோக்கி அது வருவது போலத் தோன்றியது. இன்னும் இரண்டு அடி அப்பால் எடுத்து வைத்தால் ஆழ்வார்க்கடியான் அதல பாதாளத்தில் விழும்படி நேரிடும். பக்கவாட்டில் ஓடுவதற்கும் வசதியாக இல்லை. செடி கொடிகள் அடர்ந்திருந்தன. ஓடித் தப்பிக்கத்தான் முடியுமா?

வந்தியத்தேவன் கையில் வேலை எடுத்தான். ஆனால் அந்த மதயானையின் வேகத்தை இந்திரனுடைய வஜ்ராயுதத்தினால் கூட அச்சமயம் தடுக்க முடியாது என்று அவனுக்குத் தோன்றியது. வேலைப் பிடித்த கை பலவீனமுற்றுத் தளர்ந்து சோர்ந்தது.

அந்நேரத்தில் ஆழ்வார்க்கடியானுடைய செய்கை வந்தியத் தேவனுக்கு ஒரு பக்கத்தில் சிரிப்பை உண்டாக்கிற்று. கையில் தடியை ஓங்கிய வண்ணம், ''நில்! நில்! அப்படியே நில்! மேலே வந்தாயோ தொலைந்தாய்! உன்னைக் கொன்று குழி வெட்டி மூடி விடுவேன்! ஜாக்கிரதை!'' என்று ஆழ்வார்க்கடியான் மதயானையைப் பார்த்து இரைந்தான்.

(தொடரும்)

''என்னோட பையன் உங்க பெண்ணைக் காதலிப்பதால நான் இந்தத் திருமணத்துக்கு ஒப்புக்கிறேன்! சீதனமா என்ன தருவீங்க?''

''உங்களுக்கு ஒரு பேரக்குழந்தை!''

— மணியன் தர்மலிங்கம்.



"உங்கள் ரீ-விசிட்டுக்கும் நாங்கள் காத்திருக்கிறோம்!"



— வ. உ. சி. மாவட்டக் கலெக்டர் ஆர். ஆறுமுகம் பேட்டி!

கல்கி: வ. உ. சி. யின் பெயரில் மாவட்டம் ஏற்படுத்தியது மகிழ்ச்சிதான்' என்றாலும், அவருடைய கொள்ளுப் பேத்தியான செல்வி உமா மகேஸ்வரி ஒரு வேலை கேட்டும் கொடுக்கப்படாமல் இருப்பதுதான் வருத்தத்திற்குரியது!

வ. உ. சி. மாவட்டக் கலெக்டர் ஆர். ஆறுமுகம்: அதற்கான முயற்சிகளை நாங்களும் எடுத்துக் கொண்டுதான் வருகிறோம். விரைவில் அவருக்கு ஆவன செய்யப்பட்டுவிடும் என்றும் நம்புகிறோம்.

கல்கி: திருச்செந்தூர் தாலுகாவில் உள்ள சொக்கப்பழங்கரை என்னும் ஊரில் சேதுக்கு வாய்த்தான் என்று ஒரு குளம். அதற்கு ஆத்தூர்க் கால்வாயிலிருந்து மாவடிப் பண்ணை என்ற இடத்தில் பிரியும் வாய்க்கால் மூலம் தண்ணீர் வர வேண்டும். அவ்வாய்க்கால் தூர்ந்து போனதால் இப்போது தண்ணீர் வரவில்லை. குளமும் தூர்ந்த நிலைதான். அதைத் தூர் எடுக்க 82 இல் ஒரு திட்டம் தீட்டி, அச்செலவை அபிவிருத்தி வரி மூலம் ஈடுசெய்யப்படும் என்றும் சொல்லப்பட்டதாம். எனினும் எதுவும் நடைபெறவில்லை. எனவே சுமார் இரண்டாயிரத்து ஐந்நூறு ஏக்கர் வெற்றிலைக் கொடிக்கால் நீரின்றி வாடும் நிலை!

கலெக்டர்: இதுகுறித்து எனது கவனத்திற்குக் கொண்டு வந்ததற்கு நன்றி. ஆவன செய்கிறேன்.

கல்கி: ஒவ்வோர் ஆண்டும் மழை அளவு குறைந்து கொண்டே வரும் நிலையில், நாம் கிடைக்கும் மழை நீரைச் சிறிதும் வீணாக்க முடியாது. இந்நிலையில் குளங்களையும் ஏரிகளையும் தூர் எடுக்க அரசு விதிகள் இடம் தரவில்லை என்பது என்ன நியாயம்?

கலெக்டர்: சரியாகக் கேட்டீர்கள். நானும் அதையேதான் கேட்கிறேன். ஒரு குளத்திற்குத் தண்ணீர் போதுமான அளவுக்கு அதிகமாக வந்திருக்க வேண்டும். அது தொடர்ந்து மூன்றாண்டுகள் வந்திருக்க வேண்டும். அந்நிலையிலும் அதன் ஆயக்கட்டு நிலம் முழுமையும் பாசனமாகாமல் இருக்க வேண்டும். அப்போதுதான் அக்குளத்தைத் தூர் எடுக்க முடியும் என்கிறது அரசு விதி. வறட்சியில் வாடும் நாம் இந்த விதியைத் தீவிரமாகக் கடைப்பிடிக்க முடியாது என்பது எனது கருத்து. அதனால் இதை நான் மாவட்டத் தலைமைப் பொறியாளருடன் கலந்து பேசி அரசுக்கு எழுத உள்ளேன்.

கல்கி: தூத்துக்குடி அருகிலுள்ள மேலத் தட்டப்பாறை கிராமத்தில் ஓடும் உப்பாற்று ஓடையைத் தடுத்து ஒரு நீர்த் தேக்கம் கட்டினால் சுமார் எண்ணூறு ஏக்கர் நிலம் பாசனம் பெறும். இத்திட்டமும் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாகச் செயல்படுத்தப்படவில்லையே?

கலெக்டர்: நிறைவேற்றப்பட வேண்டிய நல்ல திட்டம் அது. அதைச் செயல்படுத்தும்போது சிலருடைய நிலம் பாதிக்கப்படும் என்பதால் அவர்கள் ஆட்சேபிக்கிறார்கள். அதனால் அவர்களை அழைத்துப் பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறோம். விரைவில் ஒரு நல்ல முடிவு ஏற்பட்டுவிடும்.

கல்கி: ஸ்ரீவைகுண்டம் கோவில் கோபுரம் கடந்த 72 இல் பழுதடைந்துவிட்டது. அதைத் திருப்பணி செய்ய 82 இல் அப்போதைய அறநிலையத்துறை அமைச்சர் ஆர். எம். வீ. அடிக்கல் நாட்டினார். எனினும் திருப்பணி வேலைகள் துவங்கப்படவில்லையே?

கலெக்டர் (அறநிலையத் துறை அதிகாரி

யைப் பார்க்க அவர் பதில் சொல்கிறார்): கோபுரத் திருப்பணிக்காக மூன்று முறை டெண்டர் விட்டோம். யாரும் டெண்டர் எடுக்க முன்வரவில்லை. இப்போது மறுபடியும் டெண்டர் விட இருக்கிறோம். அதோடு நிதியும் இன்னும் போதுமான அளவுக்குக் கிடைக்கவில்லை. இந்நிலையிலும் கோயிலின் பழுதடைந்த மற்ற பகுதிகளைச் சில பக்தர்கள் தங்கள் தனிப்பட்ட செலவில் திருப்பணி செய்து கொண்டுதான் உள்ளனர். கோபுரத் திருப்பணியும் விரைவில் துவங்கப்பட்டுவிடும்.

கல்கி: ஸ்ரீவைகுண்டம் அரசு மருத்துவமனையில் பி. சி. ஜி. ஊசிகள் போதுமான அளவுக்குப் போடப்படுவதில்லை என்று புகார்.

மாவட்ட சுகாதார அலுவலர்: போதுமான கையிருப்பு இருப்பதில்லை என்பது உண்மைதான். இனி ஆவன செய்கிறோம்.

கல்கி: அந்த மருத்துவமனை காம்பவுண்ட் அருகிலேயே பேரூராட்சி குப்பை கொட்டுவதால் சுகாதாரக் கேடு ஏற்படுகிறது.

கலெக்டர் (சுகாதார அலுவலரைப் பார்த்து): விரைவில் அதை வேறு இடத்திற்கு மாற்ற ஏற்பாடு செய்யுங்கள்.

கல்கி: ஸ்ரீவைகுண்டம் அரசு மேல்நிலைப் பள்ளியில் ப்ளஸ் டூ மாணவிகளுக்கு வேதியியல் ஆசிரியர் இல்லை என்கிறார்கள். விளையாட்டு மைதானமும் சுத்தமாக இல்லை!

மாவட்டக் கல்வி அதிகாரி: விரைவில் வேதியியல் ஆசிரியர் நியமிக்கப்படுவார்.

கலெக்டர்: விளையாட்டு மைதானம் பற்றி நான் சொல்கிறேன். தாமிரபரணிப் பாசன ஊர்களில் நிலத்தின் மதிப்பு அதிகம். அதனால் விளையாட்டு மைதானம் கிடைப்பது அரிதாக இருக்கிறது. எனினும் ஒவ்வொரு பள்ளிக்கும் ஒவ்வொரு மைதானம் கொடுக்க இயலாவிட்டாலும் ஓர் ஊரிலுள்ள எல்லாப் பள்ளிகளுக்குமாகச் சேர்ந்து ஒரு விளையாட்டு மைதானத்தையாவது தெரிவு செய்து கொடுக்க முயற்சி செய்கிறோம்.

கல்கி: ஸ்ரீவைகுண்டத்தில் ஒரு நூற்பாலை அமைத்துத் தரப்படும் என்று அப்போதைய தொழில் அமைச்சர் திருநாவுக்கரசு வாக்குறுதி கொடுத்துள்ளார். அதற்காகப் பத்மநாபமங்கலத்தில் இடம் தெரிவு செய்யப்பட்டும் அதற்கான முயற்சி நடைபெறவில்லையே?

கலெக்டர்: உண்மையில் அந்த இடத்தில் ஒரு நூற்பாலை அமைப்பதில் பயனில்லை என்பதே எனது கருத்து. காரணம் அங்கே வாழை, நெல், வெற்றிலைப் பயிர்கள்தான் பயிரிடப்படுகின்றன. இந்நிலையில் அங்கு வாழைப் பொருள்கள் தொடர்பான தொழிற்சாலை அமைப்பதுதான் பயனுள்ளதாக இருக்கும். அதற்கான முயற்சிகள் நடந்து வருகின்றன.

கல்கி: ஸ்ரீவைகுண்டம் தென் கால்வாய் மூலம் ஆறுமுகமங்கலத்திலுள்ள நீர்த்தேக்கத்திற்குத் தண்ணீர் கொண்டு வரப்பட்டு பிறகு அங்கிருந்து ஸ்பிக் நிறுவனத்திற்குத் தண்ணீர் கொண்டுவரப்படுவதால் நிறையத் தண்ணீர் வீணாகிறது. அதனால் ஏரல் அருகில் ஒரு நீர்த்தேக்கம் கட்டித் தாமிரபரணித் தண்ணீர் கடலில் கலக்காமல் செய்து, தண்ணீரைச் சிக்கனப்படுத்தலாம் என்கிறார்களே?

கலெக்டர்: நீங்கள் சொன்ன திட்டத்தை ஆய்வு பண்ணலாம். அதோடு ஸ்பிக் மற்றுமுள்ள தொழிற்சாலைகளுக்கு நேரடியாகவே ஸ்ரீவைகுண்டத்திலிருந்து பைப் லைன் மூலம் தண்ணீர் கொண்டு செல்லும் திட்டமும் உள்ளது. அதுதான் சரியானதாக இருக்குமென்றும் நம்புகிறோம். மேலும் ஸ்பிக், தெர்மல் போன்ற நிறுவனங்களுக்குத் தண்ணீர் கொண்டு செல்வதால்தான் விவசாயம் பாதிக்கப்படுகிறது என்ற தவறான எண்ணமும் சபாநாயகர் பி. ஹெச். பாண்டியன் அவர்களின் தலையீட்டால் திருநெல்வேலி மாவட்டத்திற்குத்தான் அதிகமான அளவுக்குத் தாமிரபரணித் தண்ணீர் விடப்படுகிறது என்ற தவறான எண்ணமும் மக்களிடையே இருக்கிறது. அதுபற்றிய சரியான விளக்கங்களை மாவட்டத் தலைமைப் பொறியாளர் அளிப்பார்.

தலைமைப் பொறியாளர்: தாமிரபரணியால் வ. உ. சி. மாவட்டத்தில் பாசனம் பெறும் மொத்த நிலம் நாற்பத்தாறாயிரம் ஏக்கர்கள். அதில் ஸ்பிக் போன்ற நிறுவனங்களுக்குக் கொண்டு செல்லும் தண்ணீரின் அளவு சுமார் ஆயிரம் ஏக்கர் நெற்பயிருக்காகும் தண்ணீரின் அளவுதான். எனவே, ஸ்பிக் போன்ற நிறுவனங்கள் மூலம் வேலை வாய்ப்புப் பெற்றவர்களின் தொகையோடு இந்த ஆயிரம் ஏக்கர் பாசனத்தை ஒப்பிட்டால் பாதிப்பு என்ற பிரச்னையே இல்லை. பயன்களோ ஏராளம். அது போலவே, சபாநாயகர் தொகுதிக்குத்தான் அதிகத் தண்ணீர் விடப்படுகிறது; வ. உ. சி. மாவட்டத்திற்கு விடப்படுவதில்லை என்பதும் தவறு. தண்ணீர்ப் பற்றாக்குறைக்குக் காரணம் பருவ மழை பொய்த்துப் போனது மட்டுமே!

கல்கி: திருச்செந்தூரில் இன்னும் முறையான சாக்கடை வசதிகூடச் செய்யப்படவில்லை. குடிநீர்ப் பிரச்னையும் இருக்கிறது.

கலெக்டர்: சாக்கடை வசதி அமைக்கும் திட்டம் இருந்தாலும் நிதி வசதி ஒரு பிரச்னையாக உள்ளது. குடிநீரைப் பொறுத்தவரை முடிந்தவரை சமாளித்துக் கொண்டுதான் இருக்கிறோம். 112 லட்சம் செலவில் ஒரு நிரந்தரக் குடிநீர்த் திட்டமும் பரிசீலனையில் உள்ளது.

கல்கி: திருச்செந்தூர் நூல் நிலையத்தில் புத்தகங்களை அடுக்கி வைக்கக் கூடப் போதுமான இடம் இல்லை.

நூலக அலுவலர்: உண்மைதான். சரி

யான இடம் கிடைத்தால் உடனடியாகக் கட்டடம் கட்டத் தயாராய் இருக்கிறோம்.

கலெக்டர்: இடம் கிடைக்காததுதான் பிரச்சினை என்று ஏன் முன்பே எனது கவனத்திற்குக் கொண்டு வரவில்லை? (திருச்செந்தூர் தாசில்தாரைப் பார்த்து) உடனடியாக ஓர் இடம் பார்த்துக் கொடுக்க ஆவன செய்யுங்கள். பிரச்சினை என்றால் என்னிடம் தெரிவியுங்கள்.

கல்கி: திருச்செந்தூரைச் சுற்றியுள்ள பள்ளிகளிலெல்லாம் குறைந்தபட்சம் கல்வியின் தரம் எழுபது சதவிகிதமாக இருந்தும் திருச்செந்தூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் மட்டும் முப்பத்தேழு சதமாக இருப்பதற்குக் காரணம், ஆசிரியர்கள் எல்.ஐ.சி. ஏஜெண்டுகளாக இருப்பதுதான் என்கிறார்கள்!

கலெக்டர் (மாவட்டக் கல்வி அலுவலரைப் பார்த்து): உடனடியாக ஆவன செய்யுங்கள்.

கல்கி: திருச்செந்தூர் கோயிலில் விற்கப்படும் பிரசாதப் பொட்டலத்தில் லட்டு, முறுக்கு, அதிரசம், தினை மாவு ஆகியவை உள்ளன. அதில் அதிரசம் அதிரசம் போலவே இல்லை; முறுக்கும் அப்படியே! அவற்றின் தரத்தை உயர்த்தக் கூடாதா?

கலெக்டர்: சம்பந்தப்பட்டவர்களுக்குப் பரிந்துரை செய்கிறேன்.

கல்கி: பாஞ்சாலங்குறிச்சியில், தொல்பொருள் ஆய்வுத்துறையின் கீழுள்ள பழைய கட்டபொம்மன் கோட்டையைச் சுற்றி வேலி போடப்பட்டிருந்தாலும், பொது மக்களையும் வேலிக்குள் அனுமதிக்கிறார்கள். அதனால் அது சேதமடைய வாய்ப்புண்டு. எனவே, பொது மக்கள் வேலிக்கு வெளியிலிருந்தே பார்க்க வசதி செய்வதுதான் நல்லது.

சுற்றுலாத்துறை அலுவலர்: செய்கிறோம்.

கல்கி: புதிதாகக் கட்டப்பட்டுள்ள நினைவுக் கோட்டைக்குள் உள்ள ஓவியங்களை மின்வெட்டு சமயங்களில் பார்க்க இயலாமல் போய்விடுகிறது. அதனால் சுற்றுலாப் பயணிகளை இலவசமாக அனுமதிப்பதற்குப் பதில், சிறு கட்டணம் வசூலித்து அதைக் கொண்டு ஒரு மினி ஜெனரேட்டர் வாங்கி வசதி செய்யலாமே?

கலெக்டர்: நல்ல யோசனை. (சுற்றுலாத் துறை அலுவலரைப் பார்த்து) அதன்படி செய்ய ஆவன செய்யுங்கள்.

கல்கி: பாரதி பிறந்த வீட்டைப் பார்க்க வருபவர்கள் மிகவும் உணர்ச்சி வசப்பட்டுப் போகிறார்கள் என்பதை அங்குள்ள பார்வையாளர் புத்தகக் குறிப்புக்களிலிருந்து காணலாம். அந்நிலையில் அரசே பாரதி பாடல்களை அச்சிட்டுக் குறைந்த விலையில் விற்பனை செய்தால் நிறைய விற்பனையாகும். அதுவே பாரதியைப் பரப்பும் சிறப்பான முயற்சிகளில் தலையாயதாகவும் இருக்கும்.

மேலும் மணிமண்டபத்திலுள்ள கழிப்பறைகளையும் நல்ல படி பராமரிக்கலாம்.

செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்: எங்கள் இயக்குனருக்கு எழுதி ஆவன செய்கிறேன்.

கல்கி: கழுகுமலையிலுள்ள வெட்டுவான் கோயில் என்னும் சமணர் கோயில் பெரிய கோயில். அக்கோயிலை பெரிய மலையின் ஒரு பகுதியைக் குடைந்து (ஒரே கல்லில்) மலையையே அடித்தளமாகக் கொண்டு அமைத்திருப்பது பிரமிப்பூட்டுகிறது. அதை வெளியுலகுக்கு விளம்பரப்படுத்தலாம்.

கலெக்டர்: அதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதுபோலவே வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த கொற்கையைச் சுற்றுலாத் தலமாக்கவும் பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன.

கல்கி: அதுமாதிரியே திருச்செந்தூர் அருகிலுள்ள மணப்பாடு என்னும் கடற்கரையோரக் கிராமம் மிகவும் அழகாக இருக்-



• பேட்டியின் போது உடனிருந்த அதிகாரிகள்...

கிறது. அதைக் கூட சுற்றுலாத் தலமாக்கலாம்.

கலெக்டர்: முன்பிருந்ததைவிட இப்போது அக்கிராமத்தில் கடல் அழகாகத்தான் இருக்கிறது. காரணம் கடலோரத்தில் மணல் திட்டுகள் சேர்ந்து விட்டதால் கடல் ஆங்காங்கே பிரிந்திருப்பதுதான். அது அழகுதான் என்றாலும் மணல் மேடிட்டிருப்பதால் முன்பு போல மீனவர்கள் தங்கள் கட்டுமரங்களையும் படகுகளையும் கரையோரம் வரை கொண்டு வர முடியவில்லை. அது பெரிய பிரச்னை. அதைக் களையவும் ஆவன செய்ய உள்ளோம்.

கல்கி: கோவில்பட்டியிலிருந்து கழுகு மலை செல்லும் பதினைந்தாம் எண் டவுன் பஸ்ஸின் நேரத்தைப் பள்ளி மாணவ, மாணவிகளின் வசதிக்கு ஏற்பமாற்றியமைக்க வேண்டும் என்கிறார்கள்.

கட்டபொம்மன் போக்குவரத்துக் கழக அலுவலர்: ஆவன செய்கிறோம்.

கல்கி: கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் போதுமான வசதிகள் எதுவுமே இல்லை. முன்பு அங்கு விசிட் செய்த அப்போதைய சுகாதார அமைச்சர் ஹண்டே, 'இதுபோன்றதொரு மோசமான மருத்துவமனையை வேறு எங்குமே பார்த்ததில்லை' என்றாராம். அப்படிச் சொன்ன அவர்தான் மாறினாரே தவிர, மருத்துவமனையில் எந்த விதமான மாற்றமும் ஏற்படவில்லை என்கிறார்கள்.

மாவட்டச் சுகாதார அலுவலர்: தண்ணீர் வசதி போதுமான அளவுக்கு இல்லை. வொயரிங் சரியில்லாததால் அடிக்கடி மின் தடை ஏற்படுவதும் உண்மைதான்.

கலெக்டர்: சிறப்பாகக் கவனம் செலுத்தி உடனடியாக ஆவன செய்யுங்கள். தண்ணீர் வசதிக்கு நகராட்சியோடு கலந்து பேசி ஆவன செய்யுங்கள். பிரச்னையிருந்தால் எனக்குத் தெரிவியுங்கள்.



கல்கி: அதே மாதிரி கோவில்பட்டியிலுள்ள அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் போதுமான கட்டட வசதிகள் இல்லாததால் மாணவிகள் மரத்தடியில் படிக்கும் நிலை. இதே நிலைதான் அங்குள்ள வ. உ. சி. ஆண்கள் மேல்நிலைப் பள்ளியிலும்!

மாவட்டக் கல்வி அதிகாரி: பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு நாற்பது வகுப்பறைகள் தேவை. ஆனால் உள்ளவை முப்பதுதான். தேவைகளைக் குறிப்பிட்டு அனுப்பியுள்ளோம். வ. உ. சி. பள்ளியிலிருந்து தேவைகள் ஏதும் குறிப்பிட்டு வரவில்லை.

கலெக்டர்: அவர்கள் அனுப்பாவிட்டால் என்ன? தேவை இருப்பது உண்மையாதலால் நீங்களே கேட்டு எழுதி அனுப்புங்கள்.

கல்கி: கோவில்பட்டியிலுள்ள தமிழ்நாடு கதர் கிராமக் கைத்தொழில் வாரியத்திற்குச் சொந்தமான கட்டடங்கள் இருந்தும் அதை விட்டுவிட்டு இப்போது அதன் தலைமையகத்தைத் தூத்துக்குடிக்கு மாற்றப்பட்டதைக் குறையாகச் சொல்கிறார்கள் மக்கள்.

தமிழ்நாடு கதர் கிராமக் கைத்தொழில் வாரிய அலுவலர்: தூத்துக்குடி ,மாவட்டத் தலைநகராதலால் பல்வேறு நிர்வாக வசதிகளை முன்னிட்டு மாற்றப்பட்டிருக்கிறதே தவிர, தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்காக அல்ல. அங்குள்ள கட்டடங்களும் உபயோகப்படுத்தப்பட்டே வருகின்றன. அவை சும்மா கிடக்கவில்லை.

கல்கி: பாளையங்கோட்டை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நீரிழிவு வியாதிக்குப் பரிசோதனை செய்வதுபோல் தூத்துக்குடி மருத்துவமனையிலும் செய்ய வேண்டும் என்கிறார்கள்.

மாவட்ட சுகாதார அலுவலர்: அப்படிச் செய்ய அரசு ஆணையும் வந்துவிட்டது. விரைவில் தனிப்பிரிவு அப்படி இயங்கும்.

கல்கி: தூத்துக்குடி மருத்துவமனையில் இருநூற்றுயறுபது படுக்கைகள் வசதி கொண்ட மூன்று மாடிக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டும் இன்னும் செயல்படாமல் இருக்கிறதே?

மா. சுகாதார அலுவலர்: அதைக் கட்டிய பொதுப் பணித்துறையினர் இன்னும் அதற்கான முழுமையான வசதிகளைச் செய்து முடிக்கவில்லை. அதுதான் காரணம். விரைவில் செய்து முடித்துத் தருவார்கள் என்று நம்புகிறோம்.

கல்கி: தூத்துக்குடியிலிருந்து தென் திருப்பேரை, குருக்காட்டூர், மணத்தி, குரும்பூர், ஏரல், முக்காணி வழியாக ஸ்ரீவைகுண்டத்திற்கு டவுன் பஸ் வேண்டும் என்கிறார்கள்.

கட்டபொம்மன் போக்குவரத்து அலுவலர்: முப்பது கி. மீ. தூரம் வரைதான் டவுன் பஸ் விட முடியும். இதுதான் அரசு விதி. அது நாற்பது கி. மீ. தூரம் என்பதால் இயலாது.

கல்கி: விளாத்திகுளம் தாலுகாவிலுள்ள ப. துரைச்சாமிபுரம் மக்கள் எந்தப் பக்கம் செல்ல வேண்டுமானாலும் நான்கு கி. மீ. தூரத்திற்குப் பாதை வசதியே இல்லாமல் தவிக்கிறார்கள்.

கலெக்டர்: உண்மைதான். நிலம் தந்தால் பாதை வசதி செய்து தரலாம். அங்குள்ள பெரும் பகுதி நிலம் அவ்வூர்ப் பஞ்சாயத்துத் தலைவருக்கே சொந்தமானது. எனவே, அவரிடம் பேசிச் சம்மதம் வாங்கி ஆவன செய்கிறோம்.

கல்கி: விளாத்திகுளம் — வேடப்பட்டி சாலை (9 கி. மீ.)யைத் தார்ச் சாலையாக்க டெண்டர் விட்டு மூன்றாண்டுகளாகியும் இன்னும் முடிவடையவில்லை என்கிறார்கள்?

கலெக்டர்: விரைவில் முடிந்துவிடும்.

கல்கி: கழுகாசலபுரம்—குருமலை இடையிலான பாதையில், நடுவில் சில மீட்டர்கள் தவிர மற்ற இடங்களிலெல்லாம் வேலை முடிவடைந்துவிட்டது. நடுவிலுள்ள இடத்தில் மட்டும் அப்பகுதி நிலச் சொந்தக்காரர் ஆட்சேபனை செய்கிறாராமே?

கலெக்டர்: அதுகுறித்து வழக்குத் தொடரப்பட்டுள்ளது. இடையில் சமாதான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. விரைவில் முடிந்துவிடும் என்று நம்புகிறோம்.

கல்கி: ஆத்தூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் குடிநீர் வசதி இல்லை என்கிறார்களே?

கலெக்டர்: வேலை நடந்து வருகிறது. இன்னும் ஒரு மாதத்தில் முடிந்துவிடும்.

கல்கி: முடித்தானேந்தல், தண்டுப்பத்து ஆகிய ஊர்களிலுள்ள கூட்டுறவு சங்க விற்

பனைக் கடைகளில் சரியானபடி பொருள்கள் வழங்கப்படவில்லை என்கிறார்களே?

கலெக்டர்: ஜூன் மாதத்தில் கொஞ்சம் தடங்கலானாலும் ஜூலையில் சரியாகிவிட்டது. இருப்பினும் விசாரிக்கச் சொல்கிறேன்.

கல்கி: பஸ்கள் செல்லாத புத்தன் தருவை — தட்டார்மடம் சாலைக்குத் தார் போட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தும் பஸ்கள் போகும் புத்தன் தருவை — திசையன்விளைச் சாலைக்குத் தார் போட ஏதும் நடவடிக்கை இல்லை என்கிறார்களே?

கலெக்டர்: கவனிக்கிறேன்.

கல்கி: சாத்தான்குளம் தாலுகாவிலுள்ள பூச்சிக்காடு, மேட்டுவிளைப் பகுதிகளில் கூடுதலாக அடி பம்புகள் வேண்டும் என்கிறார்கள்.

கலெக்டர்: தேவையைப் பொறுத்து ஆவன செய்கிறேன்.

கல்கி: கோவில்பட்டி யூனியன், கயத்தாறு ஒன்றியம் ஆகிய இடங்களில் சமூக நலக் காடுகள் வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டதில் நிறைய ஊழல்கள் நடந்துள்ளதாகச் சொல்லப்படுகிறதே?

கலெக்டர்: அதுபற்றி விசாரணை நடத்திக்கொண்டிருக்கிறோம்.

கல்கி: சிவகளை என்னும் ஊரில் சுமார் ஆறாயிரம் அளவுக்கு மக்கள் தொகை இருந்தும் அங்கு ஒரு மருத்துவமனை இல்லாதது குறித்து மக்கள் மிகவும் வேதனைப்படுகிறார்கள்.

கலெக்டர்: உண்மைதான். அதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு ஆவன செய்யப்பட்டு வருகிறது.

கல்கி: அதோடு அங்குள்ள விவசாயக் கூட்டுறவுச் சேவைச் சங்கத்தில் நடைபெற்ற சுமார் ஒரு லட்சம் ரூபாய் மோசடி பற்றி வேகமான நடவடிக்கை இல்லையென்றும், அது காரணமாக விவசாயிகளுக்குக் கடன் கொடுப்பதும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதென்றும் சொல்கிறார்களே?

கலெக்டர்: விசாரணை நடந்து வருகிறது. மேலும் இப்போது விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கத் தேவையான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு விட்டன.

கல்கி: பரமன்குறிச்சியிலுள்ள செல்லத்துரை நாடார் என்ற ஊனமுற்ற நபர் தமது லாட்டரி சீட்டு வியாபாரத்திற்கு உதவியாகத் தமக்கு ஒரு மூன்று சக்கர வண்டி வேண்டும் என்கிறார்.

சமூக நலத்துறை அலுவலர்: அவர் ஏதும் எங்களிடம் விண்ணப்பிக்கவில்லை.

கலெக்டர்: இப்போது இதையே விண்ணப்பமாக ஏற்றுக்கொள்ளுங்கள். உங்கள் துறையில் மிகுந்த கால தாமதமாகும் என்றால் என்னிடம் தெரிவியுங்கள். நான் மாற்று ஏற்பாடு செய்கிறேன்.

கல்கி: கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தில் ஐ. டி. ஐ. பயிற்சியாளர்களைச் சேர்க்கும் போது, கட்டபொம்மன் போ. கழகம் நடத்தும் ஐ. டி. ஐ. கல்லூரியில் படித்தமாணவர்களைத்தான் சேர்த்துக்கொள்கிறது என்று புகார்.

கலெக்டர் (கட்டபொம்மன் போ. கழக அலுவலரைப் பார்த்து): நீங்கள் இதற்கு ஒரு சமாதானம் சொல்லுவீர்கள். அது வேண்டாம். கட்டபொம்மனில் படித்தவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் கொடுங்கள். மற்றவர்களுக்கும் கொடுங்கள். இது பற்றி உங்கள் மேலதிகாரிகளிடம் பேசிப் பாருங்கள்.

கல்கி: கட்டாலங்குளம் என்னும் ஊரிலுள்ள முத்தம்மாள் என்ற பெண்மணியின் கணவர் பாலையா இறந்து விட்டார். அப்பெண்மணி தமது ஒன்றரை வயதுக் குழந்தையுடன் தமது கணவர் வீட்டில் வசித்து வருகிறார். ஆனால் கணவரின் உறவினர்களோ அவரைக் காலி செய்யும்படி மிரட்டுகிறார்களாம். இதுபற்றி அருகிலுள்ள புதுக்கோட்டை காவல் நிலையத்தில் மூன்று முறை புகார் கொடுத்தும் பயனில்லையாம்!

கலெக்டர்: உடனடியாக விசாரிக்கிறேன்.

கல்கி: ஒட்டப்பிடாரம் தாலுகாவிலுள்ள மருதன்வாழ்வு கிராமத்திற்கு வரும் டவுன் பஸ்ஸின் நேரத்தைமாற்றியமைக்கவேண்டும் என்கிறார்கள்.

கட்டபொம்மன் போ. கழக அலுவலர்: ஆவன செய்கிறோம்.

கல்கி: சூரங்குடி கிராமத்திலிருந்து பக்கத்து கிராமங்களுக்கெல்லாம் குடிநீர் கொண்டு செல்லப்படுகிறதொரு நிலையில், அங்கு இன்னும் குடிநீர்ப் பிரச்னை உள்ளதே?

கலெக்டர்: உண்மைதான். அதைப் போக்குவதற்கான வேலைகள் நடந்து வருகின்றன.

அருள்வாக்கு

வேதத்திற்குக் கௌரவம் என்னவெனில் எந்த உயர்ந்த நூலானாலும் "இது வேதத்துக்கு ஸமானம்" என்பது தான்.

ராமாயணம் மிகவும் பிரசித்தமானது. அது பல வகையாக இருக்கிறது. எந்த இந்திய பாஷையிலும் உயர்ந்ததாகவுள்ள நாடகம் கீர்த்தனம், காவியம் எல்லாம் ராம கதையே. யார் எடுத்தாலும் ராமாயணத்தைப் பற்றிச் சொல்கிறார்கள். அப்படிப்பட்ட ராமாயணத்தின் கௌரவத்தைச் சொல்ல வந்த பொழுது அது வேதம் என்றே சிறப்பித்துச் சொல்லப்படுகிறது.

வேத: ப்ராசேதஸாதாஸீத் ஸாக்ஷாத் ராமாயணாத்மனா- ப்ரசேதஸின் புத்ரரான வால்மீகியின் மூலமாக வேதமே



ஸாக்ஷாத் ராமாயணமாக உருவெடுத்தது என்று பொருள்.

மஹாபாரதத்துக்கும் வேதம் என்றும் பெயர் சொல்லப்படுகிறது. நாலு வேதங்களுக்குப் பிறகு இதை ஐந்தாவது வேதமாக வைத்து பஞ்சமோ வேத: என்று கொண்டாடுகிறார்கள்.

வைஷ்ணவர்கள் சடகோபர் என்றும் மாறன் என்றும் பெயர் பெற்ற நம்மாழ்வாரின் திருவாய்மொழியைத் தலைக்கு மேல் வைத்துக் கொண்டாடுவார்கள். ''வேதம் தமிழ் செய்தான் மாறன் சடகோபன்'' என்றே அதையும் சொல்லுகிறார்கள். அதனால் அதுவும் ஒரு வேதம் என்று எண்ணப்படுகிறது. தமிழில் மிகவும் பிரசித்தமான நீதி சாஸ்திரமாகிய குறளும் கூடத் தமிழ் வேதம் என்று தானே சொல்லப்படுகிறது?

தேவாரமும் திருவாசகமும் தமிழ் வேதம் என்பது சைவர்களுக்குப் பிரசித்தம்.

வேதத்திற்கு ஒரு தனி கௌரவம் இருக்கிறது. ஒரு பிரகாசமான கிரந்தத்தால் மற்றவைகளை வியவஹரிப்பது பிரசித்தமான உலக வழக்கம் என்றால், நம் புஸ்தகங்களிலெல்லாம் இப்படிப்பட்ட முதன்மை ஸ்தானம் வகிப்பது வேதமாகவே இருக்கிறது.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

கல்கி: தூத்துக்குடிக்கு அருகிலுள்ள மாப்பிள்ளையூரணியில் கட்டப்பட்ட மருத்துவமனை மூன்றாண்டுகளாகத் திறக்கப்படவில்லையே?

மா. சுகாதார அலுவலர்: தண்ணீர்ப் பிரச்னைதான் தாமதத்திற்குக் காரணம். விரைவில் ஆவன செய்கிறோம்.

கல்கி: பாரதி நூற்றாண்டு விழா நினைவு மகளிர் தொழில் நுட்பக் கல்லூரிக்காகக் கையகப்படுத்தப்பட்ட நாற்பது ஏக்கர் நிலத்திற்கும் அதன் சொந்தக்காரர்களுக்கு இன்னமும் இழப்பீட்டுத் தொகை கொடுக்கப்படவில்லையாமே?

கலெக்டர்: இம்மாத இறுதிக்குள் கொடுக்கப்பட்டுவிடும்.

கல்கி: வடக்கு ஆத்தூரில் உள்ள ஷேக் சாகுல் ஹமீது, காது கேட்கும் கருவிக்காக விண்ணப்பித்தும் கொடுக்கப்படவில்லையாமே?

கலெக்டர் (சமூக நல அலுவலரைப் பார்த்து): இதற்கும் தாமதமாகுமானால் சொல்லுங்கள். நான் வேறு ஏதாவது ஏற்பாடு செய்கிறேன்.

கல்கி: தூத்துக்குடியில் ஒரு தலைமை நூலகம் வேண்டும் என்கிறார்கள். அதுபோலவே ஒரு சூப்பர் மார்க்கெட்டும் தேவை என்கிறார்கள்.

கலெக்டர்: இரண்டுக்கான திட்டங்களும் உள்ளன. செய்யப்படும்.

கல்கி: தூத்துக்குடியிலுள்ள மீனவர் பயிற்சி நிலையத்தில் படிக்கும் மாணவர்களுக்கு மீன்வளத் துறையில் வேலை கொடுக்க முடியவில்லை என்றால், வங்கிக் கடனாவது கொடுத்தால் சுயமாகத் தொழில் செய்து பயன்பெறலாம் என்கிறார்கள்.

கலெக்டர்: வங்கிக் கடனுக்கு ஏற்பாடு செய்கிறேன்.

கல்கி: தூத்துக்குடி சினிமா தியேட்டர்களில் டிக்கெட்டில் உள்ள விலைகளுக்கு மேல் அதிக விலைக்கு விற்பதாக ஏகப்பட்ட புகார்கள்.

கலெக்டர்: உண்மையில், இந்தக் கொடிய பழக்கம் இப்போது மிகவும் குறைந்து விட்டது. அதை முழுமையாகவே ஒழிக்க டிக்கெட் கொடுக்கும் நேரத்தில் தாசில்தார் போன்றவர்களை அனுப்பி டிக்கெட் கவுண்டர்களுக்குப் பக்கத்தில் நிற்கச் சொல்லி, இதுபோன்றவை நிகழாமல் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

கல்கி: தூத்துக்குடி நகரில் உள்ள பக்கிள் கால்வாயைச் சுத்தப்படுத்தாதவரை தூத்துக்குடி சுத்தமாகாது என்று கருதுகிறோம்.

கலெக்டர்: உண்மைதான். ஆயினும் அது அத்தனை சுலபமல்ல; காரணம், அத்தனை ஆக்கிரமிப்பு. அவர்களை எப்படி அகற்றுவது? சுமுகமாக அகற்ற வேண்டாமா? அதற்காக அனைத்துக் கட்சியினரையும் அழைத்துப் பேசி ஆவன செய்யத் திட்டமிட்டுள்ளோம். அதற்கு அனைவரும் ஒத்துழைப்பார்கள் என்றும் நம்புகிறோம்.

கல்கி: மிக்க நன்றி.

கலெக்டர்: நாங்கள் தான் உங்களுக்கு நன்றி சொல்ல வேண்டும். எனக்கு இங்கே வாய்த்திருக்கிற ஆபீஸர்களெல்லாம் அருமையானவர்கள். இந்தப் புதிய மாவட்டத்தை முன்னேற்ற மிகவும் சிரத்தையோடு பாடுபடுகிறவர்கள். அந்த வகையில் உங்களின் ரீ — விசிட்டின் போது, நீங்கள் சொன்ன குறைகளையெல்லாம் களைந்து விடுவதில் அல்லது அதற்கான வேலைகளைத் துவங்கி விடுவதில் சிரமமே இருக்காது. எனவே, உங்கள் ரீ — விசிட்டுக்கும் நாங்கள் காத்திருக்கிறோம். பயனுள்ள இந்த விசிட்டுக்கும் நன்றி கூறுகிறோம். நன்றி, வணக்கம்.

போட்டிக் கதை — 10

(அறிமுக எழுத்தாளர்)

போர்க்காலக் குருவிகள்

குடந்தை சண்முகம்

முட்புதர்களின் தன்னாட்சி பெற்ற அந்தக் காட்டுப் பகுதிக்குச் சற்று வெளியே பாதிப் பிணமாக உயிர் ஊசலாடிய நிலையில் கிடந்தவனைச் சுற்றி, மேலே இரண்டு கழுகுகள் வட்டமிட்ட வண்ணமிருந்தன.

புதரின் மறைவில், இமைக்காமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ஒரு ஜோடி விழிகளுக்குத் திட்டுத் திட்டாகப் பிணத்தின் அடையாளம் புலப்பட்டது. கன்னத்தில் அடையாளம் தெரியாதவர்களின் காலடிச் சுவடுகள் அழுந்திக் கிடந்தன. கழுத்திலிருந்து, மார்பு வரை, ஒரே சிவப்புச் சகதி... நாக்கு மட்டும் வெளியே தள்ளித் தள்ளி வந்தது. 'ஒரே அடியாக என்னைச் சாகடித்திருக்கக் கூடாதா?' என்று இறைஞ்சுவது போல்.

மறைவிலிருந்தபடி இதையெல்லாம் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த பிஞ்சு முகத்தில், மழை பொழிவதற்குச் சில நிமிடங்கள் முன் வானமிருக்குமே... அதே போல் அச்சரேகை படர்ந்திருந்தது. திடீரென்று புதருக்கு வெளியே முழுசாய் வந்த பொடியன், வானத்தை ஒருமுறை உற்றுப் பார்த்துவிட்டு, மறுபடியும் பார்க்கத் தைரியம் இல்லாதவனாய், "அம்மா... குண்டு போட பிளேன்ல வர்றானுக..." என்று ஒப்பித்துக் கொண்டே கால்கள் பின்னக் காட்டுப் பாதையில் ஓடினான்.

"சே... இங்கேயா? இருக்காதுக்கா...



வெளையாடுறான்…''

''இல்லேக்கா. அந்த மரத்து எடக்குல பாரு… ப்ளேனேதான்!''

''ஆமாண்டி… ஐயய்யோ… இங்கேயும் வர்றானுகளே… மாரி, மணி, எந்திரிங்க. குண்டு போட ப்ளேன் வருது…''

இவர்களைத் தவிர அங்கு யாருக்கும் பேசுவதற்குச் சக்தியில்லை. கடந்த இரண்டு வாரங்களாக இப்படித்தான் முள்காட்டில்… வறண்ட செடிகளின் இலைகளையே தின்று, தின்று, சிறுகுடலும் பெருங்குடலும் உள்நாட்டுப் போர் புரிவதுதான் மிச்சம்.

பொறியில் அகப்பட்ட எலியைப் போல், காட்டுக்குள்ளேயே… அங்குமிங்கும் கூட்டம் சிதறியதே தவிர, வெளியே தலைநீட்ட அங்கு யாருக்கும் துணிச்சலில்லை.

மீண்டும் அந்தப் பொடியனே கொஞ்சம் வெளி நோக்கி வந்தான். சருகுகளைக் கூடச் சப்திக்க விடாமல், ஊர்ந்து வந்த வண்ணம் வெளியே வானத்தை எட்டிப் பார்த்தான். ஆமாம், ஒரு நொடிதான் பார்த்தான். அடுத்த கணம், ''ஏ… சோறு… சோ…று…'' சத்தியவன் குரலில் பசி ஏப்பமும் கலந்து வந்தது.

இதுவரை மரம் அசைவது கூடத் தெரியாமலிருந்த காட்டில், இப்போது பறவைகளோடு, மனிதர்களும் கையசைக்கும் சத்தம் உற்சாகமாய்ப் புறப்பட்டு வந்தது.

காட்டை விட்டு முதலில் வந்த முதியவர், உன்மத்தமாய்த் திரும்பிக் கையசைத்தார். திடீரென வெளி மைதானத்தில் மக்கள் தொகை அதிகமானது.

மேலேயே உற்றுப் பார்த்தபடி ஒரு வாலிபன், ''அப்பா… இந்தியாவோட ஏரோப்ளேன்தான்!'' என்று உற்சாகமாய்க் குரல் கொடுத்தான்.

ரொம்பவும் தாழ்வாகப் பறந்து வந்த விமானப் பகுதியிலிருந்து, பொட்டல மழை பொழிந்தது. விழுந்த வேகத்தில் ஒரு பொட்டலம் பிரிந்து, ஏதோ வேவார் உணவு வகை வெளியே தெரிய, பார்த்த முகங்கள் யாவும் பிரகாசத்தின் வடிவமாயின!

''ஆயா, எடு சீக்கிரம்… வந்துடப் போறானுக!'' — ஒருத்தி ஓயாமல் எச்சரித்துக் கொண்டிருந்தாள்.

''ஹலோ ப்ரெண்ட்ஸ்! தாங்க்யூ வெரி மச்…'' என்று கூட்டத்திலிருந்த ஒரு வாலிபன் விமானத்திலிருந்தவர்களுக்கு நன்றியறிவித்தான்.

அனைவரும் ஓர் அவசரத்தோடு சாப்பிட்டார்கள். அந்த வாலிபன் — அவன்தான் மாறன் — மட்டும் டைரியின் அன்றைய பக்கத்தைப் புரட்டி எழுத ஆரம்பித்தான்: ''டிசைரி நாயகா… இன்று மாலை நீ வருவதாகச் சொன்னாய். அநேகமாக, எந்தநிமிடத்திலும் எனக்கான பிணமாலை வந்தாலும் வந்துவிடும். ஏனெனில், நானிருக்கும் யாழ்ப்பாண வடபகுதியில்தான், சிங்கள ராணுவம் இப்போது முகாமிட்டுள்ளது'' — எழுதி முடித்துவிட்டுப் பேனாவை மூடிய பிறகும்கூட அவனுக்கு இன்னும் எழுத வேண்டும் போல் இருந்தது!



மரண பயத்துடனேயே மறுநாள், சூரியனும் மெல்ல வெளியே தலைகாட்டினான். எழுந்து என்ன செய்யப் போகிறோம், ஓடி ஓடி மேற்கே மறையத்தானே… என்பது போல், சூரியனும் அலுப்பாய்ச் சாயங்காலப் பக்கம் சாய்ந்தான். ஆனால் ஓடும் சில மணிகளில் எத்தனை உயிர்களுக்கு ஊக்கமளிக்கிறான் இந்தச் சூரியன்! மறைவதற்குள் பல விதைகளின் வளர்ச்சியைக் காண வேண்டாமா? என்ற எண்ணத்துடன் மாறனும் எழுந்து ஜன்னல் பக்கம் அமர்ந்தான்.

இனக் கலவரம், என்று ஆரம்பித்ததோ, அன்று முதல், தமிழர் பகுதியில் கொட்டாவி விடக் கூட கொஞ்சம் யோசனைதான். நாளடைவில் துப்பாக்கிச் சத்தமே அவர்களின் இதய ஒலியாய் ஐக்கியப்பட்டு விட்டது. கண்ணி வெடிகளை விட, ராணுவத்தின் கண்ணிலிருந்தே… கன்னிகள் தப்பிக்க வேண்டியிருந்தது. பிணத்தின் முகத்தில்தான் வைகறைகள் வருகின்றன. இரவு முழுவதும் ஆந்தைகள் போல் விழித்துவிட்டு, பகலில் தூங்கும் பழக்கமே பலருக்கும் பரிச்சயமாகிவிட்டது.

இரவில் அநேகமாகச் சிங்கள ராணுவச் சிப்பாய்கள் காட்டுப் பகுதிக்கு வர அஞ்சுவதால், இரவில் காட்டிலும், பகலில் யாழ்ப்



அவர்: மாப்பிள்ளைக்குத் தீபாவளிக்கு நீங்க வாங்கிக் கொடுத்த ஸ்கூட்டர் 'செகண்ட் ஹாண்ட'மே?

இவர்: அவரே செகண்ட் ஹாண்ட் மாப்பிள்ளைதானே. அதனாலதான்!

— எஸ். வேங்கடராமன்.

பாணப் பகுதியில் புலிப்படைகள் நடமாடுவதால், தைரியமாகப் பகலில் வீட்டிலுமாகப் பலரின் வாழ்க்கை இடம் மாறிக் கொண்டிருந்தது.

மாறனுக்கும் அதே சூழல்தான். இப்போது யாழ்நகரின் பிரதான நான்காவது வீதியில் தானும், ஐந்து வீடுகள் தள்ளி, மச்சாமா வீட்டில் சுற்றுவளைக்கப்பட்ட ஜானுவின் பெண்ணும் மட்டுமே இருப்பது அவனுக்குத் தெரியும்.

மாறன் என்றோ, தற்கொலைப் படையின் சேனாபதியாய் வீரமரணம் அடைந்திருக்க முடியும். ஏற்கெனவே ராணுவ முகாமில் செய்யப்பட்ட சித்திரவதையினால் ஒரு காலை இழந்திருந்தாலும் நம்பிக்கையை ஊன்றிக் கொண்டு... அவன் மறைந்து வாழ்வது, இன்னும் டிசைரியின் அன்புக் கட்டுப்பாட்டுக்காகத்தான்.

வாரம் ஒரு முறை, தான் சிங்களத்துச் சிப்பாயின் மகள் என்பதையும் மறந்து, தமிழ்ப் பெண்ணாய் உடையணிந்து, யாழ்ப்பாணத்தின் குறித்த இடத்தில் வந்து, மாறனை மட்டுமல்லாது... சக காட்டுப் பகுதி அகதிகளிடமும் அவள் காட்டும் அன்பு, துப்பாக்கி முனைகளையும் தூரிகையாக்கும்...

கொழும்பு தேசியக் கல்லூரியில், ஒரே வகுப்பில் படிக்கும் காலத்தில் மாறன் யாழ்ப்பாணத்தைப் பற்றித் தன் பாட்டியிடம் கேட்டதையெல்லாம், 'இது... அந்தக் காலத்தில் யாழ் வாசிக்கும் பாணர்கள் எனும் தமிழ் நாட்டு வழித்தோன்றல்கள் வாழ்ந்த இடமாம்...' என்றெல்லாம் அவன் கூறுவதை 'அப்படியா?' என டிசைரி விழிகளை அகலப்படுத்தும் போது, 'உன் புருவத்தில் சேரனின் வில்லைக் கண்டேன்...' என மாறன் சிரித்து விளையாடுவதும்... இலங்கையின் காற்றுக்கும் கடல் மணலுக்குமே தெரிந்த ரகசியங்கள்!

அப்படி, குருவிகளாய் அவர்கள் சிறகசைக்க ஆரம்பித்த நேரத்தில்தான் இந்த இனவெறி, கூடுகளைக் கொளுத்த ஆரம்பித்தது.

நினைவுகளிலிருந்து மீண்ட மாறன், நெஞ்சுப் பகுதியை மெல்ல வழித்துக் கொண்டிருந்தான். இரண்டு மாதங்களுக்கு முன் ராணுவ முகாமில் வாங்கிய பூட்ஸ் உதை அவனை இன்னும் விட்ட பாடில்லை. ராணுவக் குறிப்பிலிருந்து அகற்றப்படாத அவன் பெயரும், தலைமறைவாகிக் கிடக்கும் இடமும் டிசைரியின் அப்பாவான சிங்களச் சிப்பாய்க்குத் தெரியாமலில்லை.

"அப்படியா? இது தேசத் துரோகம் இல்லையா?" என்ற நினைப்பு எப்போதும் டிசைரியின் அப்பாவுக்கு ஏற்பட்டதில்லை. அவர் கையிலிருப்பதுதான் அரசாங்கத்தின் துப்பாக்கி. மனசிலோ மாறனின் இன்ப வருடல்கள்... மகள் டிசைரியின் மேல் அவன் வைத்திருக்கும் மாறாத அன்பும், ஒரு தோழனைத் தம்முடன் மனித உணர்வுகளைப் பரிமாறும் பாங்கையும் கண்டு களித்த அவரால் மாறனை வெறுக்கவே முடியாது.

டிசைரிக்கும் மாறனுக்கும் கல்யாணம் முடிக்க அவர் காத்திருந்த வேளையில்தான் இனக்கலவரம். அவருக்கு இந்தக் கருமாதி வேலைக்கு ஆணை யிட்டது. அரசாங்கத்தை மறுக்காமல், அதே வேளையில் மனுஷ உணர்வுகளை மதித்து, ராணுவக் கூடத்தில் யாரையும் சித்திரவதை செய்யாமலேயே செய்வது போல் நடித்துக் கொண்டு இருப்பதால்தான் இதுவரை எந்தக் கண்ணி வெடிக்கும் அவர் இரையாகாமல் இருக்கிறாரோ என்னவோ!

மீண்டும் நினைவுகளின் நெருக்குதல்களில் அகப்பட்ட மாறன், கதவு தட்டும் ஓசை கேட்டு, டிசைரியை எதிர்பார்த்து ஆவலுடன் திறந்தான். வலது கையில் ஸ்டென் கன்னோடு ஒருவன், திடுக்கிட வைத்தான். வந்தவனின் தோள் பட்டையில் புலி இலச்சினையைப் பார்த்துக் கொஞ்சம் ஆறுதலடைந்தான்.

"ப்ளீஸ்... காட்டுக்குப் போயிடுங்க... நாளைக்கு இந்த ஏரியாவில ராணுவம் ஃபயர் பண்றதா இருக்கு. நாங்க காங்கேசன் துறைமுகத்துக்காகப் போராட இருக்கிறதால, காட்டிலேயும் சிங்களர் நுழையச் சுலபமா இருக்கும். ஜாக்கிரதை!" என்று வந்தவன் அறிவித்துவிட்டு, மோட்டார் சைக்கிளில் ஏறி மறைந்தான்.

அவன் போன திசையையே உற்றுப் பார்த்த மாறனின் விழிகளில் கொஞ்சம் ஒளி கிளம்பியது. அதோ... வருகிறவள் டிசைரிதான். அவளேதான். ரப்பர் பந்து போலத் துள்ளித் துள்ளி ஓடி வருகிறாளே. அவளேதான்... மனத்தில் காற்றாடி சுற்றுவது போல இருந்தது மாறனுக்கு.

"டிசைரி என்னாச்சு? மெதுவா..." — வந்தவளிடம் பதற்றமாய்க் கேட்டான்.

"ப்ளீஸ்... என்னோட கிளம்புங்க. இங்கேயிருந்தா ஆபத்து..."

"என்னன்னு சொல்லு டிசைரி. வாட்

அவள்: என் ஒருத்தியால தனியா என் மாமியாரோட சண்டை போட முடியலே...

இவள்: என்ன பண்ணப் போறே?

அவள்: ஊரிலிருந்து எங்கம்மாவை வரச் சொல்லப் போறேன்.

— கோவை சுரேஷ்.



றைப்பண்ட்?''

''ப்ளீஸ்... நேரம் ஆக்காதீங்க மாறன். இந்தப் பகுதியை இன்று ராத்திரி ராணுவம் எரிக்க இருக்கு. அப்பா உங்களை மறைவா வீட்டுக்கு அழைச்சுக்கிட்டு வரச் சொன்னாங்க. ப்ளீஸ், மறுக்காதீங்க...''

''டிசைரி, நீ என்னைத் தப்பாப் புரிஞ்சுக்கிட்டே. தமிழ்நாட்டிலேர்ந்து வந்து, நான் இங்கே தங்கிப் படிச்சது எங்க மாமா வீட்டில தான். ஆனாலும் அதிக நாட்கள் என்னைக் காப்பாற்றிக் காலேஜ்லே சேர்த்ததெல்லாம் உங்க அப்பாதான். அதோடு உன்னுடைய உயர்வான அன்பு...

''இந்த உலகத்திலே எத்தனையோ பேர் என்னைத் திட்டலாம், 'இனத்துக்காகப் போராடுகிற நேரத்தில், காதலிக்காகக் கோழையாக் கட்டுப்பட்டு அடைஞ்சு கிடக்கிறான்னு. உண்மையிலேயே சொல்றேன்... நான் மனுஷன்கிற எண்ணத்தைத்தான் இதயம் பூராச் சுமந்தேன்; சுமக்கறேன். தமிழன்கிற வெறி எப்பவுமே எனக்குக் கிடையாது. சிங்களவர்களை எதிரிகள்னு கூட நினைக்கலே. தப்புச் செய்யறவங்களைத் தான் வெறுக்கிறேன்; தப்பிப் பொறந்தவங்களை இல்லே. அநேகமா தமிழனோட பண்பு கூட இப்படித்தான் இருக்கணும்னு நினைக்கிறேன்.

''ஒண்ணு மட்டும் நிச்சயம் டிசைரி... நாலு பேருக்காவது வெளிச்சம் காட்டணும்னுதான், நல்ல விளக்கைக் கொளுத்தி காத்து படாமல் காப்பாத்தி மாடத்துல மறைச்சு வைக்கிறோம்... அது கோழைத்தனமில்லே! நானும் அதே போலத்தான்... தீபத்தை எடுத்துக்கிட்டுப் போய், உங்க வீட்டுத் தலையணையிலே மறைச்சா, ஒண்ணு தீபம் அணையும்; இல்லே தீபத்தாலே தலையணைக்கு ஆபத்து... என்னை மன்னிச்சிடு டிசைரி...''

''புரியுது மாறன். ப்ளீஸ்... என்னையும் உங்கள் வழியிலே ஓர் உதவியாச் சேர்த்துக்குங்க... ப்ளீஸ்...'' — இப்படி இருவரும் மாறி மாறிச் சிறிது நேரம் அழுதார்கள்.

பிறகு, கொஞ்சம் நகர்ந்த மாறன், ''டிசைரி, இந்தச் சந்திலே பாரு... யாரோ கர்ப்பிணி போலே இருக்கு... நம்மைப் பார்த்ததும் ராணுவம்னு நினைச்சுப் பிரசவ முனகலையும் அடக்கக் கஷ்டப்படுகிறாங்க, வா...''

''பயப்படாதீங்க... நாங்களும் அகதிங்கதான்...'' — டிசைரி கூறிக்கொண்டே அவசரத்துக்குத் தன் புடைவையைக் கொண்டே கர்ப்பிணியை மறைத்தாள். மாறனும் சட்டையை அவிழ்த்துப் பக்கத்தில் தரையில் விரித்தான்.

சிசு, தான் வெளியில் வருவதைத் தாயின் வலியில் விளம்பரப்படுத்தியது. அதே நேரம், தூரத்தில் டாங்குகள் வரும் சத்தம் அந்தச் சிசுவுக்கும் கேட்டுவிட்டதோ என்னவோ... ஓர் அவசரத்துடனேயே குழந்தை பூமிக்கு வந்தது.

மாறன் அதற்கு மேலும் தாமதிக்கவில்லை. ''டிசைரி, கடைசியா ஒண்ணு சொல்றேன், கேளு. இந்தக் குழந்தையைத் தூக்கிக்கிட்டு காட்டு வழியாத் துறைமுகத்துக்குப் போயிடு. நம்ப படகுங்க அங்கே தமிழ்நாடு போக... ரெடியாயிருக்கும்...''

டிசைரி... கண்ணீராய்க் கரைந்தாள்.

''ப்ளீஸ் டிசைரி. போர்க்காலத்தில் காட்டுக் குருவிகள் வெடிச் சத்தம் கேட்டுத் தடுமாறிச் சிதறி, தப்பிக்கணும்னு ஓடி, கடைசியிலே திசைக்கு ஒண்ணாச் சாகும். நாமும் அதே போல் சராசரிக் காதலர்களாகத் தற்கொலை பண்ணிக் கொள்ளாமல், சின்னக் குஞ்சுகளையாவது சேர்க்க வேண்டிய கூட்டிலே சேர்த்துவிட்டுச் சாவோமே... ப்ளீஸ், உடனே ஓடு டிசைரி...''

''சரி மாறன்'' டிசைரியின் கண்களில் இந்து மகா சமுத்திரம் இறங்கி வந்தபடியே இருக்க, ஓடினாள்.

மாறன் அந்தக் கர்ப்பிணித் தாயைத் தூக்க எத்தனித்தான்.

அவள், ''தம்பி, நீங்க ரெண்டு பேரும் நல்லாயிருக்கணும். உங்கள் இனம், குலம்... இல்லே... மனித இனம், நல்லா இருக்கணும்...'' என்று ஆத்ம உணர்வு அவள் அதரங்களில் வழிய, அதற்குள் முன்னேறிவிட்ட ராணுவ டாங்குகள் வாயைத் திறக்க...

மறுபுறம் —

டிசைரி படகில் நகர்ந்து கொண்டே தூரத்தில் யாழ்ப்பாணம் எரிவதைக் கண்டாள். இன்னும் தூரம் போகப் போக... வெளிச்சம் மட்டுமே விழிகளுக்கு அகப்பட்டது. டிசைரியின் கையிலுள்ள குழந்தையின் முகத்தில், மாறன் மறுபடியும், மறுபடியும் புன்னகை செய்து கொண்டே இருந்தான்.

நூற்றுன்றுச் சாலைகள்

"குட்மார்னிங்'' என்ற சுப்பிரமணியத்தின் காலை வணக்கத்துக்கு லேசான தலையசைப்புடன் மறுவணக்கம் சொல்லிவிட்டு எதிரே இருந்த நோயாளியைப் பார்த்துத் திரும்பினாள் டாக்டர் உமா தியாகேஸ்வரன். கம்பவுண்டர் அறைக்குள் நுழைந்ததும் அவனைக் கண்ட கேசவன் எழுந்து, "என்னண்ணே இவ்வளவு லேட் பண்ணிட்டீங்க?'' என்றான்.

"ஸாரி கேசவ், வீட்டுக்கு கெஸ்ட் வந்ததாலே கொஞ்சம் லேட், இவ்வளவு நேரம் கவுண்ட்டரைப் பார்த்துக்கிட்டதுக்கு தேங்க்ஸ்'' என்றான்.

"தேங்க்ஸை நீங்களே வச்சுக்குங்க. நான் வரேன்'' என்று வெளியேறினான் கேசவன்.

கலைந்திருந்த மாத்திரை மருந்து புட்டிகளையும் தனது தலையையும் ஓரளவு அவன் சரி செய்து கொண்ட போது, வெளியே டாக்டர் உமாவின் குரல் உயர் தொனியில் கேட்டது.

"இதோ பாரும்மா, நீ நினைச்ச போதெல்லாம் தங்கிக் கொள்ள இது ஒண்ணும் சத்திரம் சாவடியில்லை. உன் மகளுக்குப் பிரசவம் ஆக இன்னும் பத்து நாளாகும். ஒரு வாரம் கழிச்சு வா. ஆஸ்பத்திரியில் சேர்த்துக்கறேன்.''

யாரிடம் இவ்வளவு கண்டிப்பாகப் பேசுகிறாள் என்று அவன் வெளியே எட்டிப் பார்க்க நினைத்தபோது, "சுப்பிரமணியம்'' என்று அவனை டாக்டர் அழைக்கும் குரல் கேட்க "யெஸ்'' என்று வெளியே வந்தான்.

டாக்டர் உமாவின் எதிரே சுமார் பதினெட்டு வயது மதிக்கத்தக்க ஒரு நிறை மாத கர்ப்பிணிப் பெண் உட்கார்ந்திருந்தாள். விவரம் தெரியாத கிராமத்துப் பெண். அருகே ஒரு வயதான மூதாட்டி — அவளின் தாய் போலும். நிறைய எதிர்பார்ப்புகளுடன் டாக்டரையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"இவங்களுக்குத் தேவையான மருந்தைக் கொடுத்திட்டு, வேற யாராவது ஓ. பி. இருக்குதான்னு பாரு'' என்றாள் உமா.

இருபத்துமூன்று வயதான உமா, டாக்டர் என்ற தோரணையில் தன்னை ஏக வசனத்தில் அழைப்பது எரிச்சலை ஏற்படுத்தினாலும் அதை அடக்கிக் கொண்டு வெளியே பார்த்தான். பெஞ்சுகள் காலியாக இருக்க, திரும்பி டாக்டரை நோக்கி, 'நோ' என்று ஒற்றைச் சொல்லை உதிர்த்துவிட்டு, "நீங்க அந்த ஜன்னல் பக்கமா வாங்க'' என்று அந்த கிராமத்துப் பெண்ணைப் பார்த்துக் கூறினான்.

தனது அறைக்குள் நுழைந்து கொண்டு, கதவைச் சிறிது சப்தத்துடன் சாத்தினான்.

"டாக்டரம்மா, பொண்ணுக்குப் பொண்ணு ஏதாவது உதவி பண்ணுங்கம்மா; எங்க ஊர்லே இருந்து...''

"இங்கே பாரும்மா, திரும்பத் திரும்ப என்னாலே சொல்லிக்கிட்டிருக்க முடியாது. ஒரு வாரம் கழிச்சு வா. அப்படி அவசரம்னா சாயந்தரமா என் ஆஸ்பத்திரிக்கு வா. பிள்ளையார் கோவில் தெருவுல இருக்கு.''

கிழவி ஏதோ சொல்ல முற்பட அதை இடைமறித்த டாக்டரின் குரல் அவன் காதில் விழுந்தது. தொடர்ந்து டாக்டர் செருப்பை அணிந்து கொண்டு வெளியே செல்வதையும் உணர முடிந்தது.

சிறிது நேரத்தில் 'கவுண்டர்' என்று அழைக்கப்பட்ட அந்த ஜன்னல் வழியே கிழவியின் முகம் தெரிய "சீட்டைக் குடுங்கம்மா'' என்றான்.

சீட்டைக் கொடுத்தபடியே அந்தக் கிழவி "மருந்துக்காரய்யா, நீங்களாவது சொல்லி என் மகளை இங்கே சேர்க்கச் சொல்லுங்கய்யா'' என்றாள். "அதான் டாக்டர் சொல்லிட்டாங்கல்ல. ஒரு வாரம் கழிச்சு வாங்க'' என்றதுடன் மருந்தைக் கொடுத்துவிட்டு அதைச் சாப்பிடும் விவரமும் சொன்னான். கிழவி மருந்தை விட்டுவிட்டு இவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"இரும்மா'' என்று கூறிவிட்டு வெளியேறி வந்தான். பக்கத்தில் இருந்த பெஞ்சில் உட்காரச் சொல்லி, "என்ன?'' என்று கேட்டான்.

"மருந்துக்காரய்யா,..எங்க ஊர்ல இருந்து இங்கன வாரதுக்கு மோட்டாரு எதுவும் கெடையாது; ரோடு இருந்தாத்தானே மோட்டாரு வரும்? மாட்டு வண்டி வர்றதுக்குக் கூட பாதை கெடையாது. அஞ்சு கல்லு நடந்து வந்து, சாத்தூர் ரோட்டுக்கு வந்தாத்தான் மோட்டாரைக் கண்ணால் பார்க்க முடியும். இந்தப் புள்ளைக்கு ரவையில (இரவில்) நோவு கண்டுடுச்சின்னா நான் எங்கன போயி முட்டுவேன்? ஆம்பளத் துணையும் கெடையாது. இவ புருசன் இவள வெலக்கி வெச்சிட்டான். நீயாவது டாக்டரம்மாகிட்டச் சொல்லி இங்கன சேக்கச் சொல்லு சாமி. ஒம் பெண்டு புள்ளைகளையெல்லாம் இருக்கங்குடி மாரியாத்தா காப்பாத்துவா'' என்று நீளமாகப் புலம்பினாள்.

"டாக்டரம்மா சொன்ன தேதிக்கு முன்

இரா. முத்துக்குமார்

ணுடியெல்லாம் வலி எடுக்காது'' என்று சொல்லிக் கொண்டே அந்தப் பெண்ணைப் பார்க்கத் திரும்பினான். மிகவும் இளைத்துப் போய்க் கண்ணுக்குள் உயிராய் இருந்தாள். அவர்களை அங்கேயே இருக்கச் சொல்லி விட்டு, டாக்டர்கள் ஓய்வு எடுக்கும் அறை நோக்கி நடந்தான்.

மாத நாவல் படித்துக் கொண்டிருந்த உமா என்ன என்பதைப் போல் அவனைப் பார்த்தாள்.

''மேடம், ஒரு சின்ன வேண்டுகோள். அந்தக் கிராமத்துப் பெண் மிகவும் வீக்காகத் தெரிகிறாள். அதோடு அவர்கள் ஊரிலிருந்து இங்கே வர சரியான சாலை வசதியோ, ட்ரான்ஸ்போர்ட் வசதியோ இல்லை போல் தெரிகிறது...'' என்று இழுத்தான்.

சற்றே தயங்கி ''ஒய் டோண்ட் வீ அட்மிட் ஹர் அஸ் ஆன் இன் பேஷண்ட்?'' என்று ஆங்கிலத்திற்குத் தாவினான்.

டாக்டரின் இதழ்க் கோடியில் ஏளனப் புன்னகை ஒன்று ஓடியது. ''மிஸ்டர் சுப்ரமணியம், உங்க வேலை எதுவோ அதை மட்டும் பாருங்க. என் வேலை எனக்குத் தெரியும். இங்கே யாரு டாக்டருங்கறதையும் சந்தேகமிருந்தா கேட்டுத் தெரிஞ்சுக்கோங்க. பை த பை, ஐ நோ இங்லீஷ் வெரி வெல். பட் ஐ ஆல்ஸோ நோ வேர் ஐ ஷுட் யூஸ் இட்!'' என்று கூறிவிட்டு நாவலை விட்ட இடத்தில் தொடர்ந்தாள்.

மண்டைக்குள் ரத்தம் சூடாகப் பாய்ந்தது போல் இருக்க, சட்டென்று வெளியேறினான்.

கிழவி இவன் முகத்தையே ஆவலாகப் பார்த்துக் கொண்டிருக்க, ''பாட்டி இந்த டாக்டரம்மா ரொம்பக் கண்டிப்பு. நீங்க நாளைக்கு வாங்க. நாளைக்கு வேற டாக்டர் வருவார். நான் சொன்னாக் கேட்பார்'' என்றான்.

''அதுபோதும், அதுபோதும். நான் நாளைக்கு வாரேன்'' என்று கும்பிட்டாள்.

''இரும்மா... உன் பொண்ணு பேரென்ன?''

''முத்துப்பாண்டிங்க. எம் பேரு வெள்ளையம்மா. ஊரு சொரண்டைக்குளம்'' என்று கூறி நகர்ந்தாள்.

போகும்போது முத்துப்பாண்டி இவனைப் பார்த்துக் கையெடுத்துக் கும்பிடவும் இவன் கண்களில் நீர் கட்டியது.

வீட்டில் சாருவிடம் சொன்னபோது கவலை அவளையும் தொற்றியது.

''ஏங்க ஒருநாள்தானே... நம்ம வீட்டுக்



குக் கூட்டி வந்திருக்கலாமில்ல. நாளைக்கு டூட்டிக்கு உங்க ஃப்ரெண்ட்தானே வர்றார்? நீங்க சொன்னாக் கேட்பாரில்ல?'' என்றாள்.

''சட்! எனக்கு ஏன் இந்த யோசனை தோன்றவில்லை?'' என்று மனம்புழுங்கினான்.

அவனது வேதனையைக் கண்டு சாரு அவனைச் சமாதானப்படுத்தினாள். ''கவலைப் படாதீங்க. அவங்க காலையில நிச்சயமா வரு வாங்க. நீங்களும் பெட்ல சேர்த்து விட்டுட லாம். இப்ப நிம்மதியாத் தூங்குங்க.''

பாதித் தூக்கத்தில் முத்துப்பாண்டி கண் ணீருடன் ''போயிட்டு வாரேன்'' என்று கும்பிட, சட்டென்று விழித்துக் கொண் டான்.

காலையில் முதல் காரியமாக வரது விடம் சொல்லி விட்டான்.

''நேத்து பயங்கர யுத்தமாமே. முத்து சொன்னான்,'' என்றார் வரது என்ற டாக்டர் வரதராஜன். ''சுப்ரமணி, உனக்கு எதுக்கு இந்த வேலையெல்லாம்? அதுவும் அந்தச் சிலுப்பிக் குதிரைகிட்டப் போய்...''. என்றவர் அவன் முகத்தைப் பார்த்ததும்,

''ஓ. கே. டன். விட்டா, மனசாட்சி அது. இதுன்னு டயலாக் அடிப்பே! முத்துப் பாண்டி வரட்டும் பார்க்கலாம்'' என்றார்.

முத்துப்பாண்டி வரவில்லை. 'மளுக்' கென்று உள்ளுக்குள் ஏதோ முறிந்தது போன்ற உணர்வு. சாயந்திரம் வரதுவிடம் சொல்ல, ''டோண்ட் ஒர்ரி. இன்னைக்குக் கொஞ்சம் உடம்பு நல்லாயிருந்திருக்கும். நாளைக்கு வரலாம்னு இருந்திருப்பாங்க'' என்றார்.

சுப்ரமணியத்திற்கு மனசு கேட்கவில்லை. ஒரு நடை சுரண்டைக்குளம் போய்வரத் தீர்மானித்தான்.

பொத்துரெட்டிபட்டி விலக்கில் பஸ்ஸி லிருந்து இறங்கி, அருகில் இருந்த டீக்கடை யில் சுரண்டைக்குளத்துக்கு வழி கேட்க,

''அட, பாதையெல்லாம் ஒண்ணும் இல் லீங்க. இப்படியே வயக்காட்ல எறங்கி மேக் கால போங்க. ரெண்டு கல்லு போனீங் கன்னா ஒரு தென்னந்தோப்பு வரும். பிறகு தெக்கால திரும்பி ஒரு கல்லு போகணுங்க. மேடும் பள்ளமுமா இருக்கும். இந்நேரமா வந்திருக்கீகளே? ருவைக்க அங்கன தங்குற வகதானே?'' என்ற பதில் கிடைத்தது.

பெரிய மலைப்பு மனத்துள் தோன்ற ஒரு நிமிடம் திரும்பிவிடலாமா என்று யோசித் தான். சட்டென்று எண்ணத்தை உதறிவிட்டு இறங்கி நடந்தான்.

நடக்க நடக்க முத்துப்பாண்டியும் இதே போல்தான் நடந்து வரவேண்டும் என்ற உண்மை முள்ளாய்க் குத்தியது. மாட்டு வண்டி கூட வருவதற்குச் சாத்தியமில் லாத ஒரு பாதையை அப்போதுதான் பார்த் தான். கண் மயங்கும் நேரம், நூறு வீடுகள் கொண்ட ஒரு ஊரை அடைய — அதுவாகத் தான் இருக்குமோ என்ற சந்தேகம் எழுந் தது. முகப்பில் தெரிந்த ஒரு கடையை அடைந்து, ''ஏங்க சுரண்டைக்குளம்ங் கிறது...'' என்று ஆரம்பிக்க,

''ஆமாம், இதுதான். நீங்க யாரு? பத்திரி கைக்காரவுகளா?'' என்றான் பேப்பர் படித் துக் கொண்டிருந்த இளைஞன் ஒருவன்.

''இல்லை. நான் அரசாங்க ஆஸ்பத்திரி யில் கம்பவுண்டரா இருக்கேன். இங்க முத்துப்பாண்டின்னு ஒரு பொண்ணு இருக் குதே...!'' என்றவனை,

''இருக்குதே இல்லை சார். இருந்துச் சென்னு சொல்லுங்க'' என்று இடைவெட் டினான் இளைஞன்.

''மை காட்! என்ன சொல்றீங்க?'' என் றான் சுப்பிரமணியன். அவன் நினைவில் நேற்று கனவில் கும்பிட்ட முத்துப்பாண்டி தோன்றினாள். கண்ணீர் கன்னங்களில் வழிந்தது.

''சார், நீங்க யாரு? அவங்களுக்கு உறவா? ஐயாம் சாரி'' என்றான் இளைஞன்.

''இல்லை தம்பி. நான் அவங்களைப் பார்க் கணும்'' என்றான் சுப்பிரமணி.

இளைஞன் அழைத்துச் செல்ல, வீட்டை அடையு முன்னரே கிழவியின் ஒப்பாரி கேட்டது. நாலைந்து பேர் திண்ணையில் அமர்ந் திருக்க, குனிந்து வீட்டினுள் நுழைந்தான்.

'மருந்துக்காரய்யா! பார்த்தீகளா, நாளைக்கு வா. சேர்த்து விடறேன்னீகளே? எந்தங்கம் தர்மராசன்கூட சேர்ந்துட்டாளே'' என்று கதறினாள்.

கிடத்தப்பட்டிருந்த முத்துப்பாண்டியைப் பார்த்தபோது நெஞ்சு வெடித்துவிடும்போல் இருந்தது சுப்ரமணிக்கு. பொறுக்க முடி யாமல் வெளியேறினான்.

''எங்க ஊர் நிலைமையைப் பார்த்தீங்களா சார்?'' என்றான் வழிகாட்டிய இளைஞன். ரொம்ப தூரம் அலைஞ்ச அலைச்சலோ என்ன காரணமோ தெரியலை. முத்துப்பாண் டிக்குத் திடீர்னு வலி எடுக்க ஆரம்பிச் சிருச்சி. உள்ளூர் வைத்தியர் பார்த்துட்டு கையை விரிச்சிட்டார். நாங்க ஆம்பிளைங்க நாலஞ்சு பேர் முத்துப்பாண்டியைத் தூக்கிட்டு ரோட்டைப் பார்த்து ஓடினோம். பிர யோஜனமில்லை. பாதி வழியில உயிர் போயி டுச்சி.'' என்றான்.

அவன் வர்ணித்த காட்சி சுப்ரமணி யத்தின் மனத்திரையில் ஓடி வலியை அதிகரிக்கச் செய்தது.

இருட்டில் துழாவி நடந்து, பஸ் பிடித்து நகரத்தில் வந்து இறங்கிய போது, நகரம் அமைச்சர் ஒருவரை வரவேற்கத் தன்னை அலங்கரித்துக் கொண்டிருந்தது. சுவரில் ஒட்டப்பட்டிருந்த போஸ்டர்களில் வலது கர வாட்ச் தெரியக் கும்பிடு போட்டபடி நடந்து வந்து கொண்டிருந்தார் தலைவர் ஒருவர்.

'இருபத்தொன்றாம் நூற்றாண்டுச் சாலையில் எங்களை வழி நடத்திச் செல்லும் எங்கள் தங்கத் தலைவா, வாழிய நீ பல் லாண்டு!' — என்று வாழ்த்தியது அந்தச் சுவரொட்டி வாசகம்!

வாசகர் பங்கு

"நான் சொல்றேன், கேளுங்க!" – தளபதி திடமதி



எந்த நாளிதழை எடுத்தாலும் அதில் முதல் பக்கத்தில் இன்றைய சமுதாய அல்லது அரசியல் நிலைமையை வைத்து எழுதப்பட்ட ஜோக் ஒன்று இடம் பெறுகிறது. அதேபோல் கல்கியிலும் ஜோக் எழுத வசதியாக ஒரு கேரக்டரை உருவாக்கித் தந்திருக்கிறார் கார்ட்டூனிஸ்ட் உமாபதி. இந்தக் கேரக்டரின் பெயர்: தளபதி திடமதி. இவர் எப்படிப்பட்டவர் என்பது படத்தைப் பார்த்தாலே புரிந்து போகும். ''நான் சொல்றேன் கேளுங்க...'' என்று ஆரம்பித்து தளபதி திடமதி அபிப்பிராயம் கூறாத சமுதாய, அரசியல் பிரச்னையே இல்லை எனலாம். என்ன பேசுவார் என்பதைத்தான் வாசகர்கள் இரண்டு முதல் நாலு வரிகளுக்குள் கீழே உள்ள கூப்பனில் எழுதி, அதனை முழுமையாகக் கத்திரித்து அனுப்ப வேண்டும். உறையின் மேல் ''தளபதி திடமதி'' என்று குறிப்பிடுவது அவசியம். நவம்பர் 11 உ தொடங்கி ஒவ்வொரு வாரமும் புதன் கிழமையன்று அதற்கு முன்தினம் வரை வந்த கூப்பன்கள் பிரித்துப் படிக்கப் பெறும்.

ஒவ்வொரு வாரமும் தளபதி திடமதியின் நான்கு அல்லது ஐந்து அறிவுக் கொழுந்தான கருத்துக்கள் உமாபதியின் கார்ட்டூன்களுடன் பிரசுரமாகும். இப்படி ஆறு மாதங்களுக்குத் தளபதி திடமதி கல்கியின் ஒரு பக்கத்தை ஆக்கிரமித்து வருவார்.

பிரசுரமாகும் ஒவ்வொரு துணுக்கும் ரூ. 25 பரிசு பெறும். தவிர, ஒரே வாசகர் எழுதிய இன்னொரு துணுக்கு ஓரிரு வாரங்கள் சென்று இடம் பெற்றால் அவருக்கு ரூ. 50 பரிசு கிடைக்கும்! அதே வாசகர் எழுதிய மூன்றாவது துணுக்கு பிரசுரமானால் அவருக்கு ரூ. 100 கிடைக்கும்! நாலாவது தடவையில் ரூ. 200 ம் ஐந்தாவது தடவை ரூ. 400 ம் கிடைக்கும். இதற்கு மேல் சன்மானம் உயராது. ஆனால் ஆறாவது, ஏழாவது தடவையாக ஒருவரது துணுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டாலும் இதே ரூ. 400 தொடர்ந்து ஒவ்வொரு துணுக்குக்கும் கிடைத்து வரும்! எனவே தளபதி திடமதியின் உபயத்தால் மிக அதிகமான சன்மானத்தைப் பெற அடுத்த ஆறு மாதங்களுக்குள் முயற்சி செய்யுங்கள்!

கூப்பன் :

கல்கி 1.11.87 — முடிவு தேதி: 10.11.87.

தளபதி திடமதி: ''...

....

....

....


....

....

என் பெயர்:...

விலாசம்:...

....



nutrine
MILK
மீண்டும் மீண்டும்
சுவைக்கத் தூண்டும்
நியூட்ரின்
மில்க் பிஸ்கட்ஸ்
nutrine
BISCUITS
MILK
nutrine

13

பட்டேலின் இடத்தில் புதிய உள்துறை அமைச்சர்

நண்பர் ராமராவுக்கு ராஜாஜி எழுதினார்: "ஸர்தார் பட்டேல் மிகவும் நோய் வாய்ப்பட்டிருக்கிறார். குடலில் ரொம்ப வலி வேதனையை அனுபவித்துக் கொண்டிருக்கிறார். நாடாளுமன்றத்துக்குப் போக அவரால் முடியவில்லை. வீட்டை விட்டு வெளியே கிளம்பவே முடியவில்லை. இதனால் எனக்கு வேலைச் சுமை அதிகரிக்கிறது. ஆனால் வாழ்க்கை என்பது ஒத்துழைப்புத்தான். இயன்ற அளவு நமது சொந்த சுக சௌக்கியங்களை மறப்பது தான். கடைசியில் ஒருநாள், அன்னை பராசக்தி அழைப்பாள். 'போதுமடா குழந்தாய்; நீ விளையாடியது போதும்! வந்து என்னைச் சரணடைந்து விடு' என்பாள். அதுவரை காலத்தை ஓட்டத்தான் வேண்டும்."

டிசம்பர் 12 ஆம் தேதி பட்டேல் சிகிச்சைக்காக பம்பாய்க்கு விமானத்தில் அழைத்துப் போகப்பட்டார். விமான நிலையத்தில் ஸி. ஆர். அவரை வழியனுப்பி வைத்தார். நேருவும்பிரசாத்தும்கூட வந்திருந்தார்கள். மூன்று நாட்களுக்குப் பிறகு பட்டேலுக்கு ஒரு மாரடைப்பு ஏற்பட்டது. அடுத்த சில மணி நேரங்களில் அவர் காலமானார். அந்திமச் சடங்குகள் பம்பாயில் நடந்தன. ஜவாஹர்லாலும் ஸி. ஆரும் ஒரே விமானத்தில் பயணப்பட்டார்கள். வல்லபாயின் நீண்ட கால நண்பர் ஸி. ஆர்.தான் என்பதால் அவர் பேசும்படியிருந்தது. தமது வற்றி உலர்ந்த கன்னங்களைக் கண்ணீர் வழிந்து நனைக்க ஸி. ஆர். பேசினார். அவர்கள் இருவரும் நண்பர்கள் என்ற முறையில் மட்டுமின்றி லட்சியங்களிலும் அவற்றை அடையும் வழிமுறைகளிலும் மனமொருமித்து நெருங்கியிருந்தார்கள். இப்போது பட்டேல் காலமாகி விட்டார். நேருவுக்கு இருந்த ஒரே வேகத்தடை நீங்கிவிட்டது!

"உள்துறையை இனி நீங்கள்தான் கவனித்துக் கொள்ள வேண்டும்" என்று நேரு ஸி. ஆரிடம் கூறினார். வேறு வழியே இல்லை என்பது ஸி. ஆருக்கும் தெரியும். 'பட்டேலின் இடத்தில் வேறு யாரும் அமர முடியாது. ஆனால் பட்டேல் விட்டுச் சென்ற வெற்றிடத்தை இட்டு நிரப்புவது பற்றி ஸி. ஆர். கற்பனைக் கனவுகள் ஏதும் காணவில்லை. உடல்நிலை ஒத்துழைத்தால் உள்துறையை அவரால் கவனித்துக்கொள்ள முடியும். கொஞ்சம் அதிர்ஷ்டம் இருந்தால் நாட்டில் 'சட்ட ஒழுங்கை நிலைநாட்ட முடியும். அரசு அதிகாரிகள், ஊழியர்கள் ஆகியோரின் நம்பிக்கையைத் தக்க வைத்துக் கொள்ள முடியும்; மாநில ஆட்சிகள் சரியாக இயங்குகின்றனவா என்று கண்ணோட்டம் செலுத்தவும் முடியும். இவை சாமானியப் பணிகள் அல்ல. ஆனால் கட்சியிலோ மக்கள் மத்தியிலோ பட்டேலுக்கு இருந்தது போல் பெரும் செல்வாக்கு தமக்குக் கிடையாது என்பதை ஸி. ஆர். உணர்ந்திருந்தார். இவை இல்லாத போது

ராஜாஜி வாழ்க்கை வரலாறு — IV
ராஜ்மோகன் காந்தி



• "உள்துறையை இனி நீங்கள்தான் கவனித்துக் கொள்ள வேண்டும்!"

நேருவின் ஆளுமைக்கும் கனகாம்பீரத்துக்கும் தம்மால் ஈடுகொடுக்க முடியாது.

பத்திரிகையாளரைச் சந்தித்த போது வி. ஆர்., தம்மை எதிர்க்கக் கூடியவர்கள் கூட வலிமை இழந்து போகுமாறு அடக்கத்துடன் பேசினார்: ''என் மீது சுமத்தப்பட்டிருக்கும் பணிக்கு நான் நியாயம் செய்ய வேண்டுமென்றால் நாடாளுமன்றத்தில் உள்ள சகாக்களும்; அரசு அதிகாரிகளும் ஊழியர்களும்; நாடெங்கும் உள்ள தலைவர்களும் எனக்குத் தாராளமான ஒத்துழைப்பு தந்து என் பணியை இலகுவாக்கினால்தான் முடியும்.''

அமைச்சரவையில் இரண்டாவது இடத்தைப் பெற்றார் வி. ஆர்.. நேரு தலைநகரில் இல்லாத சமயங்களில் அமைச்சரவைக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்கினார்; அயல் தேச ஆட்சித் தலைவர்களின் விஜயங்களின் போது சம்பிரதாய நிகழ்ச்சிகளில் நேரு இல்லாத குறையை இட்டு நிரப்பினார். இருந்த போதிலும் அவருக்குத் துணைப் பிரதமர் என்ற பதவி வழங்கப்படவில்லை. அந்தப் பதவி பட்டேலின் மரணத்துடன் தானும் உயிரை விட்டு விட்டதாகவே தோன்றியது. பட்டேல் துணைப் பிரதமராக இயங்கியதாகக் கூடக் கூற முடியாது; அதற்குமேல் இணைப் பிரதமராக இயங்கியதாகவே சொல்லலாம். இந்தியாவுக்கு இரட்டைப் பிரதமர்கள் இருந்ததாகவே கருதலாம்.

தமது இயல்புக்கு ஏற்ப வி. ஆர். கண்டிப்பான உள்துறை அமைச்சராகத் திகழ்ந்தார். ஹைதராபாத் பிரதேசத்தில், தெலிங்கானா பகுதியில் கம்யூனிஸ்டுகள் ஒரு வன்முறை இயக்கத்தைத் தொடங்கியிருந்தார்கள். வி. ஆர்., அதனை அடக்க முழு முயற்சி மேற்கொண்டார். துப்பறியும் பிரிவின் அந்நாளையத் தலைவர் பி. என். முல்லிக் கூறுகிறார்: ''எந்தவிதமான சமாதானமும் தேவையில்லை; கிளர்ச்சி ஒடுக்கப்பட வேண்டும்' என்று எங்களுக்கு உத்தரவாயிற்று. பிரதமர், ரொம்பக் கடுமையாக நடந்து கொள்ள வேண்டாம் என்று அபிப்பிராயப்பட்டார். ஆனால் வி. ஆர். இதற்கு இடம் தரவில்லை. அன்று வி. ஆரின் கருத்தே வென்றது. இறுதியில் 'இயக்கத்தை உடைத்தாகி விட்டது' என்று வி. ஆரிடம் எங்களால் அறிக்கை சமர்ப்பிக்க முடிந்தது.''

தெலிங்கானா நடவடிக்கையில் வி. ஆர். பிரயோகித்த முக்கியமான ஆயுதம் 'தடுப்புக் காவல் சட்டம்.' இந்தச் சட்டத்தைப் பட்டேல் நாடாளுமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றியிருந்தார். அது மேலும் ஓராண்டு காலத்துக்குச் செல்லுபடியாகும் என்ற மசோதாவை இப்போது வி. ஆர். நாடாளுமன்றத்தில் கொணர்ந்து அதற்கு ஆதரவு கோரிப் பேசினார். அப்போது கம்யூனிஸ வன்முறையையும் அதன் செயல்பாடு





மாப்பிள்ளையின் அப்பா: வரதட்சணை யை நாங்க கண்டு விரலாலே கூடத் தொட மாட்டோம்!

பெண்ணின் அப்பா: அப்படியா! உண்மையாகவா?

மாப்பிள்ளையின் அப்பா: ஆமா, என்னோட மருமகனுக்குத் தர வேண்டிய வரதட்சணை பாக்கி இருக்கறதாலே நீங்க தரவேண்டியதை அப்படியே அவர் கையிலே கொடுத்திடுங்க!

— பூ. பெருமாள்சாமி.



"மாப்பிள்ளை ரொம்பப் படிச்சவருன்னு சொன்னேன்... நம்ப மாட்டேன்னியே... பார்த்தியா...?"

— கரடிகுளம் ஜெயாபாரதிப்ரியா.

ந்துணுக்கங்களையும் அவர் கடுமையாகக் கண்டித்தார்: "கம்யூனிஸ்டுகள் முதலில் தியாகம், அபாயம், ரகசியம் என்றெல்லாம் பேசி மனிதர்களுக்கு ஆசை காட்டி அவர்களை ஈர்க்கிறார்கள். இதில் ஏதோ வீர சாகசம் இருப்பதாக எண்ணிக் கவரப்பட்டு வருகிறவர்கள், சட்டத்திற்குப் புறம்பான விதத்தில் குற்றங்கள் புரியுமாறு ஏவி விடப்படுகிறார்கள். ஒரு குற்றம் இழைத்துவிட்டால் பிறகு அவர்கள் கழன்று கொள்ளவே முடியாதபடி சிக்கி விடுகிறார்கள். இதற்கு பிளாக்மெயில் உதவுகிறது.

இந்தத் தடுப்புக் காவல் சட்டம் அரசியல் எதிரிகளுக்கு விரோதமாகப் பயன்படுத்தப்படாது" என்று உறுதி அளித்த ஸி. ஆர்., "இந்தச் சட்டத்தை எந்த அதிகாரியாவது துஷ்பிரயோகம் செய்வதாகத் தெரிய வந்தால் அவர் நாட்டின் விரோதியாகக் கருதப்படுவார்" என்றும் கூறினார். கூடவே, "இச்சட்டம் வன்முறையாளர்கள், கறுப்பு மார்க்கெட்காரர்கள், சதா வகுப்புத் துவேஷத்தைத் தூண்டிவிட்டுக் கொண்டிருப்பவர்கள் ஆகியோருக்கு எதிராகப் பயன்படுத்தப்படும்" என்றும் விளக்கினார்.

அரசியல் சாசனத்தின் முதல் திருத்தம் ஸி. ஆர். உள்துறை அமைச்சராக இருந்த போதுதான் நாடாளுமன்றத்தில் அவரது வாதத் திறனால் நிறைவேறியது. சொத்து வைத்துக் கொள்ளும் சுதந்திரம்; பேச்சு சுதந்திரம் ஆகியவற்றுக்கு நிபந்தனைகளை விதித்த சட்டத் திருத்தம் இது. வன்முறைகளைத் தூண்டி விடுவதைத் தடுக்கவும் நிலச்சீர்திருத்தச் சட்டத்தை அமலாக்குவதில் ஏற்படக் கூடிய தடைகளை நீக்கவும் இந்தச் சட்டத் திருத்தம் அத்தியாவசியம் என்று அரசாங்கம் கருதியது. இந்த முதல் சட்டத் திருத்தம் நிறைவேறியதானது, பின்னால் ஸி. ஆருக்குப் பத்திரிகைச் சட்டத்தை நிறைவேற்றவும் வசதி செய்து தந்தது. ஸி. ஆர். தமது பதவிக் காலத்தின் இறுதி நாட்களில் நிறைவேற்றி வைத்த பத்திரிகைச் சட்டம் மிகுந்த வாதப் பிரதிவாதங்களுக்கும் கடுமையான விமர்சனத்துக்கும் உள்ளாயிற்று.

பிரிட்டிஷ் காலத்திலேயே பத்திரிகைச் சட்டம் என்பதாக ஒன்று இருந்தது. இந்த 1931 ஆம் ஆண்டுப் பத்திரிகைச் சட்டம் இன்னமும் அமுலில் இருக்கத்தான் செய்தது. ஆனால் குடியரசு இந்தியாவின் புதிய அரசியல் சாசனத்தின் அடிப்படையில் யாராவது இந்தப் பத்திரிகைச் சட்டத்தை எதிர்த்து நீதிமன்றத்துக்குச் சென்றால் பத்திரிகைச் சட்டம் நிச்சயம் அடிபட்டுப் போகும். அதனால் புதிய பத்திரிகை ஒழுங்கமைப்புச் சட்டத்துக்கு அவசியம் இருந்தது. அரசியல் சாசனத்தின் முதல் திருத்தம் இப்படி ஒரு சட்டம் கொண்டு வருவதைச் சாத்தியமாக்கியது. இந்தச் சட்டத்தை உருவாக்கியதில் நேருவுக்கும் முக்கிய பங்கு உண்டு என்றாலும் ராஜாஜி தனி ஒருவராகவே நாடாளுமன்றத்தில் இம்மசோதாவைப் பிரேரித்து அதற்கு ஆதரவு தேடினார். இந்தப் பத்திரிகைச் சட்டத்தின்படி ஒரு பத்திரிகையாளர் மீது முழு வழக்கு நடந்து குற்றம் நிரூபணமானால் அவரிடம் எதிர்காலத்துக்கு ஒரு பாதுகாப்புத் தொகையைக் கேட்டு வசூலிக்க அரசுக்குப் பூரண உரிமை உண்டு. வழக்கின் போது குற்றம் சாட்டப்பட்ட பத்திரிகையாளர், ஜூரி வேண்டும் என்று கோரலாம். அந்த ஜூரி பத்திரிகையாளராகவோ அல்லது பொது வாழ்க்கையில் ஈடுபட்ட பெரிய மனிதர்களாகவோ இருக்கலாம். மேலும் குற்றம் சாட்டப்பட்டவருக்கு உயர்நீதிமன்றத்துக்குப் போகும் உரிமையும் வழங்கப்பட்டிருந்தது. ஆனாலும் சுதந்திரப் போராட்ட காலத்தில் காங்கிரஸ், பத்திரிகைச் சுதந்திரத்துக்காகப் பலமாகக் குரல் கொடுத்திருந்தது. எனவே ராஜாஜியின் பத்திரிகைச் சட்டம் காரசாரமான விமர்சனத்துக்கு உள்ளாயிற்று.

(தொடரும்)

கரண்டிச் சண்டையின் சுகம் தனிக் குடித்தனத்தில் கிடைக்குமா?



● மனைவி (கணவனிடம்): என்ன இருந்தாலும் உங்கம்மாவுக்குத் தலைக் 'கனம்' அதிகம்தான்.

கணவன்: எதை வைச்சுச் சொல்லுறே?

மனைவி: நேற்றைய எங்க சண்டையில் நான் உபயோகித்த கரண்டியை வைச்சுத்தான். கரண்டி உடைஞ்சுடுத்து!

— என். கே. வெங்கடேஷ், பம்பாய்—71.

● மாமியார்: ஏ கங்கா, கோவிலுக்குப் போகலாம், வா!

மருமகள்: ஏன்? எதற்கு?

மாமியார்: நமது முதல் சண்டையைச் சாமி கும்பிட்டுவிட்டு ஆரம்பிக்கத்தான்!

— விஜயா, ஈரோடு — 9.

● மனைவி கணவனிடம்: பார்த்தீர்களா இந்த அநியாயத்தை? உங்கம்மா இன்னிக்கு மௌன விரதமாம்; அதுக்காக நேற்றே என்னைத் திட்டி 'டேப்' எடுத்து இன்னிக்குப் போட்டுக் காண்பிக்கிறாங்க!

— எல். மகாதேவன், கோவை — 26.



● மருமகள்: எனக்கு நாக்கு நீளம்னு நீங்க எங்கிட்டேயே சொல்லியிருக்கலாம். அதை விட்டுட்டு என் மகனோட

அப்ளிகேஷன் ஃபார்ம்ல 'Mother Tongue' என்பதற்கு 'ரொம்ப நீளம்'னு நீங்க எழுதினது கொஞ்சம் கூட நல்லா இல்லே!''

— ஜி. ஜி. மகேஷ், சென்னை — 1.

- ஒருவர்: ஏண்டா, உன் அம்மாவுக்கும் மனைவிக்கும் என்ன சண்டை?

  மற்றவன்: நான் தீபாவளிக்கு எடுத்த பேண்ட்டை யார் பாத்திரக்காரனுக்குப் போடறதுங்கிறதுலதான் வாய்ச் சண்டை முற்றிக் கரண்டிச் சண்டையாகிவிட்டது.

  — எம். வனசுந்தரி, கும்பகோணம் — 1.



- மாமியார் (மருமகளிடம்): ''இதுவரைக்கும் நாம எலியும் பூனையுமா வாழ்ந்துட்டோம். இனிமேலுள்ள நாளையாவது சண்டை சச்சரவு இல்லாம கழிக்கலாம்.''

  மருமகள்: இவ்வளவு சீக்கிரம் நாங்க தனிக்குடித்தனம் போக நீங்க அனுமதிப்பீங்கன்னு நான் எதிர்பார்க்கவேயில்லே, அத்தை!

  —லஷ்ஜனு, நாகர்கோவில் — 2.

- ''நீதான் அம்மா வீட்டுக்கு வந்துட்டியே, இன்னும், 'மாமியார் சண்டை போடறாங்க'ன்னு எப்படிச் சொல்லறே?''

  ''அதுவா, நானும் என் மாமியாரும் தபால் மூலம் சண்டை போட்டுக்கறோம்!''

  — ஏ. கார்த்திகேயன், சென்னை — 83.

ரூ. 200 பரிசு பத்துப் பேருக்கும் சமமாகப் பகிர்ந்து அளிக்கப்படுகிறது.

- அவன்: என் மாமியார் என்ன பேசினாலும் எதிர்த்துப் பேசிச் சண்டை போடாமல், நான் சமாதானமாகவே போனது ரொம்பத் தப்பாப் போச்சுடி!

  இவள்: ஏன், என்னாச்சு?

  அவன்: தம்முடன் எதிர்த்துப் பேசிச் சண்டை போட ஒரு மருமகன் வேண்டுமென்பதற்காக, என் கணவருக்கு இன்னொரு கல்யாணம் பண்ணி வச்சுட்டார்டி!

  — கு. கணேசன், சென்னை — 15.

- ஒரு பெண்: என் மாமியாருக்குத் திமிர் அதிகம்!

  மற்ற பெண்: எதை வச்சுச் சொல்றே?

  முதல் பெண்: எனக்குப் பிள்ளை பிறந்தவுடன் 'பேயும் சேயும் நலம்'னு எங்கப்பாவுக்குத் தந்தி கொடுத்துட்டா!

  — பி. மைதிலி, திருச்சி — 1.



- ''இருந்தாலும் உங்க அம்மா ரொம்ப மோசம்பா!''

  ''ஏன் அப்படிச் சொல்றே?''

  ''நேத்து என்கிட்டே வந்து 'ரிமோட் கண்ட்ரோல்ல வெடிக்கற காஸ் ஸ்டவ் எங்கேயாவது கிடைக்குமான்னு விசாரிக்கறாங்களே!''

  —ச. பாஸ்கரன், சென்னை — 52.

வேரில்லாத மரங்கள்

இரண்டு வாரங்களாக வந்தவை...

வசந்தா —

வருங்காலக் கணவனைப் பற்றிய கனவுகளோடு இருப்பவள். தான் முதன் முதலாக வேலைக்குப் போகும் சந்தோஷத்தில், அன்று காலை அண்ணனின் குழந்தைக்கு ஞானஸ்நானம் நடந்து முடிந்தவுடன் அவசரமாகச் சர்ச்சிலிருந்து புறப்படுகிறாள்...

பாங்கில் வேலை பார்க்கும் மாதவன், தனக்கு வரப் போகும் மனைவி எப்படியெப்படியெல்லாம் கவர்ச்சியாக இருக்க வேண்டும் என்ற நினைவுகளோடு, சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு பஸ்ஸுக்காக நடக்கும்போது, சர்ச்சிலிருந்து வெளி வரும் அவளைப் பார்க்கிறான்...

அதே கணம் வசந்தாவும் அவனைப் பார்க்க, இருவர் கண்களின் சந்திப்பையும் மீறி அவன் பார்வை அவள் நெஞ்சில் தொங்கும் சங்கிலியில் கோக்கப்பட்டுள்ள சிலுவைச் சின்னத்திலும் அவள் பார்வை அவன் நெற்றியில் பளிச்சிடும் விபூதிச் சின்னத்திலும் பதிகின்றன......

3

பத்திரிகையில் கவனம் பதியவில்லை.

அந்த வாரப் பத்திரிகை. அவன் விரும்பிப் படிக்கும் எழுத்தாளரின் தொடர் வெளியாகும் பத்திரிகை. வழக்கமாய்க் கையில் எடுத்தால், 'தொடரும்' என்கிற வார்த்தை வரையில் ஒரே மூச்சில் படித்து முடிப்பவனால், இன்று அப்படிச் செய்ய இயலவில்லை. எழுத்தில் புத்தி போகாதபடி ஜெயராஜின் ஓவியம் பரபரக்க வைப்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது.

லேசாக மொழுமொழுத்த உடம்பு. குறுகி, கவர்ச்சியாய் விரியும் இடை. மேக மூட்டமாய் மார்புப் புடைவை...

அப்படியே 'அவள்' தான்...

மாதவன் கண்களை மூடிக் கொண்டான்.

சொடுக்குப் போட்டுக் கூப்பிட்டதும் ஓடிவரும் நாய்க்குட்டி மாதிரி அவள் நினைவு மனத்தில் ஏறி உட்கார்ந்தது...

அதே வாளிப்பான உடல், பரவசமூட்டும் பார்வை, நளினம்...

ஹோ! யாரிவள்...?

கிட்டத்தட்ட பதினைந்து நாட்களாகப் போகின்றன. ஆனாலும் அவள் யார், பேர் என்ன, எங்கு வேலை பார்க்கிறாள் என்கிற விவரங்கள் இன்னமும் தெரியவில்லை.

எட்டு ஐம்பது பஸ்ஸைப் பிடிக்கத் தினமும் வருகிறாள்; யாரிடமும் ஒரு வார்த்தை பேசாமல் நிற்கிறாள்; பயணிக்கிறாள்; ஆயிரம் விளக்கு நிறுத்தத்தில் இறங்கி விடுகிறாள்... அப்புறம்? எந்த அலுவலகத்தில் வேலை பார்க்கிறாள்? தெரியாது. எத்தனை மணி பஸ்ஸில் மாலையில் திரும்புகிறாள்? தெரியாது. இங்கு எங்கு வசிக்கிறாள்? தெரியாது.

முதல் நாலு நாட்கள் அவளைத் தொடர்ந்து பஸ் ஸ்டாப்பில் பார்த்த பிறகு, அவளைப் பற்றிய விவரங்களை இன்னும் இன்னும் தெரிந்து கொள்ள வேண்டும் என்கிற ஆர்வம் தோன்றிய பிறகு, பாங்குக்கு அரை நாள் லீவு போட்டுவிட்டு, அவள் பின்னோடு ஆயிரம் விளக்கில் இறங்கிச் சென்று, எங்கு வேலை பார்க்கிறாள் என்று தெரிந்து கொள்ளலாமா என்று நினைத்தவன், ஒரு சில நிமிஷங்களிலேயே 'வேண்டாம் அது சரியல்ல' என்று தன் நினைப்பை மாற்றிக் கொண்டு விட்டான்.

பின்னே?

அவள் யார், திருமணம் ஆனவளா, ஆகாதவளா, எப்படிப்பட்ட குணம் கொண்டவள் போன்ற எந்த விவரமும் தெரியாத நிலையில், அவள் பின்னோடு சென்று வேவு பார்த்தால், 'யாரிவன், பொறுக்கித்தனமாய் நடந்து கொள்கிறான்?' என்று நினைத்துவிட மாட்டாளா?

ம்ஹூம் — வேண்டாம்.

பஸ்ஸிலும், பாங்கிலும் எத்தனையோ பெண்களைத் தினமும் பார்க்கிறேன். அழகாய் இருந்தால் ரசிக்கிறேன், அதோடு மறக்கிறேன். அப்படித்தானே இவளும்!

ஒரு தினுசாய்ச் சமாதானம் செய்து கொண்டு, அவளைப் பற்றி நினைக்காமல் இருக்கத் தீர்மானித்ததைச் செயலில் காட்ட முடியாதபடி, அடுத்து வந்த நாட்களில் காலை நேரத்தைத் தவிர ஒரு மாலைப் பொழுதில் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டு நர்சிங் ஹோமில் படுத்திருந்த முத்துவேலைக்

சிவசங்கரி

காணச் சென்ற போது அங்கும், ஞாயிறு மாலை மெரினு கடற்கரையிலும் எதேச்சை யாய் அவளை மீண்டும் பார்க்க நேர்ந்த போது, மாதவன் வாஸ்தவமாகவே ஆச்சர் யித்துத்தான் போனன்.

எங்கிருந்து இவள் திடுமென முளைத்திருக் கிறுள்!


இத்தனை நாட்களாய்க் கண்களில் படாமல் இருந்தவள், இப்போது அடுத் தடுத்துப் பார்வையில் விழுவதோடு, மனத்தையும் அவ்வப்போது வருடிக்கொடுப் பது ஏன்?

காலையில் பஸ் ஸ்டாப்பில் பார்க்கிறேம், சரி — இப்போது இங்கும் அங்கும் செல்லும் போதும் கண் எதிரில் வலியத் தோன்றி, நின்று, சிந்தனையை ஆக்கிரமிப்பது ஏன்?

வியப்போடு தனக்குத் தானே கேள்வி கேட்டுக் கொண்ட போது, தெளிவாகப் பதில் ஏதும் கிடைக்காவிட்டாலும், சின்ன வயசில் ஆயா கூறிய வார்த்தைகள் ஞாப கத்தில் முட்டி, அவன் வியப்பை அதிகமாக் கின.

'தெய்வ சங்கல்பம்ச', ஒண்ணு இருக்கு ராஜா. அதை மீறிக்கிட்டு யாரும் எதுவும் செஞ்சிட முடியாது. நமக்கு ஒண்ணு நடக்க ணும்னு இருந்தா, நீ என்னதான் வேணும்னு





மானேஜர் (பியூனிடம்): யாராவது ஆபீஸில் தூங்கினால் என்னிடம் வந்து உடனே சொல்லச் சொன்னேனே...?

பியூன்: சொல்லத்தான் வந்தேன் சார்... நீங்க நல்லாத் தூங்கிக்கிட்டு இருந்தீங்க...! அப்படியே நானும் கொஞ்சம் கண் அசந்துட்டேன்.

— தேனி. எஸ். மாரியப்பன்.

ஒதுங்கி நின்னாலும் மடில வந்து விழத்தான் செய்யும். இதுக்குப் பேர்தான் விதி. அது நடக்க வேண்டியப்ப கட்டாயம் நடந்தே தீரும். ஆமா...

நிஜமாகவா?

ஆயா சொன்ன மாதிரி இவளும் நானும் அடிக்கடி சந்தித்துக் கொண்டே தீர வேண்டும் என்று விதிக்கப்பட்டிருக்கிறதா?

எதற்காக?

புரியவில்லை.

ஆனால், அந்த ஞாயிறு மாலை, அந்திச் சூரியன் மலைவாசலில் விழுந்து கொண்டிருந்ததை ரம்யமான அந்தச் சூழ்நிலையில் தேவதை மாதிரியான தோற்றத்தோடு, புடைவையும், தலை முடியும் காற்றில் பறக்க மணலில் நடந்தவளைப் பார்த்த பிறகு, மனசு இரவு பூராவும் வேறு எதையும் நினைக்க முடியாதபடி ரொம்பத்தான் 'ஹா ஹா' என்று பொங்கிப் போயிற்று.

மறுநாள் காலை பஸ்ஸுக்காகக் காத்திருந்த நாழிகையில், இவளைப் புரிந்து கொண்ட நினுசில் அவள் உதடுகள் மிகமிகச் சன்னமாய் முறுவலிப்பதைப் புரிந்து கொண்ட போது, மனத்தின் குதிப்பு இன்னும் அதிகமாகித்தான் போனது.

அந்தக் குதிப்பின் காரணமாய்த்தான் மறுநாள் இவன் அவளைப் பார்த்துச் சிரித்தான். அதற்கும் அடுத்த நாள் தலை அசைத்து மௌனமாய் வரவேற்றான். அதற்குப் பிறகு மிகுந்த தைரியத்தோடு அருகில் சென்று, 'குட்மார்னிங்' என்று 'விஷ்' செய்தான், 'இந்தக் காலை நேரத்துலயே வெயில் அதிகமாக இருக்கு இல்ல?' என்று பொதுவாகப் பேசினான்.

மேற்கொண்டு நட்பைத் தொடர முடியாதபடி, விடுமுறை நாட்கள் வந்துவிட, எப்போதடா மறுபடியும் வேலைக்குப் போகலாம் என்கிற துடிப்போடு காத்திருக்கும் நாழிகையில், 'ஜெயராஜ் ஓவியத்தைப் பார்த்தால் கூட அவள் நினைவு எழுவதில் ஆச்சர்யம்தான் என்ன!

மாதவன் கண்களைத் திறந்து கையிலிருந்த பத்திரிகை ஓவியத்தை மீண்டும் ஒரு முறை ஏறிட்டான்.

அவளேதான்... அசல் அவளேதான்...

மாதவனுக்குப் பெண்கள் அதிக ஒல்லியாய் இருந்தால் பிடிப்பதில்லை. துருத்தின தோள்பட்டை எலும்பும், அணைத்தால் உறுத்துமோ என்கிற பயத்தை உண்டாக்கும் உடம்பும்... தத்... என்ன இருந்தாலும், லேசான மொழுமொழுப்புடன் ரவிவர்மா ஓவியம் போல இருக்கும் பெண்களின் தோற்றம் தரும் கிளுகிளுப்பு அலாதிதான்...

சட்டென்று மாதவனுக்கு ஒரு தரம் உறவினர் வீட்டுத் திருமணத்துக்கென திருவனந்தபுரம் போயிருந்தபோது, அங்கிருந்த அரண்மனையில் ரவிவர்மாவின் ஓவியங்களைப் பார்த்து ரசித்தது நினைவுக்கு வந்தது.

மெழுகுவர்த்தி போல வழவழவென்று விரல்களும், வெண்கலக் குத்துவிளக்கை ஏற்றி வைத்த மாதிரி வாளிப்பான உடற்கட்டும், பெரிய கண்களும், கறுப்புத் தலைமுடியும்...

'பெண் என்றால் அப்படி அல்லவா இருக்க வேண்டும். ரவி வர்மா ஓவியம் மாதிரி... நடிகை மும்தாஜ் மாதிரி...

இவள் அப்படித்தானே இருக்கிறாள்?

லேசாய் உயர்ந்த மூக்கு நுனியும், கதுப்புக் கன்னங்களுமாய்...?

யாரிவள்?

பேர் என்ன என்று கூடத் தெரியவில்லையே?

என்னவாக இருக்கும்? ரம்யா? மாலினி? சீதா?

மானசீகமாய் அவளைத் துளித்துளியாகப் பார்த்தபோது, மார்பு மேல் மின்னும் சிலுவை நினைவுக்கு வர, மாதவன் புருவங்களை யோசனையுடன் உயர்த்தினான். ஆமாம், கழுத்தில் சிலுவை தொங்குகிறதே. அப்படியென்றால் கிறிஸ்துவக் குடும்பத்தைச் சார்ந்தவளா?

எப்படி இத்தனை நாட்களில் அதுபற்றி யோசித்துப் பார்க்கத் தவறினேன்?

அவள் அழகையும், 'பேர் என்ன, எங்கு வேலை பார்க்கிறாள் என்பது குறித்தும் சிந்தித்தவன் இந்த விஷயத்தை நினைக்காமல் இருந்தது எப்படி?

நகத்தைக் கடித்தபடி யோசனையில் ஆழ்ந்த போது 'அதனால் என்ன?' என்கிற எதிர்க் கேள்வி எழுந்தது...

சரி, கிறிஸ்துவப் பெண்ணாகவே இருக்கட்டுமே... அதனால் என்ன?

ஒரு பெண்ணைத் தெரிந்து கொள்வதற்கும், அவளோடு நட்போடு பழகுவதற்கும் மதம் எதற்காகக் குறுக்கே நிற்க வேண்டும்?

பஸ் ஸ்டாப்பில் சந்திக்கிறோம் — சௌக்கியமா என்று ஒரு வார்த்தை பரிமாறிக்

கால் நூற்றாண்டுக்கும் மேலாக ரசிகப்பெருமக்களுக்கு இன்பத்தைப்பொழியும் வீனஸ்.



வீனஸ்

வாட்டர் ஹீட்டர்

வசதி கொண்ட வாழ்க்கை வாழும் ரசிகர்களுக்கு 25 ஆண்டுகளாக தன் முழு அபிமானத்தை வாரி வழங்குகிறது வீனஸ். என்றென்றும் வீனஸ் தர முன்னணியில் நிற்க அதன் உயர்ந்த தயாரிப்பே காரணம்.

வீனஸ்: உங்கள் ரசனையின் பிரதிபலிப்பு

தயாரிப்பு & விற்பனை:

ஸ்டாண்டர்ட் எலக்ட்ரிக் அப்ளையன்ஸஸ்

• சென்னை • பெங்களூர் • கல்கத்தா • பம்பாய் • புது டில்லி

• தலைமை ஆபீஸ் & பாக்டரி: தூத்துக்குடி, தமிழ்நாடு.

கொள்ளப் போகிறோம். பஸ்ஸுக்காகக் காத்திருக்கும் நாழிகையில் முடிந்தால் அவரவர் பற்றிய விவரங்களைக் கொஞ்ச மாகப் பேசிக் கொள்ளப் போகிறோம். அவ்வளவுதானே! இதற்கு ஜாதி, மதம் என்ன என்கிற குறுக்கு விசாரணை எதற்கு?

தவிர, அவளை...

மேலே சிந்தனையைத் தொடர விடாமல், துரை மூச்சிரைக்க மாடிக்கு ஓடிவந்து 'ஸார்' என்று அழைத்ததில், மாதவன் திரும்பினான்.

"விஷயம் தெரியுமா ஸார்?"

"என்ன?"

"பஸ் கண்டக்டர் ஒருத்தரை யாரோ அடிச்சிட்டான்ங்கறதுக்காக அத்தனை பஸ் காரங்களும் அங்கங்கே வண்டியை நிறுத்திட்டு வீட்டுக்குப் போயிட்டாங்களாம்... ஸ்டிரைக் ஸார்... இன்னிக்கு எங்கேயும் பஸ் ஓடா தாம்..."

மாதவன் தூக்கிவாரிப் போட எழுந்து நின்றான்.

"பஸ் ஓடாதா? அதான் கொஞ்ச நேரமா தெரு இத்தனை அமைதியா இருக்கா? எனக்கு பாங்குக்குப் போகணுமேடா?"

"அது கொண்டுதானே ஸார் நான் இந்த ஓட்டம் ஓடி வர்றேன்? ஆட்டோ மாணிக் கண்ணன் ஏதோ அடைப்பு இருக்குன்னு ஓர்க் ஷாப்புக்கு வண்டியை எடுத்துக்கிட்டு வந்திருக்காரு... அவருதான் விஷயம் இப்ப டின்னு சொல்லிட்டு, 'மாதவன் ஸார் பாங்குக்குப் போகணும்னு நான் கொண்டு விடறேன்னு சொல்லு, பாரிஸ் கார்னருக்குப் போக வேண்டிய வேலை இருக்குன்றாரு... என்ன சொல்றீங்க?"

சொல்ல என்ன இருக்கிறது?

பஸ் ஸ்டிரைக் என்று வீட்டில் உட்கார்ந்து விட முடியுமா? நேரத்தோடு பாங்கில் இல்லை என்றால் மானேஜர் முகடு முறைப் பானே!

இந்த மாணிக்கம் ஒரு காலத்தில் மாதவனோடு பள்ளியில் படித்தவன். மேலே படிக்க வசதியில்லாமல், இப்போது ஆட்டோ ஓட்டிப் பிழைப்பை நடத்துபவன். பழைய நட்பை விடாமல் வைத்துக் கொண்டிருப்ப தால் சமயத்தில் வலிய வந்து உதவுகிறான். வாழ்க!

பத்திரிகையை மூடி வைத்துவிட்டு எழுந்த நிமிஷத்தில் 'அவள்' நினைவு மறுபடியும் குதித்துக் கொண்டு எழுந்தது.

'அவள்' என்ன பண்ணுவாள்?

இந்த ஏரியாவில் லேசில் ஆட்டோ, டாக்சி ஒன்றும் கிடைக்காது என்பதோடு, அப்படிக் கிடைத்தாலும் அவனவன் இன்றைக்குச் சம்பாதித்தால்தான் என்பது போல ஏகத்துக்குப் பணம் கேட்பானே!

ஆயிரம் விளக்கு நடந்து போகும் தூரத்திலும் இல்லையே! பாவம்...

மாணிக்கம் ஆட்டோவை பஸ் ஸ்டாப் வழியாக ஓட்டச் சொல்லி, அவளையும் ஏற்றிக் கொண்டு போனால் என்ன?

தீர்மானம் எக்கச்சக்கமாய் சந்தோஷம் தர, மாதவன் பரபரப்புடன் எழுந்தான்.

அவசரமாய்க் குளித்து, தயாராகி ஓர்க் ஷாப்புக்குச் சென்ற போது வண்டியுடன் மாணிக்கம் காத்திருந்தான்.

"தாங்க்ஸ் மாணிக்கம் — சமயத்துல நீ வந்து விஷயத்தைச் சொல்லலேன்னா, நான் வழக்கம் போலக் கிளம்பி பஸ் கிடைக்காம தவிச்சிருப்பேன்..."

பேசிக் கொண்டே மாதவன் ஏறி அமர்ந்ததும் மாணிக்கம் ஆட்டோவைக் கிளப்பினான்.

"உனக்குப் பாரிஸ் கார்னர்லே ஏதோ வேலை இருக்கிறதா துரை சொன்னானே — உடனே போகணுமா?"

"பத்து மணிக்கு இருந்தாப் போதும்... ஏன் கேக்கறே?"

"அப்படின்னா டிபன் சாப்டுட்டுப் போக லாமா?"

மீனாட்சி சைவ உணவு விடுதியில் நிதானமாகச் சாப்பிட்டு, மாணிக்கத்துக்கும் சேர்த்துப் பணம் தந்துவிட்டு வெளியே வந்த போது, கைக்கடிகாரம் மணி எட்டே முக்கால் என்றது.

மாதவனின் கணக்கு தப்பவில்லை.

பஸ் ஸ்டாண்டில் கவலையுடன் காத்திருந்த நபர்கள் மத்தியில் 'என்ன செய்யப் போகிறோம்?' என்கிற பதைப்புடன் அவளும் நின்றிருக்க, "ஒரு நிமிஷம் மாணிக்கம்" என்று வண்டியை நிறுத்தச் சொன்ன மாதவன் இறங்கி நேராக அவளிடம் சென்றான்.

"மன்னிக்கணும் மிஸ்... இன்னிக்கு பஸ் ஸ்டிரைக்... தெரியும்னு நினைக்கிறேன். உங்களுக்கு ஆட்சேபணை இல்லாட்டி என் கூட நீங்களும் ஆட்டோவிலே வரலாம். உங்களை ஆயிரம் விளக்குல இறக்கிட்டு நான் மௌண்ட் ரோடு போறேன்..."

அவள் அரை நிமிஷம் தயங்கினாள். பிறகு வேறு வழியில்லை என்பதை உணர்ந்தவளாய் ஆட்டோவில் ஏறி உட்கார —

அந்தப் பதினைந்து நிமிஷப் பயணத்தில் அவள் பேர் வசந்தமேரி; தாய் தகப்பன் இல்லாதவள்; ஒரு டிராவல் ஏஜன்ஸியில் வேலை பார்க்கிறாள் என்பதை அவனும்; அவன் பேர் மாதவன்; பெற்றவர்கள் காஞ்சிபுரத்தில் இருக்கிறார்கள்; ஒற்றைப் பிள்ளை; பாங்கில் வேலை பார்க்கிறான் போன்ற விவரங்களை அவளும் தெரிந்து கொண்டார்கள்.

"ரொம்ப தாங்க்ஸ்" — என்று கண்ணைக் கலக் கூறி ஆபீஸ் முன் இறங்கிக் கொண்டவள், சாயங்காலமும் ஆட்டோவில் வந்து கூட்டிச் செல்வதாக மாதவன் கூறியதை மறுக்காமல் ஏற்றுக் கொள்ள, உற்சாகத்தோடு ஜனித்த அவர்களின் அறிமுகம், மளமளவென அடுத்து வந்த வாரங்களில் செழித்து வேர்விட்டு வளர்ந்து, மாதங்கள் மூன்று முழுசாய் முடிவதற்குள், அலுவலகத்துக்கு லீவு போட்டுவிட்டு ஸஃபையர் தியேட்டரில் மதிய ஆட்டத்துக்குச் சென்று, இருட்டில் ஒருவர் கையை ஒருவர் பற்றியபடி மெய்மறந்து உட்காருவதில் வந்து நின்றது.

(தொடரும்)



• இரட்டைச் சகோதரர்கள்

நூற்றாண்டுச் சிறப்பு:

அபூர்வ சகோதரர்களின் ஆச்சர்ய வாழ்க்கை!

ஆற்காட்டின் அற்புத இரட்டையர்கள் என்று ஆற்றலிலும், சகோதர பாசத்திலும் புகழ்பெற்றவர்கள் டாக்டர் ஏ. ராமசாமி முதலியாரும், டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியாரும்.

இரண்டு பேரும் எஸ். எஸ். எல். சி. படிக்கும் போதே — தேர்வுக்குப் பத்தே நாட்களுக்கு முன் அவர்களுடைய தந்தை குப்புசாமி முதலியார் காலமானார். பிள்ளைகளின் படிப்புக்காக என்று அவர் எந்த வங்கியில் பணம் போட்டு வைத்திருந்தாரோ அந்த வங்கி திவாலாகி விட்டது! அர்பத் நாட் வங்கி மூழ்கியதில் பாதிக்கப்பட்ட இந்த ஆற்காடு இரட்டையர்கள், ஆந்திர மாநிலத்துக் கர்நூல் வீட்டை விற்றுவிட்டுப் பணத்தை எடுத்துக் கொண்டு சென்னைக்கு வந்தார்கள்.

இன்றைய பாரிமுனைப் பகுதியில் அப்போது இருந்த கிறிஸ்தவக் கல்லூரியில் சேர்ந்து படித்தார்கள். அந்தக் காலத்து எம். ஏ. படிப்பு... அப்புறம் இராமசாமி சட்டம் படிக்க... லட்சுமணசாமி மருத்துவம் படிக்க என்று இனை பிரிந்தார்கள்.

தேசபந்து ஸி. ஆர். தாஸ் சென்னைக்கு வந்திருக்கிறார் என்ற தகவல் கிடைத்தது. சகோதரர்களுக்குப் பெருத்த உற்சாகம். ஸி. ஆர். தாஸின் பேச்சைக் கேட்க வேண்டும் என்கிற ஆர்வ வெறி. அதை விட முக்கியம், கடற்கரையில் நடக்கவிருக்கிற பொதுக் கூட்டத்தைப் பற்றி எப்படி மக்களுக்கு அறியப் பண்ணுவது? பத்திரிகைகளில் சரியாய்ச் செய்தி வராது என்கிற சூழ்நிலை, அன்று.

சகோதரர்களும் நண்பர்களும் சேர்ந்து யோசித்து, நீண்ட மூங்கில் ஒன்றை எடுத்துக் கொண்டு கல்லூரி மாடிக்குப் போய், அதில் தீவட்டி மாதிரி துணிகளைச் சுற்றி, மண்ணெண்ணெயில் நனைத்து எரிய விட்டார்கள்.

சற்றைக்கெல்லாம் கல்லூரி தீப்பிடித்து எரிகிறதோ என்று பார்க்க ஏராளமான மக்கள் வாசலில் கூடி விட்டார்கள். உடனே ஸி. ஆர். தாஸ் வருகிறார்; பொதுக் கூட்டத்தில் பேசுகிறார் என்று அவர்களுக்கு அறிவித்தார்கள் அந்தச் சாதுப் பிள்ளைகள்!

வார்டனாக இருந்த ஸ்கின்னருக்கு இந்தப் பிள்ளைகளின் திறமையின் மீது அபார மதிப்பு உண்டு. ஆனாலும் இது அடாத செயல் என்று கண்டித்தார்.

ஏ. எல். முதலியாருக்கு முதன் முதலில் கிடைத்த வேலை பழநி நகரில்தான். நகர ஷெட்டில் ஆஸ்பத்திரி. காலை ஏழு மணி முதல் மாலை ஆறு மணி வரை காலராத் தடுப்பு ஊசி போடவே நேரம் சரியாக இருக்கும். தினமும் நூறு, நூற்றைம்பது ஊசிகள் போட வேண்டியிருந்த கொடுமையான காலம் அது. முதலியார் தங்கியிருந்தது திண்டுக்கல்லில் ஓர் அறையில்! தினமும் காலை மூன்றரை மணிக்கு மாட்டு வண்டியில் புறப்பட்டு வயல்காட்டுப் பாதையில் பழனிக்கு வருவார். ஒரு சைக்கிள் வாங்கிய



கல்கத்தா பாராபஜாரில் உள்ள சூடப் பட்டியை 'இந்தியாவின் சூதுக் கிடங்கு' என்கிறார்கள். இன்று மழை வருமா என்பது முதல், விம்பிள்டனில் யார் ஜெயிப்பார்கள் என்பது வரை இங்கு 'பெட்' கட்டுகிறார்கள். சமீபத்திய சூதாட்டப் பந்தயங்கள் முழுவதும் கிரிக்கெட்டைப் பற்றியே!

— லதா.

பின்னர் இந்த இருபது மைல் தூரத்தையும் சைக்கிளிலேயே சென்று திரும்புவார். அவருடைய குறி நேரம் தவறாமை. ஒரு வருடம் இப்படி வேலை பார்த்துவிட்டு, அப்புறம் மதுரை வாசம். அங்கு ப்ளேக் தடுப்பு ஊசி போடுவதே முக்கிய காரியம். அது ஒரு வருடம். அப்புறம்தான் சென்னை வாசம். ராஜா சர் இராமசாமி முதலியார் பிரசவ ஆஸ்பத்திரியில் வேலை கிடைத்தது.

சென்னை மருத்துவக் கல்லூரி முதல்வராக நியமிக்கப்பட்ட முதல் இந்தியர் டாக்டர் ஏ. எல். முதலியார்தான். ஆண்டுதோறும் மிகச் சிறந்த மாணவர்களுக்குப் பரிசு வழங்க, பேராசிரியர்கள் அடங்கிய கல்லூரிக் குழுதான் கூடி முடிவெடுக்க வேண்டும். இந்தியரான ஏ. எல். முதலியார் கூட்டிய கல்லூரிக் குழுக் கூட்டத்தை மூன்று ஆங்கிலப் பேராசிரியர்கள் புறக்கணித்தார்கள். உடனடியாக சர்ஜன் ஜெனரலுக்குத் தெரிவித்தார் ஏ. எல். முதலியார். அசாத்தியக் கோபம் வந்தது சர்ஜன் ஜெனரலுக்கு. உடனே மூன்று பேரையும் கூப்பிட்டு 'இந்திய' முதல்வரிடம் மன்னிப்புக் கேட்கச் சொன்னார்!

எடின்பரோ பல்கலைக் கழகத்தில் எம். ஆர். ஸி. பி. பட்டம் பெறுவதற்காக ஓராண்டுப் படிப்பு முடித்தார். தேர்வுக்குப் பத்து நாட்கள் இருந்த போது ஏ. எல். முதலியார் தேர்வு எழுத முடியாத நிலை உருவானது. காரணம் அவர் எல். எம். அண்டு எஸ். என்ற குறைந்த படிப்பே முடித்திருந்தார். அப்புறம் ஐந்து ஆண்டுகள் படித்து எம். டி. யும் வாங்கிவிட்டார். ஆனாலும், எம். பி. பி. எஸ். பட்டம் அடிப்படையாக வேண்டும் என்று சொல்லித் தேர்வு எழுத விடாமல் தடுத்து விட்டார்கள். கட்டியதேர்வுப்பணம்திருப்பித்தரப்பட்டது.

பல ஆண்டுகள் கழித்து, அறுபதுகளில், அதே எடின்பரோ பல்கலைக் கழகம், முதலியாருக்குக் கௌரவ எஃப். ஆர். ஸி. பி. வழங்கியது சுவாரசியமானது.

'சுதந்திரம் பெற்ற மறு ஆண்டில் ஹைதராபாத் பிரச்னை வகுப்புக் கலவரமாக உருவெடுத்தது. ஐ. நா. சபையில் இந்தியத் தரப்பில் வாதாட அனுப்பப்பட்டவர் ஸர். ஏ. இராமசாமி முதலியார்தான். சுதேச சமஸ்தான இணைப்புக்கு ஒப்புக் கொள்ளாததால் ஹைதராபாத் மீது ராணுவ நடவடிக்கை எடுக்கப்பட்டதாக இந்தியா மீது புகார். "அது ராணுவ நடவடிக்கை இல்லை. அமைதியை நிலைநாட்டவும், பொது மக்கள் இரத்தம் சிந்துவதைத் தடுக்கவும் எடுக்கப்பட்ட போலீஸ் நடவடிக்கைதான்" என்று வாதிட்டு வெற்றி பெற்றார்.

அமெரிக்காவில் மாஸசூஸெட்ஸ் தொழில் நுட்ப அறிவியல் கழகத்தின் மூந்நூறாவது ஆண்டு விழா 1948 இல் நடைபெற்ற போது சிறப்புப் பேச்சாளர்கள் மூவர். ஆட்லி, ஸர் வின்ஸ்டன் சர்ச்சில், ஏ. ஆர். முதலியார். அன்றைக்கு இராமசாமி முதலியாருக்குப் பேச அதிக நேரம் தருமாறு கேட்டுக் கொண்டார் சர்ச்சில். இந்தியப் போர் வீரர்களின் உதவி இல்லாவிட்டால் ஹிட்லரின் படைகளை முறியடித்திருக்க முடியாது என்பது பற்றிப் பெருமையோடு பேசிப் பாராட்டுப் பெற்றார் முதலியார்.

இரட்டைப் பிறவிகளின் உணர்வுகளைப் பற்றிக் கதைகளில் நிறையப் படித்திருக்கிறோம். நிஜ வாழ்க்கையில் ஆற்காடு இரட்டையர்கள் அதை அனுபவித்திருக்கிறார்கள். எந்த உடல் நலக் குறைவானாலும், இருவருக்கும் ஒரே மாதிரியாக இரண்டு ஆண்டுகள் இடைவெளியில் ஏற்பட்டது. பெரியவருக்குச் செய்யப்பட்டது போன்ற அதே சர்ஜரி, சரியாக இரண்டாவது ஆண்டில் சின்னவருக்கும் செய்யப்பட்டது. அதுமட்டுமில்லை. கடைசிக் காலம் கூட அப்படித்தான். ஏ. ஆர். முதலியார் காலமானது 1976 ல். ஏ. எல். முதலியார் காலமானது 1974 ல்.

இருபத்து ஏழு ஆண்டுகள் சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராக விளங்கியவர் டாக்டர் ஏ. எல்.. அதிலும் முதல் பத்து ஆண்டுகள் காலையில் டாக்டர், பிற்பகல் துணை வேந்தர் என்ற இரட்டைப் பணி. கடைசி வரை அயராமல், உழைத்தவர் அவர்.

— டாக்டர் ஏ. வேணுகோபால்

அவர்களுடன் உரையாடித் தொகுத்தவர்:

'சுப்ர பாலன்'

பரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிட்டவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.

நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: 431543, 434157.

ஆசிரியர் குழு அலுவலகம்: 28, ஐந்தாவது தெரு, ஏரி வட்டம், நுங்கம்பாக்கம், சென்னை — 600 034. போன்: 473369.

ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 104/-; வெளி நாடு: கப்பல் தபால் ரூ. 280/-; விமானத் தபால் ரூ. 680/-.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 52/-; வெளி நாடு: கப்பல் தபால் ரூ. 140/-; விமானத் தபால் ரூ. 340/-.



இப்போது!

கேர்ஃப்ரீ

டியோடரன்ட்

ஸேனிட்டரி நேப்கின்கள்

முழுப் பாதுகாப்புடன் கூட,
வாடை நீக்கிய
புத்துணர்வுக்கு

கேர்ஃப்ரீ டியோடரன்ட் ஸேனிட்டரி நேப்கின்கள், மாதவிடாயின் வாடையைக் குறைத்து உதவி, சுத்தம் கமழும் புத்துணர்வோடு வைக்கிறது உங்களை.

கேர்ஃப்ரீ டியோடரன்ட் உங்களைப் பாதுகாப்பதோடு புத்துணர்ச்சி பொலியவும் செய்கிறது.



கேர்ஃப்ரீ டியோடரன்ட் ... உங்களுக்கு மிகவும் தேவைப்படும் நேரங்களிலே புத்துணர்வு

ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன்

சென்னை, டெல்லி நகரங்களில் மட்டுமே கிடைக்கும்.

OBM/1253/TAM